தமிழ் வாழ்க

தாமரை வெளியீடு 1.

# கரந்தைக் கோவை

[செய்யுளும் - குறிப்புரையும்]

ஆசிரியர் :

**வித்துவான் ச. பாலசுந்தரம்**

விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

மகாலிங்கம் பதிப்பகம்

1321, தெற்கலங்கம், தஞ்சாவூர்.

முதற் பதிப்பு தமிழ்ப் பொழில் தொகுப்பு (1954-1956)

(திருந்திய) இரண்டாம் பதிப்பு 1965

விலை : 1—75

திருத்தம் :

| பாடல் | வரி | திருத்தம் |
|---|---|---|
| 35 | 1 | அரசுசெயும் |
| 63 ஈ | 1 | பாவலர் |
| 179 | 4 | தெளிவாக்கும் |
| 218 | 2 | ஆளலர்போல் |

# அணிந்துரை

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,
உரைமொழியாளர் (Reader) தமிழாராய்ச்சித்துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அன்பும் அறிவும் நிரம்பிய இன்ப வொழுக்கமாகிய இல் வாழ்க்கை இயல்பினை ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரது வாழ்க்கையில் வைத்து விளக்குவது கோவை என்னும் செந்தமிழ்ப் பனுவலாகும்.

பல பிறவிகள் தோறும் கணவனும் மனைவியுமாய் ஒன்றி வாழ்ந்தமையால் நிரம்பிய அன்புடையார் இருவர், வேறு வேறு இடங்களிற் பிறந்து வளர்ந்தனராயினும் அவ்விருவரும் நல்லூழால் ஓரிடத்து எதிர்ப்பட்டு நெஞ்சங் கலந்து உயிரொத்த காதலர்களாவர். இங்ஙனம் ஒருவரையொருவர் முன் அறியாத நிலையிற் காணும் முதற் காட்சியிலேயே தொன்மையன்பின் தொடர்புணர்ந்து கணவனும் மனைவியுமாக ஒருவரை யொருவர் இன்றியமையா தொழுகும் இயல்புடையார் உலகத்து மிகவும் அரியராதலால் உலகில் அருமையுடையராய்த் தோன்றிய இவர்களை அன்பிற் சிறந்த தலைமக்கள் எனப் பண்டைத் தமிழியல் நூலார் பாராட்டிப் போற்றினர். மேற்குறித்த தலைமக்கள் வாழ்வில் மிக்குத் தோன்றும் பேரன்பின் செயலை எடுத்துரைக்கும் முகமாக ஏனைப் பொது மக்கள் வாழ்விற் காணப்படும் ஒருபாற் காமத்தையும் ஒவ்வாக் காமத்தையும் விலக்கி ஒத்த காமமாகிய அன்பு நெறியிலே அவர்களைப் பயிற்றுதல் எளிதாம் எனக் கருதினர். இக்கருத்தினாலேயே ஒத்த அன்பினராய தலைமக்களது வாழ்க்கையினைப் பொருளாகக்கொண்டு பண்டைத் தமிழ்ச் சான்றோர்களால் அகத்திணைச் செய்யுட்கள் மிகுதியாகப் பாடப் பெறுவனவாயின.

அன்பிற் சிறந்த தலைமக்களது இன்ப ஒழுகலாறுகள் எனத் தொல்காப்பியத்திலும் சங்கத் தொகை நூல்களிலும் தனித் தனித் துறைகளாகக் குறிக்கப்பட்ட அகத்துறைகளை

யெல்லாம் தெய்வம் கூட்ட ஒருவரை யொருவர் கண்டது முதல் உலகத்தாரறிய மணஞ் செய்துகொண்டு ஊடியும் கூடியும் மகிழ்தல் ஈருக ஒரு கோவைப்படத் தொகுத்துக் கட்டளைக் கலித்துறைச் செய்யுளால், கூற்றும் மாற்றமும் அமைய நாடகம் போன்று இயற்றப்பெறுவது கோவை என்னும் பிரபந்தமாகும்.

ஒத்த அன்பினராகிய தலைமக்களது உள்ளத்து உயர்ச்சியைப் புலப்படுத்தும் அகனைந்திணை யொழுகலாறுகளைப் பொது மக்களும் தெளிவாக வுணர்ந்து போற்றும்வண்ணம் இவ்வாறு கட்டளைக் கலித்துறை யாப்பினுல் கோவையாகப் பாடும் மரபு இறையனுர் களவியலை அடியொற்றிக் கி. பி. ஏழாம் நூற்ருண்டளவில் தோன்றியதெனத் தெரிகிறது. இவ்வாறு இறையனுர் களவியலை அடியொற்றியமைந்த கோவைகளுள் பாண்டியன் அரிகேசரியைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு பாடப் பெற்ற பாண்டிக் கோவையும் தில்லைச் சிற்றம்பலவனுகிய இறைவனைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு திருவாதவூரடிகளார் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவையும் மிகவும் தொன்மைவாய்ந்தனவாகும். இறையனுர் களவியலுரையில் அகத்துறைகளுக்கு மேற்கோளாகக் காட்டப்பெற்ற கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் முந்நூற்றிருபத்தாறும் பாண்டிக் கோவை என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன. இவற்றுள் ஒரு சில துறைகளுக்கு இரண்டு மூன்று பாடல்களும் அமைந்திருத்தலால் களவியலுரையிற் காட்டப்பெற்ற பாண்டிக் கோவையில் வந்துள்ள அகத்துறைகள் முந்நூற்றிற்கும் உட்பட்டனவாகவே உள்ளன.

அகனைந்திணைத் துறைகளை நானூறு என்னும் வரையறைக்கு உட்படுத்து நானூறு செய்யுட்களால் முதன் முதற் கோவை பாடிய அருளாசிரியர் திருவாதவூரடிகளேயாவர். திருவாதவூரடிகள் அகத்திணைத் துறைகளை யெல்லாம் நானூறு என்னும் இவ்வரையறைகளுள் அடக்கி நானூறு செய்யுட்களால் ஒரு கோவை பாடுதற்குக் குறுந்தொகை நானூறு, நெடுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு என வழங்கும் பழைய சங்கத் தொகை நூல்களின் செய்யுட்டொகையே அடிப்படையாக அமைந்திருத்தல் கூடும்.

தஞ்சைவாணன் கோவை முதலிய பிற்காலக் கோவைகளிற் பெரும்பாலன நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருளிலக்கணத்தை அடியொற்றியமைந்தனவாகும்.

இப்பொழுது வெளிவரும் **கரந்தைக் கோவை** என்னும் இந்நூல் தஞ்சையையடுத்த கருந்திட்டைக்குடி ஆகிய கரந்தையில் நிறுவப்பெற்றுள்ள தமிழ்ச் சங்கத்தைச் சிறப்பித்துப் போற்றும் முறையில் அமைந்த அகப்பொருட் கோவையாகும். இதனைப் பாடியவர் கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியராகத் தமிழ்த் தொண்டு புரியும் திருவாளர் வித்துவான் ச. பாலசுந்தரம் ஆவர்.

கரந்தை என்பது, கருந்திட்டைக்குடி என்பதன் மரூஉவாகும். இவ்வூர், தஞ்சை நகரத்தின் வடபால் வடவாற்றிற்கும் வெண்ணாற்றிற்கும் நடுவில் அமைந்தது; திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறித்துப் போற்றப்பெற்ற வைப்புத் தலமாக விளங்குவது. இவ்வூரில் தமிழ் வளர்ச்சி கருதி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தம்பியார் இராதாகிருட்டின பிள்ளை அவர்களது நன்முயற்சியால் நிறுவப்பெற்ற சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். கரந்தை என்னும் ஊர்ப் பெயர், அவ்வூரில் நிறுவப்பெற்றுள்ள தமிழ்ச் சங்கத்தினையும் குறிப்பதாயிற்று. ஆகவே கரந்தைக் கோவை என்பது, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொண்டினையும் தமிழ் வளர்ச்சியினையும், தமிழ் மொழியின் சிறப்பினையும், அச்சிறப்பிற்குக் காரணமாக அமைந்த வள்ளல்கள், அறிஞர்கள் முதலானோர் தொண்டின் திறத்தையும் போற்றிப் புகழும் நோக்குடன் இயற்றப்பெற்ற அகப்பொருட் கோவை ஆதலின் இந்நூல் "கரந்தைக் கோவை" என்னும் பெயர் உடையதாயிற்று. இக் கோவை நம்பியகப்பொருளிலக்கணத்தை மேற்கொண்டு அதன் இலக்கியமாக அமைந்த தஞ்சைவாணன் கோவையினை முன் மாதிரியாக வைத்து 425 துறைகளை உடையதாக இயற்றப்பெற்றதாகும். சில துறைகட்கு இரண்டு மூன்று பாடல்களிருத்தலின் 469 செய்யுட்கள் உள. இந்நூலில் முதற்கண் தமிழ் வாழ்த்தாக ஒரு கட்டளைக் கலித்துறையும் முடிவில் தமிழ்ச் சங்க வாழ்த்தாக ஒரு வெண்பாவும் அமைந்துள்ளன.

அகப்பொருட் கோவை நூல்கள் பாட்டுடைத் தலைவனது ஊரைச் சார்ந்தும் அவனுடைய பெயரைச் சார்ந்தும் அவனது குடிமரபைச் சார்ந்தும் பெயர் பெறுதல் இயல்பு. திருச்சிற்றம்பலக் கோவை, திருவாரூர்க்கோவை என்பன ஊராற்பெற்ற பெயர்; குலோத்துங்க சோழன் கோவை, தஞ்சை வாணன் கோவை என்பன பாட்டுடைத் தலைவன் பெயரால் வழங்குவன. பாண்டிக் கோவை என்பது மரபாற் பெற்ற பெயர். அகப்பொருட் கோவைகளில் அகப் பொருள் ஒழுகலாற்றுக்குரியவனைப் புனைந்துரைக்கப்படும் தலைவன் கிளவித் தலைவன் எனப்படுவான்; அவனை இயற்பெயரால் கூறுது வெற்பன், நாடன் எனத் திணை நிலப் பெயர்களால் கூறுதல் மரபு. கோவை நூலிற் பாடல்தோறும் இயற் பெயரால் புகழப்படும் தலைவன் பாட்டுடைத் தலைவன் ஆவான். கரந்தைக் கோவையாகிய இந்நூலில் பாட்டுடைத் தலைவன் என்ற முறையால் பாடல் தோறும் குறித்துப் பாராட்டுதற்குரிய தலைவராக ஒருவரைக் குறிப்பிடும் நிலை இல்லாது போயினும், தன்னலம் கருதாது தமிழ்ப்பணி புரிந்த தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, இராதாகிருட்டின பிள்ளை, ஐ. குமாரசாமிப் பிள்ளை முதலிய தமிழ் அன்னையின் தவப்புதல்வர்களும், நாவலர் வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை முதலிய புலவர் பெருமக்களும் இடையிடையே பாராட்டிப் போற்றப் பெற்றுள்ளனர்.

இக்கோவையிற் பாடல் தோறும் போற்றப்படும் சிறப்பு தமிழ் நிலை பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கே உரியதாக அமைந்துள்ளது. எனவே இக்கோவை தமிழ்த் தெய்வத்தையும் அத்தெய்வம் நிலைபெற்றுள்ள கோயிலாகத் திகழும் தமிழ்ச் சங்கத்தினையும் சிறப்பித்துப் போற்றும் முறையில் அமைந்துளது.

எல்லாம் வல்ல இறைவனைப் போற்ற எண்ணிய திருவாதவூரடிகள் அம்முதல்வன் அருட் கூத்தியற்றும் மன்றமாகிய திருச்சிற்றம்பலத்தைச் சிறப்பிக்கும் முறையில் திருச்சிற்றம்பலக் கோவையினை மணிவாசகர் பாடியருளியது போன்று, தமிழ்த் தெய்வத்தைப் போற்றிப் புகழ எண்ணிய இந்நூலாசிரியர் தமிழ் நிலைபெற்றுயரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச்

சிறப்பித்துப் பாராட்டும் முறையில் இக்கோவையினை அமைத்துள்ளார்.

அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றினை விரித்துரைக்கும் இக்கோவையில், தமிழின் சிறப்பும், தமிழ் வளர்ச்சிக்கென நிறுவப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழும் தமிழ்த் தொண்டுகளும், சங்கத்தை நிறுவிப் போற்றி வளர்த்த தமிழ்ப் பெருமக்கள் மாண்பும், சங்கத்திலும் புலவர் கல்லூரியிலும் அமர்ந்து புலமைப் பணி யாற்றிய புலவர் பெருமக்களது புலமைத் திறமும், புலவர் கல்லூரியிற் பயிலும் மாணவர்களின் கல்வியறிவு ஒழுக்கங்கள் ஆகியவற்றின் சிறப்பும் சுவைபெற விரித்துரைக்கப்பெற்றுள்ளன.

இந்நூலில் பாடல்தொறும் தமிழ் மொழியைச் சிறப்பிக்கும் வகையில் அமைந்த தொடர்கள், அம்மொழியின் தொன்மை, தனித்தியங்கும் தன்மை, எளிமை, இனிமை, ஒண்மை, தூய்மை, கலைவளம், தெய்வத் திறம், சொல் வளம், அறிவூற்றம், நூற் பெருக்கம் முதலிய நலங்களெல்லாம் கற்போர் உளங்கொண்டு உவந்து போற்றும் நிலையில் அமைந்துள்ளன. தமிழின் சிறப்புரைக்கும் நிலையில் இக்கோவையில் அமைந்த தொடர்கள் "ஆயுந்தொறும் இன்பந் தரும் தமிழ்" எனக் கச்சியப்ப முனிவர் அறிவுறுத்திய தமிழின் இனிமைக்கும் "இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர் விருந் தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" எனத் தமிழ்விடு தூது ஆசிரியர் நெஞ்சம் நெக்குருகிக் கூறிய அனுபவ மொழிக்கும் அமைந்த நல்ல விளக்கங்களாக உள்ளன.

இந்நூலில் தமிழ்ச் சங்கத்தைச் சிறப்பிக்கும் முறையில் அமைந்த தொடர்கள் சங்கத்தின் கல்வித் தொண்டினையும் கலை வளத்தினையும் விருந்தாய நூல்கள் பல இயற்றவல்ல புலவர் பலர் குழுமியிருந்து தமிழ்ப் பணி புரியும் திறத்தினையும், சங்கத்தின் சார்பில் நிகழும் புலவர் கல்லூரியிற் புகழ்மிக்க ஆசிரியர்கள் தமிழின் அரும்பொருள்களை மாணாக்கர்களுக்குத் தெளிவாக அறிவுறுத்தும் திறத்தினையும் அக்கல்லூரியிற் பயிலும் மாணவர்கள், தமிழ் நூல்களைக் கசடறக் கற்றுணர்வதுடன் தாம் கற்றுணர்ந்த கல்விக்குத்தகத் தமிழர் ஒழுகலாற்றிற் பிறழாது ஒழுகும் நல்ல குறிக்கோள் உடையவர்களாக விளங்கு

தலையும் அறிவுறுத்துவன. 'கல்லார் இலாக் குறை காணுங் கரந்தை. (8). 'சார்ந்தாரை ஞானந் தழுவும் கரந்தை. (11). "நாடும் மொழியும் நம் கண்ணெனப் போற்றி நவைதவிரப், பாடும் புலவர்கள் கூடும் 'கரந்தை' (22) உரையோடு இலக் கணத் துண்மை பரப்பும், உயர்ந்த பரம்பரையோடு இலங்குநற் பண்பார் கரந்தை" (238). "செயிற்றியம் சீர்குண நூல் முதலாயவை சென்றிடினும் பயிற்றிய முத்தமிழ் செய்வார் கரந்தை" (343). என்றுங்கு வரும் தொடர்கள், சங்கத்திலும் புலவர் கல்லூரியிலும் நிகழும் உண்மையான தமிழ்த் தொண்டுகளை விரித்துரைப்பனவாகும்.

கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ் பயின்று அக்கல் லூரிப் பேராசிரியர்க்குள் ஒருவராகத் திகழும் இந்நூலாசிரியர், தமக்குத் தமிழ் அறிவுறுத்திப் புலமை வளம் நல்கிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொண்டுகளை உளம் உவந்து போற்றும் நிலையில் இக்கோவையினை இயற்றியிருப்பது அறிஞர்களாற் பாராட்டத்தக்க நற்பணியாகும். சங்கத்தைப் போற்றும் கருத் துடைய இப்புலவர், அவ்வப்பொழுது அச்சங்கத்திற்கு வந்து பொருளுரை வழங்கியும் நூல் அரங்கேற்றியும் தமிழ்ப் பணி புரிந்த புலவர் பெருமக்களையும் மறந்துவிடவில்லை. 'நிலந் தேர்ந்துயர்ந்த நிறைதவத்தோர் புகழ்நீள் கரந்தை" (18) என்ற தொடர், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பணியில் பெரு விருப்புடையராய், அச்சங்கத் தலைவராகிய தமிழவேள் அவர்க ளது தமிழ்த் தொண்டினைப் போற்றிப் பாராட்டும் அருள் உள்ளம் உடையவராய், நிறைதவச் செல்வராய் விளங்கிச் சங்கத்தின் வெள்ளி விழாவில் தலைமை தாங்கிச் சிறப்பித்த அருள்மிகு ஞானியார் அடிகளை நினைவு கூரும் நிலையில் அமைந்திருத்தல் கூர்ந்துணரத்தக்கதாகும்.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய அருள்மிகு விபுலாநந்த அடிகளார் தாம் பல்லாண்டுகளாக நுண்ணிதின் ஆராய்ந்து இயற்றிய யாழ் நூல் ஆகிய இசைத் தமிழ் நூலைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் வெளியிட்ட சிறப்புடைச் செய்தியை "ஈடும் எடுப்புமில் யாழ்நூல் அளித்திங் கிசை வளர்த்து, நீடுங் கரந்தை" (160) என வரும் தொடரில் இந்நூலாசிரியர் போற்றியிருத்தலும் புலவர் கல்லூரித் தலைவர் நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்களும் கரந்தைக்

கவியரசர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் சேர்ந்து நெடுந் தொகையாகிய அகநானூற்றிற்குச் சிறந்ததோர் உரை எழுதி உதவிய திறத்தினை "நெடுந்தொகைப் பாக்களுக்கு உரை சொன்னார் கரந்தை" (365) என்ற தொடரில் குறிப்பிட்டிருத்தலும், "நாவலர் வேங்கடசாமி நாட்டாரின் நலங்கமழ் நூல் பாவலர் சோலைக் கரந்தை" (166) எனவும், "மோனைக் கவியரசானவர் தொண்டு முகிழ் கரந்தை" (51) எனவும் கேட்பவரைத் தட்டியெழுப்புங் கவிவாழ் கரந்தை (119) எனவும் அவ்விரு பேராசிரியர்களைப் போற்றியிருத்தலும் இந்நூலாசிரியர் சங்கத்தின் வரலாறு பற்றிய நிகழ்ச்சிகளைத் தம் நூலில் மறவாது போற்றும் விருப்பம் உடையவர் ஆதலை புலப்படுத்துவனவாம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய இராதாகிருட்டின பிள்ளையவர்களையும் சங்கத் தலைவராயமர்ந்து அதனைப் பேணி வளர்த்த தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்களையும் சங்கத் தொண்டுகளிற் கலந்துகொண்டு ஆக்கம் நல்கிய சங்கப் பேரன்பர் அரித்துவாரமங்கலம் இராசகோபால ரகுநாத ராசாளியார் அவர்களையும், தமிழவேள் மறைந்தபின்னர் முறையே சங்கத் தலைவராயமர்ந்து தமிழ்த் தொண்டாற்றிய இராவ்சாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை, இராவ்சாகிபு ஆ. யா. அருளானந்தசாமி நாடார் ஆகிய பெருமக்களையும் இவர்கள் காலத்தில் எல்லாம் சங்கத்தின் அமைச்சராயமர்ந்து தமிழ்ப்பணி புரிந்த செந்தமிழ்த் திருவாளர் நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களையும்

" அரும் புகழ்மிக்கவி ராதாகிருட்டின ஆண்டகையால்
வரும் புகழ் சங்கக் கரந்தை " (48)

" தாங்குந் தமிழவேளின் புகழ்போல் வளர் சங்கமுற
ஓங்குங் கரந்தை " (77)

" பராவுறு பாவலர் போற்றிசெய் பைந்தமிழ்ப் பண்புறுசீர்
இராசகோ பால ரகுநாத ராசாளி யார்வளர்க்க
விராவுறு முத்தமிழ் மேவுங் கரந்தை " (63)

" ஐசேர் குமரசாமித் தகை தொண்டால் அருள் சிறக்கும்
மெய்சேர் தமிழ்க் கரந்தை " (109)

'' சத்தியம் போற்றும் ஆ.யா, அருளானந்த சாமிஎனும்
முத்தமிழ் வள்ளல் தொண்டேற்குங் கரந்தை '' (131)

'' ஆகந் தழைத்தென தாருயிர் வாழ அருந்தமிழ்கூர்
நீ. கந்தசாமியின் தொண்டால் நிறைசங்கம்
நேர்கரந்தை'' (58)

என வரும் தொடர்களில் இந்நூலாசிரியர் முறையே புகழ்ந்து போற்றியுள்ளமை காணலாம்.

தலைமகன் தனக்குற்றதுரைப்பக் கேட்ட பாங்கன் 'நீ ஒரு பெண்ணிடத்துக் கொண்ட மையலால் உடலும் உள்ளமும் வாடி வருந்துவது. அறிவு நூல்களைக் கற்றுணர்ந்த நினது பெருந்தன்மைக்கு இழுக்காகும்' என இடித்துரைக்கும் முறையில் அமைந்தது. ''கற்றறி பாங்கன் கழறல்'' என்னுந் துறையாகும். இத்துறையில் அமைந்தது.

''செல்வன் உமாமகேசன் மனத்தூன்றித் திகழ்கரந்தைச்
சொல்வன் புலவர்கல் லூரியிற் கற்ற துணிவுடைய
செல்வன் எனத் தெளிந் தேனொரு மங்கையின்
சேல்விழிசேர்
வில்வன்மை யாலழிந் தாயுரன் என்னே விளம்புவதே''(42)

என வரும் இக்கோவைச் செய்யுளாகும். ஒருநெறிய மனம் வாய்ந்த உரனுடைய செந்தமிழ்ச் செல்வனாகிய உமாமகேசுவரன் உள்ளத்திலே தோன்றிக் கரந்தையிலே உருப் பெற்று விளங்கும் சொல் வன்மையிற் சிறந்த கல்வி நிலையமாகிய புலவர் கல்லூரியிற் பயின்ற கல்விச் செல்வமுடைய தலைவன் நீ ஆவாய் எனத் தெளிவாக எண்ணியிருந்தேன். புலன் வழிப்படராத உரனுடையுள்ளத்தினனாகிய நீயும் ஒரு பெண்ணின் நோக்கினால் மையலுற்று நெஞ்சத் திண்மையாகிய நிறையழிந்தனை என்றால் நினக்கு என்னாற் சொல்லத் தக்க அறிவுரையாதுளது?' எனப் பாங்கன் தலைவனை இடித் துரைக்கும் நிலையில் இச்செய்யுள் அமைந்திருத்தல் காணலாம். இதனால் புலன் வழிப் படரா நன்புலச் செல்வராகிய உமாமகேசுவரம் பிள்ளையவர்களது நிறையுடைமை முதலிய நற்பண்புகளும், அவர்கள் உள்ளத்தே முகிழ்த்தெழுந்து கரந்தையில் உருப்பெற்று வளர்ந்த புலவர் கல்லூரியிற்

பயிலும் மாணவர்கள் தமிழவேள் அவர்களைப் போன்றே உரனுடையுள்ளத்தராய், நல்லொழுக்க நெறியில் வழுவாது திகழ்தல் வேண்டும் என்னும் பெருவேட்கையும் இனிது புலனுதல் காணலாம்.

நீ வரையாது வந்தொழுகுவதனுல் தலைமகள் தனக்குண்டாகிய துயரத்தைப் புறத்தார்க்குப் புலப்படாமல் மறைத்ததேயன்றித் தன் இன்னுயிர்ப் பாங்கியாகிய எனக்கும் புலனுகாது மறைத்தாள்' எனத் தலைமகளின் பேரறிவினைத்தோழி தலைவனுக்கு அறிவுறுத்துவதாக அமைந்தது,

" அருங்குணத்தாற் புகழ்வேண்டாக் கணபதி ஆற்றியதொண்
டொருங்கெழுசீர் கரந்தைத்தமிழ் ஓதிய வொண்மையினுல்
மருங்கெழுதோழியர் போலெனக்குந் தன் மனத்துயரைப்
பெருங்குணத்தோய் மறைத்தாளவள் பெற்றியென்
பேசுவனே " (235)

எனவரும் செய்யுளாகும். பெறலரும் நற்குணங்களுடையராய்த், தமிழவேளவர்களது பாராட்டுக்குரிய சங்கப் பேரன்பராய், என்றும் புகழை விரும்பாது தமிழ்ப்பணியொன்றே தமது கடமையெனக்கொண்டு பல ஆண்டுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களின் தாளாளராக இருந்து ஆரவாரமின்றிப் பெரும்பணிபுரிந்த செந்தமிழ்ச் சான்ரேர் அ. கணபதிப்பிள்ளையவர்கள் என்பதும், அற்றமறைக்கும் பெற்றியராகிய அவர்தம் சீர்த்தியும், அவர்களது தமிழ்த் தொண்டினுல் இத் தமிழ்ச் சங்கம் சீர்பெற வளர்ந்த திறமும் இச் செய்யுளில் நன்கு விளக்கப்பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும்.

அன்பர்கள் தவறுசெய்யின் அவற்றைத் தாம் செய்தனவாகவே கொள்வதுடன் அத் தவறுகாரணமாகத் தமக்குண்டாகிய துயரத்தைக் கெழுதகை நண்பரிடத்தும் புலப்படுத்தாது மறைக்கும் ஒண்மையுள்ளத்தராகிய கணபதிப்பிள்ளையவர்களைப் போன்று ஒண்டமிழ் ஓதியவளாகிய இத் தலைவியும், தன் நெஞ்சத்துயரினை இன்னுயிர்ப் பாங்கியாகிய எனக்கும் புலப்படாது மறைக்கவல்ல பேரறிவுடையவள் எனத் தோழி தலைவியின் பேரறிவினை வியந்துரைப்பதாக இச் செய்யுளைப்பாடிய ஆசிரியரது புலமைத்திறம் வியந்து பாராட்டத்தக்கதாகும்.

தமிழ் வளர்த்த ஆசிரியர்களாகிய தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலிய பண்டைத் தமிழ்ப் புலவர்

களது பெருமையும், அவர்கள் அருளிய தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ்த் தொன்னூல்களின் சிறப்பும், இக் கோவையில் வரும் தலைவன் தலைவி தோழி முதலியோர் கூற்றுக்களில் வைத்துப் போற்றப்பெற்றிருத்தலையும், இக்கோவையில்வரும் தலைவன் தலைவி முதலியோர் கரந்தையிற் செந்தமிழ் பயின்ற சிறப்புடையவராகப் பாராட்டப் பெற்றிருத்தலையும் கூர்ந்து நோக்குங்கால் இக் கரந்தைக் கோவை தமிழின் சிறப்புணர்த்தற்கென்றே தோன்றிய செந்தமிழ்க் கோவை என்பது நன்கு விளங்கும்.

"சொற்றிறந் தேர்ந்த தொல்காப்பியர்" (36)
"ஓங்கு தொல்காப்பிய நூல்" (69)
"தெய்வப் புலவன், திருவள்ளுவன் செய்திருக்குறள்" (142)
"இறவாக் கவி இளங்கோ, எழிற்சாத்தன் (175)
"இவ்வுலகோர்க்கு ஒழுக்கம்தரும் குறள்" (301)
"கூடலிற் றெய்வதங் கூட்டுந் தமிழ்க்குரை கூட்டுவித்த,
பாடலிற் சான்ற நக்கீரன்" (379)
"நல்லந்துவன் கலிப்பாத் தொகை" (239)
"அருளைத் தருந்திரு அப்பர் சம்பந்தர் ஆரூரர் தமிழ்" (244)
"ஆழ்வார் அருளமுது" (254)
"திருவாய்மொழி திருவாசகத்தேன்" (82)
"நெஞ்சுருக்குந் திருவாசகத்தேன்" (122)
"சேணையர் காவலர் சேக்கிழார் செய்திருத் தொண்டர்
தந்நூற், கோவை" (355)
"செல்லுறு காரெனச் செந்தமிழ்க் காப்பியஞ்செய்த
கம்பன்" (220)

எனவரும் தொடர்கள் இங்கு நோக்கத்தக்கனவாகும்.

இக் கோவையில் வரும் உவமைகள் யாவும் எடுத்துக் கொண்ட அகனைந்திணை யொழுகலாற்றைத் தெளிய உணர்தற்கு ஏற்ற வண்ணம் அமைந்துள்ளன. பிரிந்து விரைவில் வருவேன் எனத் தலைவியை நோக்கி வற்புறுத்தும் தலைவன், தன்சொல் தவறுபடாதென உணர்த்தும் நிலையில், "கரந்தைக் கவிஞரின் வெண்பாவிற் பிறந்ததளையொப்ப வேறுபடாது என்

னுரை" (24) எனக் கூறுகின்ருன். தலைமகளை ஆற்றுவித்துப் பிரியும் தலைவன் தன் ஊரின் அணிமையினைப் புலப்படுத்தும் பொழுது,

"கண்ணிரண்டின்
இடைதிகழ் மூக்கினை யேய்ப்ப நம் ஊரை இடைப்படுக்கப்
புடைதிகழ் பொற்றை இலதெனின் ஒன்று நம் பொன்னகரே"

என இருவரூர்க்கும் இடையே யமைந்த சிறு குன்றுக்கு இரு கண்களின் நடுவேயமைந்த மூக்கினை உவமையாகக் கூறியிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். 'தமிழிலக்கியங்களின் சுவைநலங்களை நுகர்ந்து மகிழ்தற்கு இலக்கண நூலாகிய தொல்காப்பியம் உற்றதுணையாமாறுபோன்று, அன்புடைய தலைவியை அடைந்து மகிழ்தற்கு உற்றதுணையாவாள், பாங்கியே' எனத் தலைவன் தான் உணர்ந்துகொண்டதாகக் கூறுதலும்(69) 'செந்நாப் புலவர் அருளிய திருக்குறட்பாவும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையும் வேறுபடாது ஒற்றித்து நிற்றல் போன்று பாங்கியைப் பிரியாது உடனுறைகின்ருள் தலைவி' எனக் கூறுதலும் (76) கையுறையேந்திவந்து யானைவந்ததோ மான்வந்ததோ என வினவிநிற்கும் தலைவன்கூறும் மொழிகள் முன்னுக்குப்பின் முரண்பட்டனவாய்ப் பொய்படுதற்கு, யாப்பிலக்கணம் அறியாதவர்கள் வெண்பா பாடத்தொடங்கி அது விருத்தமாய்ப் பின் முற்றுப்பெருநிலையை உவமை கூறுதலும், (79. ஆ) "ஆளுந்திறனும் அறிவியல் நூல் செயும் ஆக்கமும் எந்நாளும் தமிழ்மொழிக்கு இல்லை என்பாரின் நவையுரை போல்" தலைமகளைப் பேதைமையுடையவள் என நீ பேசுகின்ருய்' எனத் தலைவன் பாங்கியை நோக்கிக்கூறுதலும் (91) உவமப் பொருளின் உற்றதுணர்த்தும் இந் நூலாசிரியரின் தெளிந்த புலமையினைப் புலப்படுத்துவனவாகும்.

புலவர் கல்லூரி மாணவர்கள் உளங்கொண்டு தெளியும் வண்ணம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களின் நுண்பொருள்களை விரித்துரைக்கு மியல்புடைய இந் நூலாசிரியர், அப்பொருள் நுட்பங்களிற் சிலவற்றைத் தாம் சொல்லக்கருதிய அகத்திணை யொழுகலாற்றுடன் தொடர்புபடுத்தி இக்கோவையில் ஆங்காங்கே விளக்கிச்செல்லும் பகுதிகள் (134, 145, 159, 130, 248, 273, 315, 367) கற்போர்க்குப் பெருமகிழ்ச்சி விளைப்பனவாகவுள்ளன.

தலைமகனுடன் சென்ற தலைமகளைத் தேடிக்கொண்டு சுரத்திடையே சென்ற செவிலித்தாய், வழியிடையே தலைமகளது அடிச்சுவடுகண்டு இரங்கிக்கூறுவதாக அமைந்தது,

“ கமழுங் கரந்தைத்தமிழ்க் காரிகைமுன் கழிநெடிலாய்த்
திகழும் நெடிலடிகாளை, பின்நேரடி சிந்தடிமான்,
புகழும் படியிருசீரடிப் பாங்கர் பொசிந்த வடி
நிகழும் விலங்கடிநேராத வேடர்தம் நெட்டடியே ” (345)

எனவரும் செய்யுளாகும். “மணம் கமழும் கரந்தைத் தமிழ்ச் செல்வியாகிய தலைவியின் அடிச்சுவட்டிற்கு முன்பாக மிகநீண்டு தெரியும் பெரிய அடி காளைபோல்வானுகிய தலைமகனது அடிச்சுவடாகும். அதன்பின் குறுகிய அடியாய்த் திகழ்வது, மான் போன்ற நோக்குடையாளாகிய தலைவியின் அடிச்சுவடே. புகழுந்தன்மையவாகிய அவ்விருவகையடிகளின் அருகே உருவழிந்து கலந்த நிலையிலுள்ள அடிச்சுவடு அங்கே. (சினங்கொண்டு) வந்த (யானையாகிய) விலங்கின் பாதங்களாம் (நெடுந் தூரத்தே தோன்றும் அச்சுவடுகள்) பகையாகி வந்தெதிர்த்துத் தோற்றேடிய வேடர்களின் நீண்ட அடிகளாம்” என்பது இச் செய்யுளின் பொருள், இதன்கண் தமிழ்மொழியிலுள்ள யாப்பிலக்கண நூலாகிய காரிகை என்பதன் பெயரும் அந்நூலிற் கூறப்பெறும் ஐவகையடிகளின் பாகுபாடும் நயமுறக் குறிக்கப் பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும்.

“ அத்திநின்றவிடம் அவ்விடம் சிலைகொள்
அரசுநின்றவிடம் உவ்விடம்
எய்த்துளஞ்சியிள வஞ்சி நின்றவிடம்
இவ்விடம் சுவடுமேவுமே ”

எனவரும் அருணைக்கலம்பகத்தொடர், மேற்குறித்தவாறு சுவடு கண்டிரங்கல் என்னும் துறையில் அமைந்திருத்தல் இங்கு ஒப்பு நோக்கியுணரத் தகுவதாகும்.

குற்றியலுகரவீற்றின்முன் உயிர்முதல் மொழிவருங்கால் ஈற்றுக்குற்றியலுகரம் மெய்யீறுபோன்று வரும் உயிர்க்கு ஏற இடங்கொடுத்துத் தானும்கெடாது உடன்நிற்கும் என்ற நுட்பத்தினைத் தொல்காப்பிய வுரையாசிரியருள் ஒருவராகிய நச்சினுர்க்கினியர் தொல்—எழுத்ததிகாரம் 105-ஆம் சூத்திரவுரையில் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்வாறு ஓர் உயிர் ஒருயிர்க்குள் அடங்கியமைய ஈருயிரும் ஓருயிர் என்னும்படி ஒற்றித்து நிற்கும்

என்பதற்கு யானும் என் காதலியுமாகிய இருவருமே சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளோம்' எனத் தமிழ் நலமுணர்ந்த தலைவன் கூறுவதாக அமைந்தது,

" கற்றவர் சேர்கரந்தைப் புகழ்ப்பாவலர் காதலிக்கும்
சொற்றிறந் தேர்ந்ததொல் காப்பியர்நூலுள் துரிசகன்ற
குற்றுக ரக்குறை நச்சர் வகுத்திடுங் கொள்கையினைப்
பற்றற நோக்கின் இலக்கியம் யானுமிப் பாவையுமே" (36)

எனவரும் செய்யுளாகும்.

நிலைமொழி வருமொழிகள், அல்வழிவேற்றுமைப்பொருள் புலப்பட ஒருங்கியைந்து நில்லாது இடையே பிறசொற்கள்வரச் சேய்மைப்பட நிற்குந் தொடர்மொழியினைத் தழாத்தொடர்என வழங்குவர் இலக்கண நூலார். நிலைமொழி வருமொழிகளாகிய அவ்விருசொற்களும் இயைந்து நில்லாது தடைப்பட்டு விலகி நிற்பினும் அவ்விருமொழிகளுக்கும் இடையே அமைந்தபொருட் டொடர்பு அறுபடவில்லை என்பதனைத் தழாத் தொடர் என்ற சொல்லமைப்பால் நன்குணரலாம்.

பெற்றோரது ஆணையால் திணைப்புனங்காவலொழிந்துபாங்கி தலைமகளை அழைத்துக்கொண்டு அப்புனத்தைவிட்டு நீங்கிச் செல்லும் நிலையில் அங்குள்ள கிளிகளை நோக்கிக்கூறுவதாக அமைந்த,

விழாத்தொறும் நூல்வெளியாக்கி யென்றென்றும்விரிவுரைசெய்
குழாத்தொடுதொண்டுசெய் தோங்குங்கரந்தைக்குளிர்புனம்விட்
டழாத் துயரோடெமர் ஆணையிற்சேரலை அன்பர்வரின்
தழாத் தொடராயின மென்றுரைசாற்றுவிர் தத்தையரே. (159)

எனவரும் செய்யுளில் தழாத்தொடரின் தன்மையினை ஆசிரியர் நயம்பட விளக்கியுள்ளமை அறிந்து மகிழத்தக்கதாகும்.

தோழியின் உதவியால் தலைவியை மணந்து மனைவாழ்க்கையில் மகிழுந்தலைவன் தானும் தலைவியும் இவ்வாறு இயைந்து வாழ்வதற்கு இடைநின்று துணைபுரிந்த தோழியைப் புகழ்வதாக அமைந்தது,

ஈருயிரா யெதிரேற்றேம் உடம்படுமெய் யெனவும்
சீருயர் தேமலர்போன்றேம் தொடுக்குசெந் நாரெனவும்
ஆருயிர்ப் பாங்கி நின்றில்லறம் பேணுதற் காக்கினை நீ
மாரியொக்குங் கரந்தைத்தமிழ் மங்கை!கைம் மாறறிதே. (367)

என்ற பாடலாகும்.

உயிரீற்றின்முன் உயிர்முதன்மொழி வந்து புணருங்கால் உயிரோடு உயிர்க்கு மயக்கவிதியில்லாமையால் அவ்விரண்டிற்கும் இடையேவந்து ஒன்றப்புணர்க்கும் உடம்படுமெய்யின் இன்றியமையாமை இதன்கண் நன்கு புலப்படுத்தப்பட்டமை காணலாம். இவ்வாறே இக்கோவையில் ஆங்காங்கே எடுத்துரைக்கப்பெறும் தமிழியல் நுட்பங்கள் பலவும் அறிஞர்கள் வியந்து பாராட்டுமாறு சுவைபெற அமைந்துள்ளன.

அகப் பொருளிலக்கியங்களுக்குச் சிறப்பளிப்பனவற்றுள் உள்ளுறையுவமமும் ஒன்ருகும். தன்கணவனுகிய தலைவன் பரத்தைமையுடையவனுக ஒழுகுகின்ருன் எனத் தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்தது.

வாய்மகிழ் தேமாங் கனியுண் கடுவன் வளர்கமுகின்
காய்மகிழ்ந் துண்ணுபு கைவிடுங்காவிற் கரந்தைவளர்
தூய்தமிழ் தேர்ந்தவர் சொற்செயல் ஒன்றிலர் தோழியயல்
போய்மகிழ்வாரிசை நாடகங்காணுமோர் பொய்வளர்த்தே(380

எனவரும் பாடலாகும். தேமாங்கனியுண்ட கடுவன் தலைவியை நுகர்ந்த தலைவனுகவும், கடுவனுகிய அது உவர்ப்புடைய கமுகின் பசுங்காயை உண்ணவேண்டித்தான் முன் நுகர்ந்த இனிய தேமாங்கனியைக் கைவிட்டுச் சென்றமை, தலைவன் அறிவுடையோரால் உவர்த்தற்குரிய பரத்தையொடு மகிழ்தலைவிரும்பித்தன் இனிய தலைவியை விட்டுப்பிரிந்து செல்வதாகவும் உள்ளுறையுவமம் கொள்ளுமாறு இச் செய்யுளையியற்றிய ஆசிரியரது புலமைத்திறம் அறிஞர்களாற் பாராட்டத்தக்க சிறப்புடையதாகும்.

பழந்தமிழ் நூல்களை ஆழ்ந்துணர்ந்து கற்ற திரு. பாலசுந்தரம் அவர்கள், தாம் துய்த்துணர்ந்த தமிழ் இலக்கியச் சுவை நலங்களையெல்லாம் பிறரும் உணர்ந்து மகிழுமாறு சுவைபெறவடித்துத்தரும் முறையில் இக்கரந்தைக் கோவையை இயற்றியுள்ளார் என்பது இக் கோவையினை ஊன்றிப் பயில்வார்க்கு இனிது விளங்கும்.

இக் கோவையிற் பேசப்பெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலிய அனைவரும் தமிழ் நூல்களை நன்கு பயின்றவர்களாகவும் தமிழ் நூல்களிற் பாராட்டிப் பேசப்பெறும் ஒழுகலாறுகளை நன்குமதித்து அவற்றைத் தம் வாழ்க்கையில் மேற்கொண்டொழுகுவதிற் பேரார்வமுடையவர்களாகவும் புனைந்துரைக்கப் பெற்றுள்ளார்கள். தமிழும் தமிழர்வாழ்வும் உயர்நிலையடைய

வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளினை உயிர்நிலையாகக் கொண்டு பாடப்பெற்ற அகப்பொருட் கோவை ஒன்று உண்டென்றால் அஃது இக் கரந்தைக் கோவையேயெனக் கூறலாம். இஃது இக் கோவைக்கமைந்த தனிச்சிறப்பென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தலைவனுடன் போகிய தலைமகளைத் தேடிக்கொண்டு சுரத்திடைச் செல்லும் செவிலியை நோக்கிய அறிவின் மிக்கோராகிய சான்றோர் ஊழியல்புரைத்துத் தேறுதல் கூறுவதாக அமைந்தது.

பொதியிற் பிறந்துமுச் சங்கமென் தொட்டிலிற் போர்ச்செழியர்
நிதியின் வளர்ந்த நந்தெய்வத் தமிழ்மகள் நேயமிகப்
பதியிற் சிறந்தொளிர் பைங்கரந்தை மணம் பற்றினள்முன்
விதியிற் கிடந்ததை வேறுசெய்வா ரெவர் மேன்மகளே (342)

என்னும் செய்யுளாகும். இது,

'பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்துவையை யேட்டிலே தவழ்ந்தபேதை
நெருப்பிலே நின்று கற்றோர்நெஞ்சிலே நடந்தோரேன
மருப்பிலே கிடந்தபாவை மருங்கிலே வளருகின்றாள்'

எனத் தமிழ்மொழியின் பெருமை குறித்து வரந்தருவார் பாடிய பாடலை அடியொற்றியமைந்திருத்தல் காணலாம்.

கராமுண்ட பிள்ளையைக் காட்டிற் கரிந்தவோர் கன்னியைநல்
அராவுண்ட காளையை அன்றளித் தாய்தமிழ் ஆசையினால்
இராவுண்ட கூந்தலெம் ஏந்திழை யாள்வரின் ஏர்கரந்தை
விராவெண் டமிழ்த்தொடை சாத்தி வழுத்துவன் வேணியனே
(372)

எனவரும் பாடல் 'செவிலி தெய்வம் வாழ்த்தல்' என்னுந்துறையில் அமைந்ததாகும். இதன்கண் சிவபெருமான் தமிழ்மொழியின் மேற்கொண்ட ஆசையினால் தேவார ஆசிரியர்கள் பொருட்டு நிகழ்த்தியருளிய அற்புதச் செயல்களைச் செவிலியெடுத் துரைத்ததுடன், தன்மகளைத் தன்பாற் சேர்த்தருளினால் தானும் தமிழால் பாமாலைபுனைந்து அணியப்போவதாகக் கூறிச் சிவபெருமானை வழுத்துவதாகக் கூறியுள்ளமை, எதிர்காலத்தில் செவிலித்தாயரனைவரும் செந்தமிழ்ப் புலமைவாய்ந்தவராகத் திகழ

வேண்டும் என இந்நூலாசிரியர்கொண்ட பேரார்வத்தினைப் புலப்படுத்துவதாகும்.

"இரும்பாம் மனத்தவர் இன்றமிழ்கேளா ரிவர்களன்றி
விரும்பா ரொருபெண்ணை வேண்டிமற் றோர்பெண்ணை
வெட்டுதற்கே" (106)

"இரும்பனை யாருளம் என்பாலிரங்குத லில்லையெனின்
கரும்பனையாரிடம் செல்வேன் அவரென் கருத்தினுக்குப்
பெரும்புணையாவர்" (125)

"கணியார் தரும்பொனிற் கானவர் ஏனற்கதிரரியும்
பணியார்ந்தனர்" (153)

"கோட்டான் றனையொரு கோட்டான்வதைக் கிலென்
கோல்வளையே" (207)

என்றுங்கு இக் கோவையில் வரும் நயமுள்ள பகுதிகளைப் படிப்போர், கற்பனை வளஞ்செறியச் செஞ்சொற் கவிபாடும் சீர்த்தி மிக்க சிவப்பிரகாசர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய முன்னைத் தமிழ்ச்சான்றோர் பலர் இயற்றிய செந்தமிழ்ப்பனுவல்களில் இந்நூலாசிரியர்க்கு உள்ள ஆழ்ந்த பயிற்சியினையும் இவர்க்கே இயல்பாக அமைந்துள்ள பாவன்மையினையும் நன்குணர்ந்து பாராட்டுவர் என்பது திண்ணம்.

கரந்தைக்கோவையினைப்பாடிய திருவாளர் ச. பாலசுந்தரம் அவர்கள், செந்தமிழ்ப் புலமையுடன் அன்பு, அடக்கம் முதலிய நற்பண்புகளும் கல்விப் பயிற்சிக்குத் தகவொழுகும் நல்லொழுக்கமும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவர்; புலவர் கல்லூரியில் உயர்ந்த நூல்களைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பினும் என்றும் மாணுக்கரெனவே கருதி ஒழுகுபவர்; எல்லாச் சமயங்களையும் ஒப்பமதித்துப்போற்றும் பொதுநோக்குடையவர்; தமக்குரிய சிவநெறியை நெகிழவிடாதவர்; தமிழ் மொழியில் எல்லையற்ற பற்றுக்கொண்டவர். தெய்வப்புலவர் அருளிய திருக்குறள் நெறியில் யாவரும் வழுவாது ஒழுகுதல் வேண்டும் என்னும் பெருவேட்கையுடையவர்; யாவருடனும் அன்பாகப்பழகும் நல்லியல்புடையவர். நூலாசிரியர் பால் அமைந்தனவாக மேற்குறித்த நலங்கள்யாவும் அவரால் இயற்றப்பெற்ற இக் கரந்தைக் கோவையிலும் இடம்பெற்றிருத்தல் அறிந்துமகிழத்தக்கதாகும்.

" கரந்தையிற் செந்தமிழ் கற்றவன் யான் " (83) எனத் தலைவன் கூற்ருகவும், " பைங்கரந்தைக் கோவையும் என்னையுங் கூட்டி (149) " எனத் தலைமகள் கூற்ருகவும் இந்நூலில் அமைந்ததொடர்கள் முறையே இந்நூலாசிரியரையும் அவராற் பாடப்பெற்ற கரந்தைக் கோவையாகிய இப்பனுவலையும் குறிப்பாற் சுட்டி நின்றன எனக் கொள்ளுதல் பொருந்தும்

இக் கோவையில், தன்மை உவமை உருவகம் முதலிய பொருளணிகளும் யமகம் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகளும், மொழிகளின் இயல்பு குறித்தும் தமிழ்மொழியின் ஆக்கங்குறித்தும் இக் காலத் தமிழறிஞர்களிடையே நிலவும் அரிய கருத்துக்களும், பண்டைத்தமிழர் போற்றிய தமிழியல்வழக்கமாகிய அகப்பொருளொழுகலாற்றின் உயர்வினை இக் காலத்தார் எளிதின் உணர்ந்துகொள்ளுதற்கேற்ற பழந்தமிழ் நூல்களின் தெளிவான விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. சுருங்கக்கூறின், சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் எதிர்காலத்தின் சிறப்பும் விளங்க அமைந்த விருந்தாயபனுவல் இக் கரந்தைக் கோவை எனக்கூறுதல் சாலும்.

சிறந்த செய்யுட்களைப்பாடும் மரபு அருகிக்காணப்படும் இந்நாளிலே பழமைக்கும் புதுமைக்கும் தொடர்பமைத்து இக் கோவையினைத் தமிழ்த்தாயின் திருவடிகளுக்குச் சாத்திய இந்நூலாசிரியரை, " கோவையுறப் பயில்வார்க்கருள் தரு பைங்கரந்தைத் தமிழ்ப் பாவலனே " (236) என இக் கோவையிலுள்ள தொடர்மொழியினுலேயே பாராட்டுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

செந்தமிழ்ப் புலமையும் தமிழ்வளர்ச்சியில் தளராத ஊக்கமும் வாய்க்கப்பெற்ற கெழுதகை நண்பர் திரு. பாலசுந்தரம் அவர்கள் கரந்தைக் கோவைபோன்ற சிறந்த பல பனுவல்களைப்பாடித் தமிழ்வளம்பெருக நீடுவாழ்க எனத் தென்பாலுகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் திருவடிமலர்களை அன்புடன் வணங்கி வாழ்த்துகின்றேன்.

ஞாலத்தார் வாழ்த்துரைக்க நம்பால சுந்தரனும்
சீலத்தால் மிக்க திருவாளன் — பாலின்
சுவைசேர் தமிழ்க்கரந்தைக் கோவைதனைச் சொல்லின்
நவைதீரப் பாடினன் நன்கு.

க. வெள்ளைவாரணன்.

# பாராட்டுரை

திரு. சி. வேதாசலம் பி. ஏ., பி. எல்.,
(கரந்தைத் தமிழ்ச் சங்க முன்னாள் அமைச்சர்)

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஐம்பதாண்டுகட்கு மேலாக உலகப் பெருமொழிகளில் ஒன்றாகிய தமிழ்மொழியின் பல நலன்களையும் போற்றிக் காக்கும் பெரும்பணியை அச்சமும் அயர்வுமின்றி மேற்கொண்டு கல்விக் கூடங்களையும் நூல் நிலையத்தையும் "தமிழ்ப் பொழி" லையும் நடத்தியும் சிறந்த நூல்களை வெளியிட்டும் புலவர்களைப் பாராட்டியும் வரலாற்றில் இடம் பெறத்தக்க பணிபுரிந்துவரும் சிறந்த நிறுவனமாகும்.

இதனை நிறுவிவளர்த்த சான்றோர்களையும் புலவர்களையும் தொண்டர்களையும் நினைவுகூரும் நன்றிக்கடனை உலகுக்கறிவிக்கக் "கரந்தைக் கோவை" என்னும் அரிய அகப்பொருட் கோவை நூலையியற்றிச் சிறப்பிக்க என் நண்பரும் கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியருமான கவிஞர் ச. பாலசுந்தரனார் உளங்கொண்டது மிகமிகப் பாராட்டத்தக்கது. இறைவனையோ அரசனையோ பாட்டுடைத் தலைவராகக்கொள்ளாமல் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்கள் உள்ளம்போல்மிளிரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தையும் தமிழ்த் தாயையும் பொருளாகக் கொண்டமை கோவை வரலாற்றில் ஒரு புதுமையாகும். இந் நூலிற் கூறப்பெறும் சிறப்புக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் முற்றும் உரித்தாவதுபோல் அதனைப் பொருளாகக்கொண்டு கோவை பாடவும் நம் கவிஞர் முற்றுந் தகுதியுடையவர் என்பதனை இந் நூலைக் காண்பார் ஒப்புவர். கோவையியற்றுவதற்கு வேண்டப்பெறும் பரந்த இலக்கியப் புலமையும், ஆழ்ந்த இலக்கண அறிவும், கற்பனையும் விரைந்து செய்யுளியற்றுந்திறனும் தமிழன்பும், ஆர்வமும் உழைப்பும் எதனையும் பல நிலைகளில் ஆராய்ந்து உண்மைகாணும் உள்ளமும் நம் கவிஞர்பால் இயல்பாகவே அமைந்துள்ளமை நாம்பெருமைப் படுதற்குரியதாகும்.

அன்பும் அறிவும் நிரம்பிய, அறனும் பொருளும் தழுவிய இன்ப ஒழுக்கமே மக்கள் வாழ்க்கையிற் செம்பாகமாக உள்ளமையால் இலக்கியம் பெரும்பாலும் இல்வாழ்க்கையையும் அதன் முற்படிகளையும் பற்றி நிற்பது இன்றியமையாததாகும். இம் முறையில் கரந்தைக் கோவையைக் கவின்பெறயாத்துத் தந்துள்ள கவிஞரைத் தமிழுலகம் பாராட்டும். இவர் மேலும் பல இனிய நூல்களை இயற்றித் தந்து எல்லா நலங்களுடனும் பல்லூழி வாழ்க என வாழ்த்துகின்றேன். சி. வேதாசலம்.

# வாழ்த்துரை

பண்டித நாவல, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
அருமைத்திருமகளார்
வித்துவான், சிவ. பார்வதியம்மையார்

வண்புகழ் மூவர் தண்பொழில்வரைப்பாகிய தமிழகத்தே "நாடெல்லாம் நீர்நாடுதனை ஒவ்வா" என்று சிறப்பித்தோதப் பெறுவது சோணாடு. அந்நாட்டினும் தஞ்சை மாவட்டம் புலவர் பெருமக்கள் பலரையும் பேரறிஞர்களையும் ஈன்ற பெருந்தகவுடையதாகும். தஞ்சைமாநகரின் திலகமென விளங்கும் கரந்தையம்பதியிற்றோன்றிப் பல்லாற்றானும் தமிழ் வளர்த்துவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பெருமையைத் தமிழ்ப் பெருமக்கள் நன்கறிவர். அத்தகைய தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் புலவர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திருவாளர். வித்துவான் பாலசுந்தரனார் அவர்கள் எழுதிய கரந்தைக் கோவை என்னும் அரியநூலைப் படித்தறிந்து பெருமகிழ்வெய்தினேன். நூலைப் படிக்கத் தொடங்கியவுடனேயே ஒருபால் உள்ளமும் உடலும் பூரித்தன. ஒருகால் ஓங்கிய பெருமூச்செழுந்தது. இராமபிரானுக்கு முடிசூட்டித்தயரதன் துறவறம் எய்தப்போகின்றான் என்பதனைக் கேள்வியுற்ற அயோத்தி மக்கள் மனநிலையும், அமணர் ஒருபுறமும் கவுணியர்கோன் ஒருபுறமுமாகப் பிணி தீர்க்கப்பெற்ற பாண்டியன் உடல்நிலையும்போல என் உள்ளமும் ஒருபால் தழைத்து, ஒருபால் கருகியது. தனக்கென வாழாது தமிழுக்கென்றே வாழ்ந்து புகழுடல் நிறுவிச் சென்ற என் அன்புத் தந்தையார், தமிழவேள் வக்கீல் ஐயா ஆயவர்கள் இன்று இல்லையே என ஏங்கினேன். எனினும் தமிழ்ப் பெருமன்றமும் கல்வி நிலையங்களும் சான்றமைந்த கேள்வி அறிவுடைப்பெருமக்களைத் தன்னகத்தே கொண்டு வீறுபெற்றிலங்கு தலையறிந்து என் உள்ளம் உவகையுள் திளைக்கின்றது.

"அன்றாலின் கீழிறைவன் அழகிய செந்தமிழ் மணப்ப தென்றே தென்திசை நோக்கியிருந்தனன்காண் அம்மானை" என்றும் "வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்றமதியே" என்றும் நாவலர் கோனும் பாவலர் பெருமானும் தமிழன்னையின் தவத்திறம்பாடித் தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கத்திலும் புலவர் கல்லூரியிலும் அவ்விருவர் தம் நாவீறும் பாவீறும் ஒருங்கமையப்பெற்ற ஆசிரியர் பாலசுந்தரனார் செந்தமிழ் வளந்துறுமச் செய்யுளியற்றுதலில் நிகரற்றவர் என்றுகூறுதல்

மிகையன்று. செய்யுட்கள் யாவும் செந்தமிழ் நலங்கமழத்தெவிட்டாத தீஞ்சுவைக்கனிகளாக விளங்குகின்றன. சங்கம் நிறுவிய துங்கன் இராதாகிருட்டினச்செம்மல், தமிழவேள் முதலாகச் சங்கத்திற்குத் தொண்டாற்றிய தமிழ்ப் பெருமக்கள் பலரைப் பற்றியும் ஏற்கும் இடங்களில் எடுத்துரைத்தலான் அவர்கள் பால் இவருக்கிருக்கும் பெருமதிப்பும் பேரன்பும் அறியப்படும்.

குற்றுகரக்குறை நச்சர்......... பாவையுமே (36)
ஙப்போலு வேனினிச்சுட்டவ் விஞவுநீராவிர் (273)

என்பன போல்வன ஆசிரியர் தம் இலக்கணப் புலமையை அறிவுறுத்துவனவாம்.

"நிதியற்ற ஏழைக்குப் பொற்குவை நேர்ந்ததென" (38)
"தாயின்மடிதுயில்வாள் மரப்பாவையைத் தானெடுத்து
வாயிற்பழந்திணித் துண்ணுமையாற் பிணிவந்ததெனப்
பாயற் பணிபுரிவாள்" (90)
தெரியாத ஊர்க்கு நெறிகேட்பது (92)
வளிமுதலாயவைம் பூதத்தியலும் அவ்வானியலும் (181)
நெய்மிகுத்தாறு சுவைநிகழ் உண்டியை நீள்கலத்திற்
பெய்துணும்போது கழுத்தைப்பிடிப்பவர்பெற்றியென (187)
போர்வேண்டு தோளவன் பொன்வேண்ட நம்முயிர்ப்பூவை
யவன்,தார்வேண்டுமென்றனள் தாய்வேண்டுமோ இனி (304)

என்பன போல்வனவற்றுல் இவருடைய உலகியலறிவும் சதுரப்பாடும் புலனும். பண்டு தமிழகத்திற்றேன்றிப் புகழுடன் விளங்குகின்ற கோவை நூற்கள் போன்றே கரந்தைக் கோவையும் தமிழியல் நன்கமையப்பெற்று "தேனும் அமிழ்தும் தெவிட்டச் சுவைமிகு தீங்கவிதை ஈனும் கரந்தை" (181 ஆ) என ஆசிரியர் இயம்புதற்கு இலக்காக விளங்குகிறது. இத்தகு பெருமைசான்ற இந்நூல் புலவர் கல்லூரிகளிற்பயிலும் மாணவர்க்கு ஏற்ற பாடநூலாகவும் தமிழ்ப் பெரும்புலவர்க்குச் சிறந்த ஆராய்ச்சி நூலாகவும் அமையத் தகுதியுடையதாம். இவ்வாசிரியர் இன்ன பல நூல்களியற்றித் தமிழன்னையை எழிலுறச் செய்து பன்னெடுநாள் நல்வாழ்வு வாழச் செந்தமிழ்ப் பரமாசாரியன் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

சிவ. பார்வதி.

# நன்றியுரை

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அகமும் முகமும் போன்றிலங்கும் கரந்தைப் புலவர் கல்லூரியிற் பணியாற்றத் தொடங்கிய நான்காவது யாண்டில் (1954) வித்துவான் முதனிலை வகுப்பிற்குப் பொய்யாமொழிப் புலவர் அருளிய தஞ்சைவாணன் கோவையைப் பயிற்றும் வாய்ப்பைப்பெற்றுச் சொக்கப்ப நாவலரின் பாயிர உரையை நடத்திக் கோவையின் முதல் துறையாகிய காட்சிச் செய்யுளை விளக்கும்போது "யாவையும்பாடிக் கோவையும் பாடுக" என்னும் தொன்மொழியைக் கூறித் திருச்சிற்றம்பலக் கோவை முதலாய அரிய நூல்களையும் அவற்றை அருளிய ஆசிரியர் தம் பெருமைகளையும் புகன்றேன். அவற்றைக்கேட்ட மாணவர்கள் 'இப்பொழுதுள்ளார் யாரேனும் கோவை பாடியுள்ளனரா' என வினவினர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்குப் பின்னர் யாரும் கோவை பாடியதாக எனக்குப் புலப்படவில்லை என்றேன். நீங்கள் ஒரு கோவை பாடுங்களையா என விளையாட்டாகவும் விருப்பமாகவும் மொழிந்தனர். கோவையின் சிறப்பினையும் யாப்பின் கடுமையையும் கற்பனையின் பரப்பினையும் சிந்தியாமற் கூறுகின்றீர்கள்; ஒன்றிரண்டு செய்யுள் பாடலாம்; முழுதும் பாடுதல் அவ்வளவு எளிதன்று எனக்கூறி மேலே பாடத்தைத் தொடங்கினேன்.

அன்றிரவு ஏதோ ஒரு அவாவினால் ஓரிருபாடல்கள் எழுதிப் பார்ப்போமே என எழுத முயன்றேன். கட்டளைக் கலித்துறை யாப்பில் செய்யுளியற்றுவது அத்துணை இடர்ப்பாடாக எனக்குத் தோன்றவில்லை ஆயினும் கோவைக்குரிய பாட்டுடைத் தலைவராக யாரை அமைப்பது? எப்பதியைப் பற்றிப் பாடுவது எனக் குழம்பினேன். முழுதும் பாடி முடிக்கும் எண்ணம் அப்பொழுதில்லை யாயினும் கரந்தையை இடமாகவும் தமிழ்த் தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவியாகவும் வைத்துப்பாடினால் தமிழின் சிறப்பையும் — தமிழ்ச் சங்கத்தின் தொண்டினையும் புகழ்ந்துரைக்கும்பேறும் சங்கத்தார்க்கும் ஆசிரியப் பெருமக்கட்கும் நம் நன்றியைப் புலப்படுத்தும் வாய்ப்பும் ஒருங்கமையும் என்று என் உள்ளுணர்வு தூண்ட, தஞ்சைவாணன் கோவையை முன் வைத்துச் சில செய்யுட்களை எழுதி அடுத்த வகுப்பில் மாணவரிடம் பாடிக்காட்டினேன். பெரிதும் மகிழ்ந்தார்கள். என் ஆசி

ரியர் திரு. ந. இராமநாதன் அவர்களிடம் பேசிக்கொண்டு சென்றபோது காட்சித்துறைப் பாடலை விளையாட்டாகக் கூறினேன். நன்றாக இருக்கிறது என மகிழ்ந்துரைத்தார்கள். பின்வேறு பேச்சிற் புகுந்துவிட்டோம். முப்பது முப்பத்திரண்டு பாடல்கள் எழுதுவதற்குள் தஞ்சைவாணன் கோவைப் பாடம் மேலே சென்றுவிட்டது. பின்னர் எழுதவுமில்லை; அதுபற்றி எண்ணவுமில்லை.

1954—55, ஆண்டில் தமிழ்ப்பொழில் சில இதழ்கள் வெளி வராமல் நின்றிருந்தது. அவற்றை இரண்டு மூன்று திங்க ளாகச்சேர்த்து வெளியிடும் பொறுப்பைச் சங்கத்தார் எங்களிடம் தந்தபோது வெளியிடுவதற்கேற்ற கட்டுரைகள் வேண்டுமள விற்கில்லை. பலரிடம் எழுதிக்கேட்டோம். குறித்த காலத்தில் கட்டுரைகள் வரவில்லை. அப்பொழுது நம்மிடம் ஏதாவது உளதா என்று பார்த்தபோது புரவலர் உள்ளம் என்ற சிறு கவிதை நாடகமும். இக் கரந்தைக் கோவையில் 32 பாடல் களும் இருந்தன. பிறகட்டுரைகளோடு இவற்றையும் சேர்த்து ஆறு இதழ்களை ஒன்றாக வெளியிட்டோம்.

அவற்றைக் கண்ணுற்ற தமிழ்ப் பேரறிஞர் நீ. கந்தசாமி பிள்ளையவர்கள் என்னை அழைத்து ஊக்கமூட்டிப் புரவலர் உள் ளம் சிறந்துள்ளது; கோவை பழம்போக்கிலேயே இருக்கிறது. பழைய கருத்துக்களைப் பழைய முறையிலேயே வேறு சொற் களால் எழுதுவது நல்ல இலக்கியமாகாது. புதிய கற்பனைகள் புதிய உவமைகள் சிறந்த வருணனைகள், ஆழ்ந்த கருத்துக்கள் பொருந்த, உறுப்பு நலங்களைக் குறிப்பாகவும், குண நலங்களை வெளிப்படையாகவும் பாடுதல் நலம். ஒருகால் பாட நூலாக வரின் இருபாலாரும் கூச்சமின்றிப் பயிலவும் பயிற்றவும் இய லும் என்றார்கள். என்பால் பேரன்பு பூண்டுள்ள இவர்களின் அறிவுரையும். பொழிலில் 'தொடரும்' என்று குறித் திருந்தமையும் தொடர்ந்து எழுதும் இன்றியமையாமையை உண்டாக்கின. பழைய வருணனைகளை — உவமைகளை இயன்ற வரை விலக்கவேண்டும் என் செய்வது கிடைத்த வரையில் கோவை நூல்களைத் திரட்டிப்பார்த்தேன். அவை பழைய கருத் துக்களை நீக்க உதவியதோடு புதியமுறைகளைக் கையாளவும் துணைசெய்தன. பின்னர்த் திங்கள்தோறும் தமிழ்ப் பொழிலில் 20—25 செய்யுட்களை எழுதிவந்தேன் (1956-ல்) துன்முகி மார்கழி இதழோடு ஒருவாறு நிறைவுற்றது.

அவற்றைப் பொழில் வாயிலாகக் கண்ணுற்ற தமிழ் அன்பர்களும் பேராசிரியர்களும் பாராட்டினர்கள். அதுபோது தமிழ்ச் சங்க அமைச்சராகப் பணிபுரிந்த திருவாளர் சி. வேதாசலம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் ஒரு நூலாக வெளியிடவிரும்பிக் கூறிவந்தார்கள். யான் தமிழ்ச் சங்கப் பொன்விழாவின் போது வெளியிட்டு அரங்கேற்றி என் நன்றிக் கடனை ஆற்ற எண்ணி வாளா இருந்தேன். மாணவ அன்பர்கள் பலர் அச்சிட வற்புறுத்தினர்கள். தஞ்சை மகாலிங்கம் அச்சகப் பொறுப்பாளரும் என் அரிய நண்பருமான N. சின்னையா அவர்கள் இப்பொழுது வெளிவரும் கவிதைகளையும் கட்டுரைகளையும் பாராட்டாத திருவாளர் ந. மு. கோவிந்தராய நாட்டாரவர்கள் கரந்தைக் கோவையை உளமுவந்து என்னிடம் பாராட்டினர்கள். எனவே அதனை விரைவில் அச்சிடுங்கள்; யானே அச்சிட்டுத் தருவேன் என ஊக்கினர்கள். எனவே திருவாளர் நீ. க. அவர்கள் கூறியாங்கு முதற்கண் எழுதிய 30 பாடல்களில் அமைந்திருந்த இடக்கர்ச் சொற்களை நீக்கி முழுதும் ஒருமுறை பிழைகளைத் திருத்தி இன்றியமையாத சொற்களுக்குமட்டும் குறிப்பெழுதி மூலத்தைமட்டும் அச்சிடச்செய்தேன்.

இதற்குத் தக்கதொரு அணிந்துரை யாரிடம்பெறுவது—அணிந்துரை தருவோர் தமிழ்ச் சங்கத் தொண்டினையும் அதன் சிறப்பினையும் நன்குணர்ந்த அன்பராகவும் அறிஞராகவும் என்பால் அருளுடையராகவும இருத்தல் வேண்டுமேனச் சிந்தித்த போது எல்லாச் சிறப்பும் நிறைந்து இருந்தமிழ்ப்பணிக்கே பொருந்திய வாணாளை வழங்கிச் செம்மையுறத் திகழும் பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணனர் அவர்களே என் சிந்தையில் தோன்றினர்கள். இவர்களை அடுத்து என் அவாவினைக் கூறிய போது உளமுவந்தேற்று அருமையும் பெருமையும் மிக்க அணிந்துரையை எழுதி வழங்கியருளினர்கள். அகப்பொருட் கோவையைப் பற்றியும் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும் எழுத வேண்டிய இடர்ப்பாடுகளை என்க்குச் சிறிதும் வைக்காமல் எல்லாம் விளங்க அழகொழுக எழுதியருளிய இப் பெருந்தகையின் இணையடிகளைப் போற்றி வாழ்த்தி வணங்குவதல்லால் வேறு கைம்மாறறியாத யான் என் அகங்கனிந்த நன்றியை உளமுவந்து உரித்தாக்குகின்றேன்.

இக் கோவை செய்யுட்கள் தமிழ்ப் பொழிலில் வெளிவந்த போதெல்லாம். பொழில் மேற்பார்வையும் சங்க அமைச்சர்

பொறுப்பையுந்தாங்கிச் செயலாற்றிய பெருந்தகையார் தமிழவேளைப் போலத் தளரா உழைப்பும் தமிழ்ப்பற்றும், தமிழ்ப்பணியில் ஊக்கமுங்கொண்ட திரு. சி. வேதாசலனார் பி.ஏ., பி. எல்., அவர்கள் அவ்வப்போது என்னை ஊக்கியும் சோர்வுறுங்கால் இடித்துரைத்தும் கோவைச் செய்யுட்களைப் படித்துச் சுவைத்தும் என் வளர்ச்சியில் பேரார்வங்காட்டி வந்தமையோடு இதுபோது அன்புகனிந்த ஒரு அரிய பாராட்டினையும் வழங்கி வாழ்த்திப் பெருமை செய்துள்ளார்கள். அவர்கள் பொன்னடிபோற்றி என் அன்புகலந்த நன்றியைப் பணிவோடு உரித்தாக்குகின்றேன்.

வண்ணமுற வாழ்த்துரை வழங்கிய நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் அருமைத் திருமகளார் வித்துவான் சிவ. பார்வதியம்மையாரவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரிய.

இக்கோவையைத் தமிழ்ப் பொழிலில் வெளியிட்டும் தனி நூலாக வெளியிட உடன்பாடளித்தும் ஊக்கிய தமிழ்ச் சங்கத்தாருக்கும் கல்லூரித் தாளாளர் அவர்கட்கும், பொழில் தொண்டராகவும் எங்களின் அருமைத் தலைவராகவும் திகழும் திருவாளர் ச. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல். அவர்கட்கும் என் பணிவார்ந்த நன்றியும் வணக்கமும் உரியவாம். இந் நூலை அழகுற அச்சிட்டுதவிய அச்சகப்பொறுப்பாளராகிய கெழுதகை நண்பர் திரு. N. சின்னையா அவர்கட்கு என் நன்றிகலந்த வணக்கமும் பிறவாறு துணை நின்றுதவிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மாணவ அன்பர்களுக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியவாம்.

தோன்றாத் துணையாகி நின்று இந்நூலை ஆக்கவும் தன் திருவடிகளில் ஏற்கவும் அருள் புரிந்த முத்தமிழன்னையை என் சிந்தைகனிந்துவழுத்தி வணங்குகின்றேன்.

தாயாத் தமிழ்சுரக்குஞ் சங்கத் தமிழ்தூட்டிச்
சேயாப் புரந்தறிவுச் சீரளித்த — தூயபுகழ்
பூக்கும் கரந்தைப் புலவோர் தமக்குரிமை
ஆக்குதுமிந் நூலை அமர்ந்து.

அன்பன்,

**ச. பாலசுந்தரம்.**

தமிழ் வாழ்க!

# கரந்தைக் கோவை.

## தமிழ் வாழ்த்து.

எண்ணும் எழுத்தும் எழுத்திற் கனிந்த இயலிசையும்
பண்ணும் பரதமும் பாவகை யாவும் படைத்தளித்தெம்
கண்ணும் மனமும் கருத்தும் இனிக்கக் கரந்தையினில்
நண்ணும் மலரடி நாவார வாழ்த்துதும் நற்றமிழே!

## 1. கைக்கிளை.

### 1. காட்சி.

சொல்லைச் சுமந்த தமிழ்வாழ் கரந்தைநற் றூயவெற்பில்
அல்லைச் சுமந்து முயல்நீக்கி மானை அமைத்திரண்டு
வில்லை வளைத்தொளி வீசும்நிலாவினை மேவியொரு
முல்லைக் கொடியிளங் காவிடைத் தோன்றியென் முன்னின்றதே.

### 2. ஐயம்.

பூமரு காவின் புவிமக ளோ,மரைப் பொன்மகளோ?
பேமரு நீர்வளர் சூர்மகளோ? மலைப் பெண்மகளோ?
தேமரு பைந்தமிழ்த் தீஞ்சுவை நாளுந் திசைபரப்பும்
காமரு தஞ்சைக் கரந்தையி னிற்றனி காண்பவரே.

### 3. துணிவு.

நாடிக் கரந்தையை நட்டபின் நீங்கும் நவையெனவே
வாடித் துவளுமித் தாரும்,நற் றொய்யிலும், வண்டமிழைத்
தேடிப் பயின்றோர் மதிபோல் அரும்பித் திகழ்வியர்வும்,
மூடித் திறக்கும் விழியும்,நாம் காண்டுமிம் மொய்குழற்கே.

---

1. சொல்—நாமகளாகிய தெய்வம். அல்—இருள் (கூந்தல்) முயல்—களங்கம் மான்—களங்கம் (விழிகள்). வில்—(புருவம்) மேவி—பொருந்தி. கா—சோலை. காட்சியில் தலைவியை வியக்குந் தலைவன் கூற்று

2. பூமரு—பூக்கள் மணக்கும். பொன்மகள்—இலக்குமி. பேமரு—அச்சம் பொருந்திய. சூர்—தீண்டி வருத்தும் தெய்வம். தேமரு—இனிமை பொருந்திய. தேம்—இனிமை. காமரு—சோலை சூழ்ந்த. காண்பவர்—காணப்படுமவள்.

3. துணிவு—மானிட மகளே எனத்தெளிதல். நவை—அறியாமைக் குற்றம். தார்—மாலை. தொய்யில்—தோளில் எழுதும் வண்ணம். காண்டும்—கண்டேம். மொய்குழல்—தலைவி.

### 4. குறிப்பறிதல்.

ஆயும் புலவர்க் கவையாய்த் திகழ்ந்தறி யாமைமுற்றுந்
தேயும் படித்தமிழ் செப்புங் கரந்தைத் திருவரைமேல்
வேயும் மருளுமித் தோளிநம் பாற்றன் விழியமுதைப்
பாயும் படிக்கருள் பாலிக்கும் இல்லைப் பருவரலே.

## 2. இயற்கைப் புணர்ச்சி.

### 5. இரந்து பின்னிற்றற் கெண்ணல்.

நுணங்கிய கேள்விநன் நாவலர்ப் போற்றிநுழைதமிழ்நூல்
மணங்கனி சால்பினைத் தேறுங் கரந்தைநன் மாணவர்போல்
அணங்கனை யாளெழில் ஆளுதற் கேங்கிநின் அன்புரைத்து
வணங்கநி னைத்தனை வன்னெஞ்ச மே!யினி வாழியவே!

### 6. இரந்து பின்னிலை நிற்றல்

உழையுங் கழையும் மழையும் கவின்தோர்ந் தொருங்கிரப்பத்
தழையும் அழகிற் றிகழ்ந்தாய்! கரந்தைத் தமிழ்வரைவாய்க்
குழையுங் குமிழும் குறித்தேகும் அம்பினைக் கோட்டியொரு
பிழையு மிழைத்திலேன் என்னுழை எய்வதென்? பெண்ணணங்கே.

### 7. முன்னிலை யாக்கல்.

தன்னேய் இருந்தமிழ்த் தாய்சேர் கரந்தைத் தடவரைமேல்
மின்னேய் இடைப்பிடி மாதரைத் தீர்ந்தொளி மேவி, யலைப்
பொன்னேய் எழிலையிப் பூம்பொழில் நாணப் புறம்பரப்பிக்
கொன்னே தனிநின்ற கொள்கைஎன் னேவுரை? கோல்வளையே.

### 8. மெய்தொட்டுப் பயிறல்

கல்லார் இலாக்குறை காணுங் கரந்தையின் கண் அனிச்சம்
அல்லார் குழலில் அடிகளை யாமல் அணிவர் இடை
நில்லார் இனியெனத் தேர்ந்தும் நெருங்கும் நிரைச்சுரும்பீர்!
பொல்லார் உமைப்போ லிலையினிப் போமின்! புகழ்நிற்கவே.

---

4. அவை—கழகம் வேய்—மூங்கில். பாலிக்கும்—பகுந்தளிக்கும். (அருளும் எனின் வடசொல்) பருவரல்—துன்பம்

5. நுழை—நுண்மை. சால்பு—நிறைவு. ஆளுதல்—கூடுதல். வணங்க—இரந்து பின்னிற்க. வன்நெஞ்சம்—வற்புறுத்தும் உள்ளம்.

6. உழை—மான் (விழி) கழை—மூங்கில் (தோள்) கவின்—அழகு, தழையும்—பெருகும். குழை—காதணி. குமிழ்—மூக்கு. அம்பு—ஈண்டுக் கண்கள். கோட்டி என்றதனால் விற்போலும் புருவம் கொள்க.

## 9. பொய் பாராட்டல்

சீர்நின்ற நூற்றொகை தேர்ந்தார் கரந்தைத் திருமகள்! உன்
ஏர்நின்ற சாயலுக் காற்றுத மஞ்ஞைநின் றேங்குறுமால்,
நீர்நின்ற தாமரைக் கண்ணீர் நிறைதலும், நீள்நிலவவ்
வார்குன்ற மேறலும் நின்வாண் முகம்போல் வளம்பெறற்கே.

## 10. இடம் பெற்றுத் தழாஅல்

நம்புற்ற வான்கலை தேர்ந்தார் கரந்தை நறுமலையில்
கொம்புற்ற மாமலர் போன்ம்முகத் தேயிரு கூர்விழியாம்
அம்புற்ற வெம்மைநீத் தாடி மகிழ்ந்தின் பமைதிகொளப்
பம்புற்ற சோலையப் பைந்தடம் ஏற்றது பான்மொழியே.

## 11. வழிபாடு மறுத்தல்

சார்ந்தாரை ஞானந் தழுவுங் கரந்தையிற் சாந்தம்! உனை
நேர்ந்தாரை நன்மணங் கூட்டுவை யாதலின் நெஞ்சவலம்
ஆர்ந்தாரை நின்பால் அளிப்பனன் ஞர்துயர் ஆற்றிமுல்லை
சேர்ந்தாரை நாணுறக் காப்பதும் நின்கடன் தேர்ந்தறியே!

## 12. இடையூறு கிளத்தல் [நாணிக்கண் புதைத்தல்]

மோனைத் தொடைமுத லாமணி மும்மையும் முற்றகவித்
தேனைத் தரும்புல வோர்கரந் தைத்தமிழ் சேர்சிலம்பில்
மானைத் தளிரால் மறைத்தபின் வேடனின் மார்புதைக்கும்
ஆனைத் துரத்து மறத்தினைக் கண்டெனின் ஞரணங்கே.

---

7 தன்னேய்—தனக்குத்தானேஒத்த. இரும்—பெரிய, வலிய. ஏய்தல்—ஒத்தல். அலைப்பொன்—திருமகள். கொன்—வீண். கோல்வலை—தலைவி.

8. அல்ஆர்—இருள் போன்ற. அடி—காம்பு. நும்புகழ் நிலைக்க வேண்டுமெனின் மொய்க்காமல் செல்லுங்கள் என நெருங்கினான்

9. ஏர்—எழுச்சி; சாயல்—மென்மை; கண்ணீர்—கள்ளாகிய நீர் (அழும் என்பது சிலேடை (தவம்புரியக்குன்றேறும் என்பது குறிப்பு)

10. நம்பு—விருப்பம்; கொம்பு—கிளை: மாமலர்—தாமரை; பம்புற்ற—தழைத்துள்ள; பான்மொழி—தலைவி

11. ஞானம்—நல்லறிவு; சாந்தம்!—சந்தன மரமே! மணங்கூட்டுவை—நறுமணம் பூசுவாய் (மணம் முடிப்பாய் என்பது சிலேடை) முல்லை சேர்ந்தார்—முல்லைக்கொடியருகிருக்கும் என்னை (கற்புக்கடனறியும் என்பது சிலேடை) நாண்—நாணம் (தாலி என்பது சிலேடை) இது தலைவி கூற்று)

12. மும்மை—தொடை, அலங்காரம், மெய்ப்பாடு என்ற மூன்றும்; சிலம்பு—மலை; மானை.........கண்டேன்—மான்போலும் விழியைத் தளிர்போலுங் கையால் மறைத்து வேள்போலும் என் உளத்தைத் தாக்கும் ஆனைமருப்பொக்கும் நகிலினை வெளிப்படுத்தும் அறத்தினைக் கண்டேன் (மானைத் தளிர்களால் மறைத்து வேடனின் மார்பிலே மருப்பால் குத்துமாறு யானையை ஏவிவிடும் உன் மறத்தினைக்கண்டேன் என்பது சிலேடை)

### 13. நீடுநினைந்திரங்கல்

மன்றைப் பொருந்துநன் மாண்பார் கரந்தை மலையிடத்தே
கொன்றைப் புதுமலர் கொள்ளுஞ் சுணங்கணி கோலமுறு
குன்றைப் பொருந்திக் குளிர்வர ஆம்பலிற் கோங்கினையாம்
என்றைப் பொழுதினி லுண்ணுவெ மென்றுளம் ஏங்குறுமே.

### 14. மறுத்தெதிர் கோடல்

கண்மை அவாவுவர் வாழ்கரந் தைப்பொழில் காவலரென்
பெண்மை அவாவுவர், நாணந் தடுத்தெனைப் பின்னிழுத்தால்
"வண்மை அவாவுவர் மங்கையர்" என்றதொல் வாயுரையை
உண்மை அவாவுவர் ஒப்புவ ரோஉளம்? ஓர்ந்தறியே.

### 15. வறிதுநகை தோற்றல்

அவ்வைத் தமிழ்முதல் ஆயிரங்கோடி அருந்தமிழ்நூல்
செவ்வைப் பயில்கரந் தைப்பதி சேர்ந்தவர் சிந்தையெனக்
கொவ்வைக் கனியிடைக் கொம்புறு தேன்வரக் கோவையொடு
மவ்வல் அரும்பிடும் வாய்மைகண் டுள்ளம் மகிழ்ந்ததுவே.

### 16. முறுவற் குறிப்புணர்தல்

"ஊனே உனைப்பிரி வே"னெனும் ஆவியை ஓம்புதற்குத்
தேனே எனுமொழிச் செத்திரு வாணகை சேர் நிலவைத்
தானே விளக்குமித் தையலின் தண்ணளி; தாழ்வகல
நானே கரந்தையின் செந்தமிழ்ப் பேற்றினை நண்ணினனே.

### 17. முயங்குத லுறுத்தல்

நூலைப் பயில்கரந் தைப்பதி நேர்ந்த நுசுப்பிலவர்
வேலை செறிந்திரு வில்வளைத் தென்புலம் வென்று,திரு
மாலைப் புரையதன் மாணகம் ஈந்தொளி வார்தரள
வேலைப் படிந்தமிழ் துண்ணற் கிசைவ தென்மெய்த்தவமே!

---

13. மன்று—மன்றம்; சுணங்கு—தேமல்; கோலம்—அழகு; குன்றுஆம்பல், கோங்கு இவை முறையே—நகில், வாய், இதழ் நீரைக்குறிக்கும்; இச்செய்யுளும் சிலேடை:

14. கண்மை—கண்ணோட்டம்; வண்மை—வழங்குதல், இரக்கம்; தொல்வா யுரை—பழமையான உண்மை மொழி; தலைவி கூற்று

15. செவ்வை—செம்மையாக; கொவ்வைக்கனி—வாயிதழ்; மவ்வல்—காட்டு முல்லை (பற்கள்)

16. ஊனே—உடம்பே/ ஆவி — உயிர்; நகைசேர்நிலவு -- புன்முறுவல்; தண்ணளி—கருணை தண்ணளி முறுவற் குறிப்பினைத்தந்ததென்க

17 நுசுப்பிலவர்—இடையில்லாதவர் (தலைவி) திருமாலைப்புரைய—மார்பில் இலக்குமியை உடைய மாயோனை யான் ஒக்குமாறு; இச்செய்யுளும் சிலேடை

### 18. புணர்ச்சி மகிழ்தல்

நிலந்தேர்ந் துயர்ந்த நிறைதவத் தோர்புகழ் நீள்கரந்தைப்
புலந்தேர்ந் திருக்குமிப் பூவையின் வாய்விளை புத்தமிழ்தாம்
நலந்தேர்ந் தருந்திய பேரின்பம் யாவும், நலிந்துதவ
வலந்தேர்ந் தெழுந்தஅவ் வானவர்க் காயினும் வாய்த்திடுமே ?

### 19. புகழ்தல்

எண்ணெண் கலைகளும் இன்போ டொளிரும் எழிற்கரந்தைத்
தண்ணென் தடம்பயில் தாமரை காள்! நீர் தவஞ்செயினும்
பெண்ணென் றிலகியென் உள்ளங் கவர்ந்தவிப் பேரழகின்
கண்ணென் முகமுமென் கைகளும் ஒவ்வீர் கவின்தமக்கே.

## 3. வன்புறை

### 20. அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்

எண்ணுாத்த பாவலர் ஈண்டுங் கரந்தை இரும்பொழில்வாய்ப்,
பண்ணுாத்த தேமொழிப் பைங்கிளி யே!பழம் பான்மையிலே
கண்ணுாத்த ஆயமும் ஐயுரு வண்ணம் கலன்திருத்தி
விண்ணுாத்த கூந்தலும் நீவினன் வேண்டா வெருவரலே.

### 21. பெருநயப்புரைத்தல்

காவியை முல்லையை ஆம்பலை மேவிக் கரந்தையிலென்
ஆவியைத் தாங்குமிவ் வம்புயம் போன்ற அணிமலர்எவ்
ஓவியப் பொய்கையுட் கண்டனிர் ? காணின் ஒருங்கெழுந்தவ்
வாவியைக் காட்டுவி ரேலுமை வாழ்த்துவன் வண்டினமே !

### 22. (அ) தெய்வத்திறம் பேசல்

நாடும் மொழியுநம் கண்ணெனப் போற்றி நவைதவிரப்
பாடும் புலவர்கள் கூடுங் கரந்தைப் பனிவரைநாம்
கூடும் படிவிதி கூட்டிய தாலிரு கோங்குசுமந்
தாடுங் கொடியிடை யாய்தவிர் வாட்டமும் ஐயமுமே.

---

18. நிலம்—உலகியல்; புலம்—இடம், அறிவு; பூவை - தலைவி; வலம்-வெற்றி
19. தடம்—மலர்வாவி; கவின்—இயற்கையழகு
20. எண்—கருத்து; ஈண்டும்—குழுமியிருக்கும்; பழம்பான்மை—செவிலியணிவித்தமை; ஆயம்—தோழியர்; வெருவரல்—அச்சம்
21. காவி—நீலோற்பலம்; மேவி—பொருந்தி; அம்புயம்—தாமரை; ஓவியப் பொய்கை—அழகிய குளம்; வாவி—குளம்
22. (அ) நவை—தீமை; வரை—மலை; விதி—ஊழ், தெய்வம்; கோங்கு — நகில்

### (ஆ) இதுவுமது

நோலேன் ஒருதவ மாயினும், நுண்ணிய நோக்கமைந்த
நூலே வளர்கரந் தைப்பொழில் தாமரை நுண்தடத்திற்
சேலே விழிஎனுஞ் செந்திரு வேயுனைச் சேர்ப்பதற்குப்
பாலே துணையெனின் யார்பிரிப் பாரினிப் பாரகத்தே.

### 23. பிரியேனென்றல்

பண்பெற்ற நற்றமிழ் பாவும் கரந்தைப் பனிவரைமேல்
பெண்பெற்ற நற்கவின் பேறெலா முற்றேன் பிரிதலெவன் ?
எண்பெற்ற நெஞ்சினுக்கு ஓவிய மேயென் இருவிழியே !
கண்பெற் றழிப்பதற் கொப்புவர் யார்உரை காரிகையே ?

### 24. பிரிந்து வருகென்றல்

ஆவிற் பிரிந்தயல் ஆடும் இளையகன் றன்னவயற்
காவிற் பிரிந்து வருவேன் கரந்தைக் கவிஞரின்வெண்
பாவிற் பிறந்த தளையொப்ப வேறு படாதெனுரை;
மாவிற் பிளந்த வடுவொத்த கண்ணி மடமயிலே

### 25. இடம் அணித்தென்றல்

தொடைநயங் கூர்ந்த கவிபோற் கரந்தையிற் றூமொழியாய் !
கடைசிவந் தாடிக் காதள வோடுமிக் கண்ணிரண்டின்
இடைதிகழ் மூக்கினை ஏய்ப்பநம் ஊரை இடைப்படுக்கப்
புடைதிரள் பொற்றை யிலையெனின் ஒன்றுநம் பொன்னகரே.

## 4.

### 26. தெளிவு.

சங்கத் தமிழ்தெரி வார்கரந் தைப்புகழ் சான்றதமிழ்ச்
சங்கத் தமிழ்தெரி நாவினர் சொல்லும் தவறுமென்ரு
சங்கத்தமிழ்தெரி யாதநெஞ்சேயினிச் சங்கைதவிர்
சங்கத் தமிழ்தெரி யாரலர் நம்முயிர்த் தாங்குவரே.

---

(ஆ) நோலேன்—முயலேன்; பால்—விதி; பாரகத்தே இனி யார்பிரிப்பார் என்றும் யார் பிரிப்பார் அகத்தே இனிப்பார் என்றும் கொள்க

23. பண்—இசை; பாவும்—பரவும்; கவின்பேறு—அழகாற் பெறும் இன்பம் ஓவியம்—பெறற்கருமை விளக்கி நின்றது

24. ஆ—பசு; தளை—வெண்டளை; கண்ணி—கண்ணையுடைய

25. ஏய்ப்ப—ஒப்ப; புடை—பக்கம்; பொற்றை—சிறுமலை;

26. சங்கத்தமிழ்—சங்க நூல்கள்; சங்கத்தமிழ்—கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீட்டு நூல்கள்; ஆசங்கத்து அமிழ் தெரியாத—ஆசங்கையில் அமிழும் தெரியாத நெஞ்சே; சங்கை—ஐயப்பாடு; சங்கத்தமிழ்—புணர்ச்சியால்வரும் இன்பம்! இச்செய்யுள் மடக்கணி

## 5. பிரிவுழி மகிழ்ச்சி.

**27. செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல்**

மயல்தங்கு நெஞ்சே! என் ஆவியைத் தாங்கி மடமயில்போல்
கயல்தங்கு தாமரை கோங்கிரண் டார்ந்து கரந்தையினிற்
செயல்தங்கு பாதம் சிலம்பலம் பக்கையிற் சீலையுடன்
புயல்தங்கு சோலையிற் போவதென் னே!உயிர்ப் பூங்கொடியே.

**28. செல்லும் கிழத்தி செலவு கண்டு பாகனொடு சொல்லல்**

தொண்டால் தமிழ்வளர்த் தோங்குங் கரந்தையிற் றேழியர்தாம்
கண்டால் வரும்பிழை என்றுமுன் பார்த்துக் கனிதமிழை
உண்டால் எனமகிழ் என்னுளம் பின்வரல் ஓர்ந்தொதுங்கும்
வண்டார் மலர்க்கொடி காண்கநற்பாக! இம் மாநிலத்தே.

## 6. பிரிவுழிக் கலங்கல்.

**29. ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்**

கொங்குறு மாமலர்ச் சூழ்வரும் தும்பிக் குழாமெனஏர்
பொங்குறும் ஆயம் நின் றேத்தப் புகுமயில் பூந்தமிழ்ச்சீர்
தங்குறு நற்கரந் தைப்பொழில் சார்ந்து தழுவியுயிர்
பங்குறச் சென்றது மாயமல் லால்நிகழ் பான்மையதே?

**30. வாயில்பெற்றுய்தல்**

வாசத் தமிழ்பயில் வார்கரந் தைப்புகழ் வாழ்த்தும்நெஞ்சே
பேசத் தருங்கவின் பெய்வளைக் காகநீ பேதுறல்;காண்
நேசத் துடன்கதிர் செல்வழிச் செல்லும் நெருஞ்சியெனப்
பாசத் துடன்வரும் பாங்கியர் நாப்பணோர் பைங்கிளியே.

**31. (அ) பண்பு பாராட்டல்**

இயலுங் கரந்தை இசைத்தமிழ் ஒன்றேஇணையயினன் றிக்
குயிலும் கிளியுமென் பூவையும் யாழும் குறிப்பினவள்
பயிலும் மொழிக்கியை யாப்பொருள் இல்லாத பான்மையினால்
அயிலும் கணையுநன் னோக்க மொவ்வா அருளாமையினே.

---

27. மயல்—மயக்கம்; கயல்தங்கு தாமரை—விழியோடுள்ள முகம்; செயல்—செயலை; அசோகந்தளிர்—கடைக்குறை; புயல்—மேகம்

28. ஒதுங்கும்—நடக்கும்; இம்மாநிலத்தே தொண்டால் தமிழ் வளர்க்குங் கரந்தை என்க.

29. தும்பி—வண்டு; குழாம்—கூட்டம்; ஏர்—அழகு; மாயம்—வியப்பு;

30. வாசம்—மணம்; பேதுறல்—மயங்கற்க! கதிர்—கதிரவன்; பாசம்—பற்று; நாப்பண்—நடு.

(ஆ) இதுவுமது

நீர்நின்று வாடுசெந் தாமரை யன்றி நெடுவிசும்பின்
கார்நின்று தேயுமவ் வான்மதி தானும் கரந்தையினிற்
சீர்நின்ற நாவலர் ஓர்புடை யொப்பெனச் செப்புவதால்
ஏர்நின்ற நங்கையின் வாண்முகக் கியாதும் இணையிலையே.

### 32. பயந்தோர்ப்பழிச்சல்.

பூழியர் சோழியர் சேரரிம் மூவரும் போற்றமிழிற்கு
ஊழியம் செய்கரந் தைத்தமிழ் ஒக்குமென் ஓருயிராம்
ஏழையைப் பெற்றெனக் கீந்தவர் இவ்வுல கின்பமொடு
வாழியர் முந்நீர் மணலினும் ஊழி வளம்நிறைந்தே!

### 33. கண்படைபெருது கங்குல்நோதல்.

தஞ்சையின் நற்புகழ் தாங்குங் கரந்தையைச் சாரகில்லார்
நெஞ்செனக் காரிருள் வெள்ளத் தழுந்தி நிலைதளர்வேன்
அஞ்சலெ னக்கரம் நீட்டியெ டுத்தெனை ஆற்றுதற்குச்
செஞ்சுடர் என்றெழு வான்குணக் காய திசையிடத்தே.

## 7. இடந்தலைப்பாடு.

### 34. தந்த தெய்வம் தருமெனச் சேறல்.

கேட்குந் தொறும்விடை செப்பிக் கரந்தைக் கெழுதகுசீர்
மீட்குந் தமிழ்ப்புல வோரென மேற்றந்த மெல்லியலை
வாட்கண் அருட்கனி வாயமுதாகிய வஞ்சியினை
வேட்குந் தொறுந்தெய்வம் நல்குநெஞ் சேவிரை மேம்பொழிற்கே

### 35. முந்துறக் காண்டல்.

அரந்தை கெடுத்தறி வாக்குந் தமிழ்த்தாய் ஆட்சிசெயும்
கரந்தைத் தமிழ்ச்சங்கப் பாவலர் கற்பனைக் காவியமோர்
நரந்தைக் கமழ்குழல் நங்கை உருக்கொடு நண்ணிவரும்
விருந்தைத் தவமின்று நம்கண்கள் காண விளக்கியதே

---

31. (அ) அயில்—வேல்; கணை—அம்பு; நோக்கம்—கண்கள்; (ஆ) விசும்பு—ஆகாயம்;

32. பூழியர்—பாண்டியர்; சோழியர்—சோழர்; ஊழியம்—தொண்டு; ஏழை—தலைவி, முந்நீர்—கடல்

33. சாரகில்லார்—அழுக்காற்றினுற் சாராதவர்; அஞ்சல் — அஞ்சாதே; கரம்—கைகள்; குணக்கு—கிழக்கு

34. மேற்றந்த—பல்பிறவிகளிலும் தந்த; வாட்கண்—வாள் போலும் அல்லது ஒளிவீசும் கண்கள்; வேட்கும்-விரும்பும்; தெய்வம்-விதி; விரை-விரைந்து செல்க.

35. அரந்தை—துன்பம்; நரந்தை—நறுமணம் ஒருபுல்; உருக்கொடு—வடிவுகொண்டு; விருந்தை—புதுமையை.

### 36. முயங்கல்.

கற்றவர் சேர்கரந் தைப்புகழ்ப் பாவலர் காதலிக்கும்
சொற்றிறந் தேர்ந்ததொல் காப்பியர் நூலுள் துரிசகன்ற
குற்றுக ரக்குரை நச்சர் வகுத்திடுங் கொள்கையினைப்
பற்றற நோக்கின் இலக்கியம் யானுமிப் பாவையுமே.

### 37. புகழ்தல்.

மின்னும் மதியுமவ் வான்புகுந் தேறின மெல்லியலின்
மன்னும் இடைஒளி மாமுகம் பார்த்தம் மருட்சியினல் ;
துன்னுங் கலைமகிழ்ந் தேத்துங் கரந்தையில் தோகையைக்கண்
டின்னும் வெளிவரா மாமயில் சாயலுக் கேங்குறுமே.

### 38. ஆயத்துய்த்தல்.

நிதியற்ற ஏழைக்குப் பொற்குவை முன்வந்து நேர்ந்ததெனத்
துதியுற்று செந்தமிழ்த் தூய்மையைக் காத்துயர் தொல்கரந்தைப்
பதியுற்று வந்தெனக் கின்பம் பயந்தபொற் பாவைநல்லாய் !
மதியற்ற மீன்களிற் றேடுறும் ஆயம் மருவுகவே.

## 8. பாங்கற் கூட்டம்.

### 39. தலைவன் பாங்கனைச் சார்தல்.

தூரியத் தாலெழு தாதநல் லோவியத் தூமொழியை
ஆரியத் தால்நிகழ் ஆங்கிலத் தால்அழி யாததமிழ்
வீரியத் தாலிசை மேவுங் கரந்தையில் வேண்டினையேல்
மாரியொத் தானெரு நண்பனு ளான்தரும் வாழியவே !

### 40. பாங்கன் உற்றது வினதல்.

எல்லா நலங்களும் இன்றமிழ்க் கல்வியும் ஏய்ந்தகவி
வல்லார் புகழ்கரந் தைப்பயில் மாணவ ! வாழ்விலெதும்
இல்லார் எனமுகம் வாளிழந் துள்ளமின் றேங்கவுமுன்
மல்லார் புயம்மெலி வாகவும் என்கொலோ வந்ததுவே ?

---

36. சொற்றிறம்—சொற்களின் இயல்பு; துரிசு—குற்றம்; அகன்ற—நீக்கிய; குற்றுகரக்கு—குற்றுகரப் புணர்ச்சிக்கு (உயிர்வரின் ஏறஇடங்கொடுத்துத் தானும் கெடாது ஒருங்கிசைக்கும் என்பார்; தொல்—எழுத்து 105 ஆம் நூற்பாவுரையுள் நச்சினர்க்கினியர்; பற்றற—நடுவுநிலையோடு; பாவை—தலைவி.

37. இடையையும் முகத்தையும் கண்டுநாணி மருண்டு மின்னும் மதியும் வான் ஏறின; தலைவியின் சாயல்கண்டு நாணி மயில்வெளிப்படவில்லை என்க.

38. நிதி—செல்வம்; துதியுற்று—வணங்கி வழிபட்டு; மதி—நிலவு; மீன்-விண் மீன்கள் ; மருவுக—சென்று சேருவாயாக.

39. தூரியம்—தூரிகை வண்ண எழுதுகோல்; வீரியம்—வீறு; இசை—புகழ்; மாரி—மழை; தரும்—கொணர்ந்துதருவான்.

### 41. தலைவன் உற்ற துரைத்தல்.

பொழியும் முகில்போற் கவிமாரி பெய்யும் புகழ்க்கரந்தை
மொழியும் அறநூல் அறிவுமுன் தெவ்வை முனையகத்தே
அழியும் படிவெலும் ஆண்மையும் இன்றோர் அணங்கினிரு
விழியம் பிடைஎதி ராற்றகில் லாதுரம் வீழ்ந்தனவே.

### 42. (அ) கற்றறி பாங்கன் கழறல்.

செல்வன் உமாமகேசன்மனத் தூன்றித் திகழ்கரந்தைச்
சொல்வன் புலவர்கல்லூரியிற் கற்ற துணிவுடைய
செல்வன் எனத்தெளிந் தேனொரு மங்கையின் சேல்விழிசேர்
வில்வன்மை யாலழிந் தாயுரன் என்னே விளம்புவதே?

### (ஆ) இதுவுமது.

கன்னடம் மாமலை யாளந் தெலுங்கைக் கருவுயிர்த்தாள்
இன்னிடம் ஆய கரந்தையில் மேவி இருங்கலைநூல்
தன்னிட மாகமுன் கற்றநண் பா! ஒரு தையலினேர்
பின்னிடுங் கூந்தலிற் சிக்கினை என்பதென் பேதைமையே?

### 43. கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

உண்டாற் றெரியுமவ் வானமிழ் தின்பம் உடற்பிணியைக்
கொண்டாற் றெரியுமத் துன்பக் கொடுமைநற் கோதையினைக்
கண்டார் உரைத்திலர் கட்டுரை யாவும் கனிதமிழ்நூல்
தண்டார், கரந்தையைச் சாரார் உரையொக்குஞ் சால்பினவே.

### 44. கிழவோற் பழித்தல்.

வாடாத செந்தமிழ் வாழுங் கரந்தையின் வண்டமிழ்நூல்
பீடாகக் கற்றவுன் பேரறி வாகும் பெருங்களிறவ்
ஆடாத தோகையின் கண்வலைப் பட்டாங் கழுங்குமெனின்
ஈடாக யாருளர் நின்றனக் கிவ்வுல கேழினுமே?

---

40. தலங்களும் கல்வியும் ஏய்ந்த மாணவ! என்க. எது—எப்பொருளும்; வாள்—ஒளி; மல்ஆர்—மற்போரால் வலிய; புயம்—தோள்.

41. முகில்—மழை; மாரி—மழை; தெவ்—பகை; முனை—போர்க்களம்; உரம்—மன வலிமை.

42. உமாமகேசன் — கரந்தைப் புலவர் கல்லூரியைத் தோற்றுவித்துப் பல லாண்டுகள் சங்கத் தலைவராயிருந்து பெருந் தொண்டாற்றிய பெருமகன்; சேல்விழிசேர் வில்வன்மை—தலைவியின் காதல் நோக்கு; (ஆ) ஏர்—அழகு; கூந்தலிற் சிக்கினை என்பது நயம்.

43. கட்டுரை — இடித்துக் கூறும்சொற்கள்; கனி — சுவை, முதிர்ச்சி; தண்டார் — நெருங்கிப் பயிலாதவர்; சாரார் — நெருங்காதவர்; சால்பின— தன்மையன.

### இதுவுமது.

வாடும் இடைக்கொடி மாதர் வளைத்திட வண்டமிழோர்
கூடுங் கரந்தையிற் கொண்ட நின் வன்மை குலைந்ததெனின்
நீடுங் கடலையோர் மின்மினி காயும், நெருப்பினையும்
பாடும் அளிக்குலம் பற்றிப் பறக்குமிப் பாரிடத்தே.

### 45. கிழவோன் வேட்கை தாங்கற் கருமைசாற்றல்.

விள்ளும் நெருப்பென மெய்யினைக் காதல் வெதும்பவுமுன்
உள்ளம் சுடுமுரை என்னுயிர் தீய்க்கவும் ஒண்டொடியின்
கள்ளம் மிகுவழி ஞானங் கவரவும் காண்பவர்கள்
எள்ளும் படிப்பிறந் தேன்கரந் தைப்பதி என்வினையே.

### 46. பாங்கன் தன்மனத் தழுங்கல்.

சீரார் கரந்தையின் செந்தமிழ் கற்றஇச் செம்மலுளம்
காரார் குழற்கரு வண்டே, முகமதி கண்கயல்கள்
வாரார் நகிலிரு கோங்க மெனும்பிறை வாணுதலைத்
தாரார் இவரென வாடும்என் ருலினிச் சாற்றலென்னே ?

### 47. தலைவனே டழுங்கல்.

செருமா மகள்புகழ்ச் சேயே செழுந்தமிழ்ச் சீர்கரந்தை
வருமா னிடத்துளம் வைத்திளைத் தாயினி வான்வெளியிற்
கருமா முகில்செங் கதிர்மறைத் தாலதைக் கையெடுத்தாங்
கொருமா னிடர்போய் விலக்கலுண் டோவிவ் வுலகினிலே.

### 48. எவ்விடத் தெவ்வியற்றென்றல்

அரும்புகழ் மிக்கவி ராதா கிருட்டின ஆண்டகையால்
வரும்புகழ் சங்கக் கரந்தையில் வந்துன் மனங்கவர்ந்த
சுரும்புளர் கோதையின் நல்லியல்யாதவர் தோழமையால்
விரும்பிடம் யாதுசெந் தாமரையோ உரை ! மேலவனே.

---

44. பீடாக — பெருமையாக; ஆடாத தோகை — தலைவி; அழுங்கும் — துன்புறும், ஈடு—ஒப்பு; (ஆ) கொடியிடை மாதர்; வன்மை—உரன்; மின்மினி—ஒரு சிறு வண்டு; காயும்—வற்றச் செய்யும்; அளிக்குலம்—வண்டுக் கூட்டம்.

45. விள்ளும்—பெருகி எரியும்: வெதும்ப—சுட; ஒண்டொடி—தலைவி; கள்ளம்—உளத்தை வயப்படுத்தல்; போதம்—நல்லறிவு; எள்ளும்—நகைக்கும்.

46. செம்மல்—தலைவன்; கார் - கருமை, மேகம் போன்ற; வார்—மார்புக் கச்சு; வாணுதல்—ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவி; தாரார் — தரமாட்டார்; சாற்றல்—சொல்லுதல்.

47. செரு, மாமகள் — போர்த் தெய்வமாகிய கொற்றவை; சேய் — வீரன் மான்—தலைவி; செங்கதிர்—சூரியன்.

### 49. அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

வாவியும் சோலையும் ஒன்று இணைந்து மலர்ந்ததெனக்
காவியும் முல்லையும் கஞ்சமும் காந்தளும் கண்ணுறுமோர்
ஓவிய மாயொளிர் மாமயி லாமியல், ஒண்டமிழ்சேர்
காவியம் பூக்குங் கரந்தைப் பதிவளர் காவிடமே.

### இதுவுமது.

மழையாம் குழல்,மொழி யாழாம், சுழல்விழி மாட்சிமைசேர்
உழையாம், எழில்திகழ் கொம்பருக் கோரிடை உண்டென்பதும்
பிழையாம் கழையிரு தோளாம் இயல், இடம் பூம்பொழிலாம்
தழையா வளர்கரந் தைத்தலத் தென்னுயிர் தாங்கினர்க்கே.

### 50. பாங்கன் தலைவனைத் தேற்றல்.

நாளுந் தமிழ்ப்பணி நாட்டா ரியற்ற நலங்கமழ்சீர்
ஆளும் கரந்தை அணிபொழில் வாய்நின் றகக்களிற்றைத்
தோளும் குழலும் துணைக்கொண்டு கட்டிய தோகைகண்டு
மீளும் வரையுமுன் வாட்டந் தவிர்கதிர் வேலவனே.

### 51. பாங்கன் குறிவழிச் சேறல்.

மோனைக் கவியரசானவர் தொண்டு முகிழ்கரந்தைக்
கோனைப், பெரும்படை தாக்கினும் ஊக்கம் குலைவுபடா
தானை,ம ருப்பால் வணக்கிய மானத் தடங்குடைந்து
தேனைத் தரும்பொழில் வாய்விளை யாடிடச் சேருமன்றே?

### 52. பாங்கன் இறைவியைக் காண்டல்.

மாணிக்க மென்கொம்பர் மான ஒசிந்து மரகதஞ்சேர்
ஆணிப்பொ னுற்செய்தோ ராவியும் கூட்டி அழகொழுகப்
பேணித் தமிழ்வளர்ப் பார்கரந் தைப்பொழில் பெண்ணுருவாய்க்
காணப் புறப்படு வாளவ ளேயிது காண்பொழிலே.

---

48. எவ்வியற்று — என்ன நிலைமையுடையது என்று கேட்டல், இராதா கிருட்டினன்—தமிழவேள் அவர்களின் இளவல். சங்கத்தைத் தோற்றுவித்து வளர்த்து அண்ணனிடம் அளித்த பெருந்தகையாளர்; சுரும்பு—வண்டு; உளர்—மொய்க்கும்; கோதை—மாலை (தலைவி).

49. வாவி -- மலர்ப்பொய்கை; இணைதல் — நீர்ப் பூவும் நிலப் பூவும் கலந்து காணல். காவி—நீலோற்பலம்; கஞ்சம்—தாமரை; கண்ணுதல்—கலந்திருத் தல். இயல்—உருவ இயல்பு; கா—இடம்; கா—சோலை.

(ஆ) மழை—மேகம்; குழல்—கூந்தல்; உழை—மான்; எழில்—அழகு; கொம்பர்—பூக்கிளை (தலைவி); பிழை—தவறு; கழை—மூங்கில்; தழையா— தழைத்து.

50. நாட்டார்—நாட்டு மக்கள்: புலவர் கல்லூரித் தலைவராயிருந்து சங்கத் தொண்டு புரிந்த நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களையும் குறிக்கும் அகக்களிறு—நெஞ்சமாகிய யானை; தோகை—மயில் (தலைவி)

### 53. இகழ்ந்ததற் கிரங்கல்.

களிவளர் நற்றமிழ் காணுங் கரந்தைக் கடிபொழில்வாய்
அளிவளர் கூந்தல் அணிமயி லாயவர் அங்கமெலாம்
ஒளியுரு வாமெனின் கண்டுரு காருள ரோவறியா(து)
இளிவரல் கூறினன் என்போல வன்பினர் எங்குளரே ?

### 54. தலைவனை வியத்தல்.

வருமா ணவர்க்கருள் செய்யும் கரந்தை மலர்ப்புனத்தே
யொருமான் விழிக்குமவ் வுந்திச் சுழிக்கும் ஒளிவடஞ்சேர்
இருமா தனக்களிற் றிற்கும் எதிர்ப்பிழைத் தேகினுமவ்
வரிமா னிடைத்தப்பி வந்ததெவ் வாறந்த ஆண்டகையே !

### 55. தலைவியை வியத்தல்.

தொன்மை அறிவரி தாந்தமிழ் சீர்த்திச் சுடர்கரந்தை
நன்மை அறிபெரும் நம்பியைச் சூழ்ந்து நலிபிணியை
இன்மை உறச்செயும் மாமருந் தாகும் இனியவனின்
வன்மை உளமலர் வாழும் திருவுமிவ் வாணுதலே.

### 56. தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல்.

முத்தும் பவழமும் நீலமும் சேர்ந்து முகிழ்த்தகொடி
தத்தும் கடல்வரு சங்கிரண் டார்ந்து தளர்ந்தசைந்து
தொத்தும் படிக்கொரு கொள்கொம்பு நோக்கலைத் தூயதிசை
பத்தும் புகழ்வளர்ப் பார்கரந் தைப்புனம் பார்த்தனனே.

### 57. தலைவன் சேறல்.

மழைநோக்கி நிற்குமோர் மாமயி லோமுன் மணந்தகன்ற
உழைநோக்கி நிற்குமோர் மான்பிணை யோவென் உரைநிலையாப்
பிழைநோக்கி நிற்குமோர் பெண்ணணங் கோதமிழ்ப் பேரணங்கின்
விழைநோக்கி நிற்பவர் வாழ்கரந் தைப்புனம் மேவுருவே.

---

51. கவியரசு—கவி செய்வதில் அரசர்; புலவர் கல்லூரிப் பேராசிரியராகவும் தலைவராகவும் இருந்து சங்கப் பணி புரிந்த கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளையவர்களையும் குறிக்கும்: கோன்—தலைவன்; குலைவுபடாதான்—தோலாதவன்.

52. மான—ஒப்ப; ஆவி—உயிர்; அவளே—தலைவியே.

53. களி—மகிழ்ச்சி; கடி—நறுமணம்; அளி—வண்டு.

54. மானுக்கும் ஆற்றுச் சுழிக்கும் களிறுகளுக்குந் தப்பினலும் சிங்கத்திடைத் தப்பிவந்ததெவ்வாறு எனத் தொனிப்பொருள் காண்க; அரிமானிடை—அரிமாவின் வயிறு போன்ற இடுப்பு.

55. இவ்வாணுதல் மருந்தும் திருவும் ஆம் என்க.

56. தொத்தும்—பற்றி ஏறும்; நோக்கலை—ஆராய்தலை.

### 58. தலைவியைக் காண்டல்.

ஆகந்த ழைத்தென தாருயிர் வாழ அருந்தமிழ்கூர்
நீ. கந்த சாமியின் தொண்டால் நிறைசங்கம் நேர்கரந்தைப்
பூகந்த ழைத்துயர் போகந் தருமெழிற் பூம்பொழில்வாய்
சோகந்த விர்த்திடும் தோகைவந் தென்முனர்த் தோன்றியதே.

### 59. கலவியின் மகிழ்தல்.

புலந்தொறும் வேறு புகுமின்பம் யாவும் பொருந்திமிக
நலந்தரு மாமிந்த நங்கையின் ஆகமிந் நானிலத்தில்
வலந்தரும் வீடெனும் மாதவர் மாதவர் வாயமுதைக்
கலந்தொரு நாளினும் கண்டதுண் டோவிக் கரந்தையிலே.

### 60. புகழ்தல்.

எண்ணிற்கும் நற்றமிழ் சேரும் கரந்தை எழிலரசி
கண்ணிற்கும் வாய்க்கும் துடைக்கும்ஒவ் வாமற் கடலகம்புக்
குண்ணிற்கும் சேலும் பவழமும் வாளையும், ஒண்டொடியின்
பண்ணிற்குந் தீங்குரல் ஓர்ந்து பறந்ததப் பைங்கிளியே.

### 61. பாங்கியொடு வருகெனப் பகர்தல்.

அயிரா துரைத்தறி யாமை தவிர்த்திடும் ஆசிரியப்
பயிரார் கரந்தையின் பைந்தமி ழாகிப் பழகியவென்
உயிரா கியவெழிற் பாவையன் னாய்! இனி உன்னருகே
உயிரா கியநறும் பாங்கியும் பின்வர ஒங்குகவே.

### 62. பாங்கிற் கூட்டல்.

புதிதுண்ட செந்தமிழ் பூக்குங் கரந்தைப் பொழிலகத்தே
துதிகொண்ட பாங்கியர் சோகந் தவிர்க்கமுன் தோன்றி,யவர்
மதிகண்ட அல்லியின் வாண்முகம் பூக்கவும் மண்புதைந்த
நிதிகண்ட ஏழையின் செஞ்சங் களிப்பவும் நேர்ந்துசெல்லே.

---

57. மழை—கார் மேகம்; உழை—மான்; பிணை—பெட்டை; உரை—பிரியேனென்ற உரை; பிழை பிரிந்த குற்றம்; விழை—விழைவு, விருப்பம்.

58. நீ. கந்தசாமி, தமிழவேளவர்களின் தொண்டிற்குத் துணையாய் பல்லாண்டுகள் சங்க அமைச்சராயிருந்து அரும்பணி புரிந்த பேரறிஞர்; பூகம்—பாக்கு மரம். ஆவி நிலைக்கப் பொழிலிடத்துத் தோகை என் முன் தோன்றிய தென்க.

59. புலம்–ஐம்புலன்; வலம்–வெற்றி; மாதவர்–தவசிகள்; மாது–அவர்-பெண்டிர்.

60. எண்—சிந்தனை; ஓர்ந்து—நினைந்து.

61. ஆசிரியராகிய பயிர்கள் நிறைந்த கரந்தை. தான் உயிராகலின் அருகே உயிர் என்றான். அயிராது—ஐயுறாது.

62. 'இன்' இரண்டும் உவமஉருபுகள். துதி—வணக்கம்.

# 9. பாங்கி மதியுடன்பாடு.

(முன்னுற உணர்தல்)

### 63. (அ) ஐயமுற் றோர்தல் (நாற்றத்தாலாராய்தல்)

பண்ணுறும் பாவலர் சூழுங் கரந்தைப் பதியிடத்திற்
சுண்ணமும் சந்தனச் சாந்தும் புழுகும் துதைமலரும்
தண்ணறும் மான்மதச் சேறுமித் தையலைச் சார்ந்ததென
எண்ணுறும் என்மனம்; இம்மணம் எவ்வா றியைந்ததுவே ?

### (ஆ) இதுவுமது (தோற்றத்தாலாராய்தல்)

கூடிய நற்புகழ் சேர்கரந் தைப்பதி கோகிலஞ்சேர்
பீடியற் சோலையிற் பெண்ணணங் காகுமிப் பேதையுடல்
வாடிய தோர்வணம் காட்டினும் தோளுமிவ் வாணுதலும்
நீடிய தோர்கவின் நேர்ந்ததற் கென்னே நிகழ்ந்ததுவே ?

### (இ) இதுவுமது (பிறவகையாலாராய்தல்)

சேவிளங் கன்றெனத் துள்ளிநன் காடுமிச் சேயிழையாள்
பாவிடுஞ் சீர்கரந் தைப்பதி சேர்ந்து பயில்பவர்போல்
காவிடைத் தான்தனி யேபயின் றெம்மைக் கடிந்தொழுகி
மேவிய நல்லமிழ் தாகிய உண்டியும் வேண்டலளே.

### (ஈ) இதுவுமது (செய்வினை மறத்தல்)

பராவுறு மாமலர் போற்றிசெய் பைந்தமிழ்ப் பண்புறுசீர்
இராசகோ பாலரகுநாத ராசாளி யார் வளர்க்க
விராவுறுமுத் தமிழ் மேவுங் கரந்தையை வேண்டலர்போல்
ஒரோவழி யன்றியெப் போதும் வினையை ஒளிப்பதென்னே ?

### 64. ஒழுக்கத்தாலையந்தீர்தல்.

நிலையாய தொண்டே நிகழ்த்திக் கரந்தையில் நின்றுவளர்
தலையாய சங்கத் தமிழ்தரும் தண்மையைத் தாங்கிஒவ்வோர்
கலையாக நாளும் மதிமுற்ற வோங்குங் கவின்பிறையை
அலையாமற் காணுமோர் தெய்வமென் பார்வணங் காயிழையே.

---

63. புழுகு—மான்மதம்; (ஆ) மணம்—வண்ணம். (இ) சே—காளை. பாவிடு—பரவும்

64. கலைவளர்க்கும் மதிவாணரைத் தொழுதல் மரபாகலின் இவ்வாறு கூறினாள்.

(ஈ) இராசாளியார் :– அரித்துவாரமங்கலத்தில் வாழ்ந்த ஒரு பெருமகனார்- தமிழ்—தமிழ் இசை வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடுகொண்டவர். சங்கத்திற்குப் பல்வகையாலும் உதவி வளர்த்தவர்.

### 65. சுனைநயப் புரைத்தல்.

காசறு சீர்த்திக் கரந்தையைப் போலுநற் காரிகையாய்!
பூசுறு சாந்தும் புனைமல ரும்முடன் போக்கலின்றித்
தேசுறு வேர்வையும் செங்கணும் சேர்க்குமத் தீஞ்சுனையைப்
பேசுற வென்னுளம் வேட்டனன் எங்கதைப் பேசுகவே?

### 66. சுனை வியந்துரைத்தல்.

தாய்மொழிக் காவியு மீவார் கரந்தையில் தையலுன்போல்
வாய்விளர்ப் பேறவும் வாள்விழி சேப்பவும் வார்குழலில்
ஆய்மலர்க் கோக்கவும் ஆற்றலுண் டேலவ் வருஞ்சுனையில்
தோய்வதற் கார்விரும் பாரிந்த சோலையிற் சொல்லுகவே?

### 67. தகையணங் குறுத்தல்.

விரியாத புன்மனத் தாலிகழ் வார்க்கும் விருப்புடனே
நெறியாக நற்றமிழ் நேரும் கரந்தை நெடுவரைமேல்
கரியாக யானின்று காட்டினல் லாற்கவின் காட்சியினல்
தெரியாத வர்மலைத் தெய்வமென் றேயுனைச் செப்புவரே.

### 68. நடுங்க நாட்டம்.

நாட்டிற் கணிகலன் நாவல ரன்னவர் நல்லியல்பைப்
பாட்டிற் படைக்கின்ற பாவலர் வாழுமிப் பைங்கரந்தைக்
காட்டிற் றிரிகரி கண்டுளம் அஞ்சிக் கலங்கினன்முன்
கோட்டிற் குருதியும் கோபமு மாய்வருங் கொள்கைகண்டே.

(குறையுற உணர்தல்)

### 69. பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்.

ஓங்குதொல் காப்பிய நூற்றுணை யாக ஒளிர்கரந்தைத்
தேங்குமி லக்கியச் சீரறிந் தின்பம் திளைப்பதுபோல்
மாங்குயி லாய்மனம் வாழ்பவள் தன்னை மணக்கவுயிர்ப்
பாங்கியல் லாற்றுணை யாருளர் சென்று பரவுதுமே.

---

65. காசு—குற்றம்; அறு—அற்ற; தேசு—ஒளி; வேட்டனன்—விரும்பினன்.

66. விளர்ப்பு—வெண்மை; சேப்ப—சிவக்க; தோய்வதற்கு—முழுகுவதற்கு.

67. கரியாக நின்று காட்டுதல்—இவள் அணங்கல்லள் தலைவிஎனத்தான் சான்றுடன் கூறுதல்.

68. முன்பு அதனை இயல்பாகக் கண்டவளாதலின் திரிகரி என்றாள்.

69. சங்க இலக்கியப் பொருள்களைத் தொல்காப்பியங்கொண்டு தெளிவது போல் இவ்வுயிர்ப் பாங்கியைக்கொண்டு தலைவியை அடையலாம் என்றான்.

### 70 ஊர்வினுதல்.

வெல்லுந் தமிழ்தெரி வார்கரந் தைப்புனம் மேவியபின்
செல்லும் வழிதெரி யாதுளத் தேங்கித் திகைக்குமெனக்(கு)
ஒல்லும் வகையில்நும் ஊர்ப்பெய ரும்மாங் குறுநெறியும்
சொல்லும் படிக்குமை வேண்டினன் சொல்லுக தோகையரே.

### 71. பெயர் வினுதல்.

செய்யாத செந்தமிழ்ச் சீர்த்தியை நாளும் திசைபரப்பப்
பொய்யாத தொண்டுசெய் தோங்குங் கரந்தைப் புனத்துலவும்
எய்யாத அம்பிரண் டாலுயிர் வாட்டும் எழிலணங்கீர் !
மெய்யாக நும்பெய ராயினும் சற்றே விளம்புகவே.

### 72. (அ) கெடுதி வினுதல்.

ஊரும் பெயரும் உரைப்பத ஞற்குறை யுற்றிடுமேல்
சாரும் புலவர்தந் தாயக மாங்கரந் தைத்தலத்தில்
காரும் கனவரை போலுங் களிறெரு கையம்பினுற்
சோருங் குருதி யுடன்வந்த துண்டெனிற் சொல்லுகவே.

### (ஆ) இதுவுமது (மான் வினுதல்)

உண்ணினை வார்க்கமிழ் தாந்தமிழ் பூக்கும் உயர்கரந்தைப்
பண்ணனை வாய்மொழிப் பங்கயம் போன்முகப் பாவையன்னீர் !
கண்ணனை வண்டுசீ காமரம் பாடுமிக் காவினிடைப்
புண்ணணைந் தோர்கலைப் போந்ததுண் டென்னிற் புகலுமினே.

### (இ) இதுவுமது (பன்றி வினுதல்)

முள்ளுறு பன்றியென் றெண்ணவோர் ஏனமென் மொய்
கணைதோய்ந்(து)
உள்ளுறு வள்ளுவன் ஒண்டமிழ் ஓங்கி ஒளிர்கரந்தைக்
கள்ளுறு நன்மலர்க் காவகத் தேவரக் கண்டனிரோ ?
தெள்ளுறு செந்தமிழ் ஆர்திரு வீருரை செய்ம்மின்களே.

---

70. உறுநெறி—செல்லும் வழி; திகைக்கும்-தடுமாறும்.

71. இயற்கை மொழியாதலின் செய்யாத எனப்பட்டது. எய்யாத அம்பு—கண்கள். மெய்யாக—உடம்பைப் பொருந்த என்ற பொருளும் காண்க.

72. மேகம்போன்றும் மலைபோன்றும் என்க—உருவும்மெய்யும் உவமை. (ஆ) பண்ணனை—இசையொத்த; கள்நனைவண்டு—தேன் புரிந்துண்ணும் வண்டு; சீகாமரம்-ஒருபண்—கலை—மான். (இ) ஏனம்—பன்றி.

### 73. (அ) ஒழிந்தது வினுதல்.

இயலுங் கனிதரும் பால்தேன் சுவைகுறைந் தெய்க்குமென்ருே
குயிலுங் கிளியுமென் பூவையு மீண்டுங் குறுகுமென்ருே
முயலுந் தொறுஞ்சுவை எட்டுந் தருந்தமிழ் மொய்ம்புடனே
பயிலுங் கரந்தையன் னீர்பக ராததென் பான்மொழியே.

### (ஆ) இதுவுமது.

அழியாத செந்தமி ழன்னை யமைந்தரு ளாட்சிசெய
ஒழியாத நல்லிசை ஓங்குங் கரந்தையில் ஒண்டொடியீர்
பிழியாத தேறலும் பெய்யாத கொண்டலும் பிறர்வினவ
மொழியாத மாந்தரும் உண்டெனிற் கூறுக முன்னுவனே.

### 74. யாரே இவர்மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

சீரார் கரந்தையிற் செந்தமிழ் கற்றிலார் செய்யுளென
ஊரே தெதுவழிப் பேரே தெனப்புகன் ருேர்மதமா
நேரே புகுந்தது வோமொழி கென்றே நிலைதளரும்
ஆரே இவர்மனத் தெண்ணமும் யாதென் யறிந்திலனே.

### 75. எண்ணந் தெளிதல்.

இணையின்றி வண்டமிழ் ஓங்குங் கரந்தையில் என்னிடத்தே
திணையின்றி ஐம்பாற் சொலும்பகுப் பார்மொழிச் செம்மைஎனக்
கணையின்றி வில்லின்றி வேட்டைக் கருத்தின்றிக் கானகத்தே
துணையின்றி வந்தவர் நோக்கமித் தோகையின் தோள்விருப்பே.

### (இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல்)

### 76. தலைவன் கையுறை ஏந்தி வருதல்.

நாவுங் கருத்தும் ஒருங்கினிக் கின்றசெந் நாப்புலவர்
பாவும் பரிமே லழகர்சொல் லும்மெனப் பாங்கியுடன்
காவுங் கடிபுனல் யாறுங் கவின்செய் கரந்தையயல்
மேவும் அவரிடைச் சென்றுரைப் போம்நம் மெலிவினையே.

---

73. ஒழிந்தது—மொழி; எய்த்தல்—இளைத்தல். குறுகுதல்—இனமாமென்று குறுகுதல்—என்பால் மொழியாதது ஏன்? பால் போன்மொழி; என்க.

74. மதமா—மதம்பொருந்தியயானை; தளரும்—மெலியும்.

75. உயர்திணை, அஃறிணைப் பிரிப்பின்றிப் பால் ஐந்து பகுக்கும் பிறமொழிகள் சொல் நோக்கிப் பால் வேறுபடுதல் காண்க; கணை—அம்பு.

76. செந்நாப் புலவர்—திருவள்ளுவர்; சொல்—ஈண்டு உரையைக் கருதிற்று.

### 77. (அ) தலைவன் அவ்வகை வினுதல்.

எளிதாய் இருங்கலை யாவும் இயம்பும் இருந்தமிழைக்
களியாப் பருகுவர் வாழ்கரந் தைப்பொழில் காணணங்கீர் !
ஒளியா துரைத்திடல் வேண்டும் ஒருகளி றேரம்பினுல்
விளியா திளைப்புடன் வந்ததுண் டோவிவ் வியன்புனத்தே ?

### (ஆ) இதுவுமது (மனம் வினுதல்)

தாங்குந் தமிழவே ளின்புகழ் போல்வளர் சங்கமுற
ஓங்குங் கரந்தையில் முத்தமிழ்ச் சோலையில் ஒன்றிமகிழ்
தூங்கும் எனதுளம் சொல்லலும் இன்றித் துணிவுடனே
நீங்கிம் மலர்ப்புனம் நேர்ந்ததுண் டோநீர் நிகழ்த்துகவே ?

### 78. பாங்கி எதிர்மொழி கொடுத்தல்.

தேனும் கரும்பும் சிறூரின் மழலையும் சேர்ந்தசுவை
ஈனும் தமிழ்ப்பயிர் பேணும் கரந்தை இரும்புனத்தில்
மானுங் களிறுமோர் வாளியின் நொந்து வரும்புதுமை
நானும் இவளுமெந் நாளினும் கண்டிலம் நம்புகவே.

### 79. (அ) இறைவனை நகுதல்.

சேரும் புகழ்கரந் தைத்திகழ் சோலையிற் செந்தமிழ்த்தேன்
வாரும் மலரம்பி னுலெய்யும் மக்களை மாரனென்பார்
ஆரும் அதுகண்ட தில்லையிம் மாந்தளிர் அம்பதனுல்
ஓரும் களிறெறிந் தாரிவர் என்வியப் பொண்டொடியே.

### (ஆ) இதுவுமது.

அருங்கவி யாப்பறி யாதவர் வெண்பா அடிஎடுத்துப்
பொருந்தவி ருத்தம தாய்ப்பின் புரையாய்ப் புகைவதுபோல்
கரந்தையி லிம்மற வோர்தளிர் அட்ட களிறுபின்னர்
வரும்பிணை யாய்வன்றி யாய்மன மாகி மறைந்ததுவே.

### 80. பாங்கி மதியின் அவரவர் மனக் கருத்துணர்தல்.

பாட்டும் உரையும் பயில்கரந் தைப்புனப் பைங்கிளியை
ஓட்டும் கருத்திலள் ஒண்டொடி ; வேந்தனின் உட்கருத்தும்
வேட்டம் குறித்ததன் றுமவர் தம்முள வேட்கையெலாம்
நாட்டம் விளங்கநன் றேயுரை செய்யுமிந் நாளகத்தே.

---

77. களியா — களித்துச் சுவைப்பர்; காணணங்கு — கட்புலனுந் தெய்வம்; விளிதல்—மடிதல்; நீங்கி இம்மலர்ப்புனம் விகாரம், 78. வாளி—அம்பு.

79. வாரும்—வழியும்; ஓரும்—அசை; தளிர் அட்ட—தளிர் அம்பினுற்கொன்ற.

80. நாட்டம் அவர்கள் வேட்கையை நன்ருக உரை செய்யும் என்று கூட்டுக.

# 10. பாங்கியிற் கூட்டம்.

## 81. தலைவன் உட்கோள் சாற்றல்.

அணிமேவு நற்கவி யாக்குங் கரந்தை அரும்புனத்தில்
மணிமே கலைச்சிலம் பாயவை கொண்டு மகிழ்சிறப்பீர் !
அணிமா மதிப்பிறை ஆழ்கடல் நல்லமிழ் தாயினும்நும்
பணிமேவ நான்கொணர் வேனெளி தாமருட் பார்க்குதுமே.

## 82. பாங்கி குலமுறை கிளத்தல்.

திருவாய் மொழித்திரு வாசகத் தேனைத் திளைத்தருந்தி
வருவார் புகழ்கரந் தைப்பதி யன்னுள் வனமுகத்தாள்
செருவார் விலங்குகொல் வேடர்தம் பாவை சிறுகுடியாள்
கருவார் திருவுடைக் காவலன் நீ! யிவை காணலையே.

## 83. தலைவன் தலைவியை உயர்த்தல்.

எல்லா உயிரும் பிறப்பொத்தல் வள்ளுவன் இன்னுரையைக்
கல்லார் அறியார்; கரந்தையிற் செந்தமிழ் கற்றவன்யான்
நல்லா ரிடத்துளம் நண்ணல் இயற்கையிந் நானிலத்தில்
இல்லா உரைபகர்ந் தாயெழில் மாதர் எனக்குயிரே.

## 84. பாங்கி அறியாள்போன்று வினுதல்.

கழங்கா டிடத்துமிக் காவினும் வாவிக் கரையிடத்தும்
வழங்கா வருபவர் தாம்பலர் கன்னியர் வண்டமிழ்ச்சீர்
முழங்கா வருகரந் தைப்புலத் துன்னுளம் மூண்டொழுகும்
பழங்கா தலியெவர் பார்த்தெனக் கேயுரை பாவலனே.

## 85. (அ) இறையோன் இறைவி தன்மையியம்பல்.

எனையாளும் நற்றமிழ் சீர்சால் கரந்தை இயற்றமிழும்
வனையாத சிற்பமும் வார்த்தெடுக் காததோர் வண்சிலையும்
புனையாத ஓவமும் ஓர்வழி யொப்பினும் பொன்மலரை
மனையாக வாழுமென் மங்கையொவ் வாப்பிற மாநிலத்தே.

---

81. பணிமேவ—கட்டளையிட. அமிழ்து—அமிழ்தம்; அருள்—ஆணை.

82. வன முகத்தாள் — அழகிய முகத்தாள்; வனத்தில் வாழ்பவளும் ஆம் செருவார்—போர்த்தன்மை கொண்ட வேடர் என்க; சிறுகுடி—ஊர்ப் பெயர்—ஏழை என்றுமாம். கருவார்திரு—கருவிலேயே அமைந்த திரு. காணலை—காண்க; காணுதது ஏன் என்றுமாம்.

83. நல்லார்—மகளிர், நல்லவர்.

84. வழங்கா—வழங்கி—விளையாடி. முழங்கா—முழங்கி.

85. ஓவம்—ஓவியம்; பொன்மலர்—தாமரை (ஆ) குழல்—கூந்தல்; விண்டு—மேகம்; காம்பு—மூங்கில்.

(ஆ) இதுவுமது.

தண்டே னிகர்மொழி வாழுங் கரந்தைத் தமிழ்மகளே !
வண்டே விழி,குழல் விண்டே, அன நடை, வாய்மொழிகற்
கண்டே, இடைசிறி துண்டே, முகமதி, காம்பிருதோள்
கொண்டே விளங்குவள் பண்டே எனதுளம் கூடினரே.

86. பாங்கி தலைவியருமை சாற்றல்.

பண்கண்ட நற்றமிழ் பாவுங் கரந்தைப் பனிவரைமேல்
எண்கொண்ட நற்குண மேந்தெழி லோர்வடி வேய்ந்துவரும்
கண்கண்ட தெய்வமிம் மாமலைக் காவலன் காரிகையாம்
பெண்கொண்ட காட்சியை அன்றோ பெருந்தகை பேசுவதே ?

87. தலைவன் தலைவி இன்றியமையாமை இயம்பல்.

அளியற்ற மாந்தர் அணியற்ற பாக்கள் அகல்விசும்பில்
துளியற்ற மேகம் துதியற்ற நெஞ்சம் துணையிலன்றில்
களியற்ற பூவிவை காணலுங் கூடும் கரந்தையைப்போல்
அளியுற்ற மங்கையல் லாலிலை ஆவியெற் காரணங்கே.

88. பாங்கி நின்குறை நீயே சென்றுரை என்றல்.

வடியாத் தமிழ்ச்சுவை வார்க்குங் கரந்தை வனமயிலாம்
கொடியா ளெவர்க்கும் படியாளுன் காதலைக் கூறுகெனின்
அடியா ளவட்கியான் ஆதலின் கோள்சொல அஞ்சுகிறேன்
பிடியா ளெதற்கு?ப் பெருந்தகை! நீசென்று பேசுகவே.

89. (அ) பாங்கியைத் தலைவன் பழித்தல்.

மூவேந்த ரின்முறைக் கோட்டந் தவிர்த்து முதற்பொருளை
நாவேந்தர் ஞானசம் பந்தரா ரூரர்பால் நண்ணவைத்துப்
பாவேந்த ருக்கருள் பண்ணுங் கரந்தைநற் பைந்தமிழால்
ஏவேந்து கண்ணியை யானிரந் தேனது என்குறையே.

(ஆ) இதுவுமது.

மொழியே விழியொரு நாட்டினுக் கென்னும் முதுமொழியின்
வழியே பணிபுரி வார்கரந் தைப்பொழில் வஞ்சியுனைப்
பழியேன் மடவார் தமைநம்ப லென்று படித்திருந்தும்
ஒழியேன் பெருநசை யாலிரந் தேன்பணிந் தூழ்வினையே.

---

86. பாவும்—பரவும்; பெண்—பெண்மை; காட்சி—அழகு.
அளி—கருணை; விசும்பு—ஆகாயம்; துளி—மழை.
87. அளி—கருணை; அன்றில்—இணையாகவாழும் ஒரு பறவை; களி—தேன்.
88. வடியா—வடித்து. பிடியாள்—கூலியாள்—பிடிக்காதவள்; கோள்—குறிப்பு,
89. கோட்டம்—வளைவு; ஏ—அம்பு; எந்து—பொருந்தும்; நசை—அவா.

### 90. பாங்கி தலைவி பேதைமையூட்டல்.

தாயின் மடிதுயில் வாள்மரப் பாவையைத் தானெடுத்து
வாயிற் பழந்திணித் துண்ணுமை யாற்பிணி வந்ததெனப்
பாயற் பணிபுரி வாள்,கர ந் தைத்தமிழ்ப் பாவல!உன்
நோயின் தகவறி யாளவள் பாலென் நுவலுவதே ?

### 91. காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

ஆளுந் திறனும் அறிவியல் நூல்செயும் ஆக்கமுமெந்
நாளுந் தமிழ்மொழிக் கில்லையென் பாரின் நவையுரைபோல்
காளம் பொருவிழி ய ் லமிழ்தூட்டிக் கரந்தையிலென்
நீளும் உயிரினைப் பேதைமை ஊட்டவும் நேர்ந்தனையே !

### 92. பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

தெரியாத ஊர்க்கு நெறிகேட்ப துந்தமிழ்ச் செய்யுளுக்குப்
புரியாத போதுரை கேட்பது மாகும் புணர்ந்துயிரிற்
பிரியாத மாதரைப் பெற்றிடற் கோர்துணை பெட்பதெவன் ?
திரியாத செந்தமிழ்ச் சீர்கரந் தைப்பொழில் சேருகவே.

### 93. தன்னிலை தலைவன் சாற்றல்.

என்னு லடைவதற் காகுமென் றூலும் இருநிலத்தில்
பொன்னால் விரும்பும் பிறபொருட் கொள்ளுதல் போல்அசையும்
மின்னற் பொலியிடை மானைக் கரந்தையின் மெல்லியலை
உன்னுற் பெறவிழைந் தேனுயிர்ப் பாங்கி உதவுகவே.

### 94. பாங்கி உலகியல் உரைத்தல்.

பயிலா தவர்மொழிப் பாங்கறி யாதவர் பைங்கரந்தைக்(கு)
அயலான வர்தமிழ்த் தீஞ்சுவை எங்ஙன் அருந்துவர்?நீ
மயலான மங்கையை மாதவர் முன்னே மணந்துகொளல்
செயலாவ தன்றிவே றிவ்வுல கோரியல் தேறலனே.

### 95. தலைமகன் மறுத்தல்.

வாட்டும் பசிப்பிணி உற்றூர் தமக்கு வயற்பயிரைக்
காட்டுங் கருணையைப் போன்றுரை யாடினை காரிகையாய் !
ஈட்டுந் தமிழ்ச்சுவை நூலார் கரந்தையில் என்னுயிரை
வாட்டுந் துயர்களை வாய்முனம் பின்னர் வரைகுவனே.

---

90. பாயற்பணி—மருத்துவம்; தகவு—நிலை; நுவலல்—சொல்லல்.
91. காளம்—நஞ்சு—நீளும் உயிர்—தலைவி. 92. பெட்பு—விருப்பு.
93. மின்னல்—மின்னலைப் போல; விழைந்தேன்—விரும்பினேன்.
94. மயல்—காதல்; மாதவர்—சான்றோர்
95. ஈட்டும்—மிகும்; நூலார்—நூல் நிறைந்த.

### 96. பாங்கி அஞ்சி யச்சுறுத்தல்.

காற்றுப் புகுங்கதி ரோன்புகும் இம்மலைக் கானவர்வில்
ஏற்றுப் புகுவரல் லால்கரந் தைத்தலத் திப்புனத்தில்
வேற்றுப் புலத்தவர் உட்புகல் இல்லைசெவ் வேளையொப்பத்
தோற்றிப் புகுமுனை எம்மவர் காணின் துயர்தருமே.

### 97. தலைவன் கையுறை புகழ்தல்.

பேணப் புகழ்தரும் பீடார் கரந்தைப் பெருவரைமேல்
காணக் களிப்புநங் கைதொடக் காதலும் கட்டிடையிற்
பூணப் பொலிவுமெப் போதும் பொருந்துமிப் பூந்தழையை
ஆணத் துடனணி வீரரி தாமிவை ஆரணங்கே.

### 98. பாங்கி கையுறை மறுத்தல்.

சொல்லாத வாய்மொழி தோயாத நீத்தம் சுவைகருதி
நில்லாத பாவிவை நேரினும் நேயக் கரந்தையினில்
இல்லாத தொன்றெமக் கெங்கே இசைந்ததென் றெண்ணியெமர்
பொல்லாத சூழ்வரிப் பூந்தழை எம்மிடை பூண்பரிதே.

### 99. ஆற்ருநெஞ்சினோ டவன்புலத்தல்.

தஞ்சம் எனத்தழை தாங்கிவந் தாய்செந் தமிழினியல்
அஞ்சும் வளர்ப்பவர் ஆள்வார் கரந்தை அரிவையிடம்
நெஞ்சந் திறந்தழல் நீளெரி காட்டியும், நெக்குருகிக்
கெஞ்சும் மொழிகிளர்ந் தேத்தியும் கேளலர் கேளலரே.

### 100. பாங்கி தலைவனை ஆற்றுவித்தல்.

கேளாத கேளலம் ஆதலின் கிட்டிநும் கேண்மையுடன்
தாளாத தன்மையும் சாற்றித் தலைவியின் சால்பறிவேம்
நாளாத லன்றதும் நாளையே யாமிதை நன்கணிந்தே
ஆளாத லாக்குவம் அஞ்சேல் கரந்தையின் ஆண்டகையே.

---

96. வேற்றுப்புலத்தவர்—பிறஊரார்; செவ்வேள்—முருகன்.

97. பீடார்—பெருமையமைந்த; வரை—மலை; கைதொட—கையால்தொட எப்போதும்—எல்லாக் காலத்தும். எல்லா மலர்களும்; ஆணம்—அன்பு.

98. தோயாதநீத்தம்--படிந்தாட முடியாத நீர்நிலை. எமர்—எம்மவர்; பொல்லாத—தீங்கான செயல்கள்.

99. அஞ்சு—ஐத்து (போலி) கேளலர்—உறவில்லாதவர்—கேட்கமாட்டார்.

100. கேளாத—எம்மியல்புக்குமாருகும் கேட்கப்படாத செய்திகளை; கேளலம்—கேட்கமாட்டோம்; தாளாத-தாங்குதற்கியலாத ஆளாதல்-உன் விருப்பிற் கிணங்க பணியாள் ஆதல்.

### 101. இரந்துகுறைபெறுது வருந்திய கிழவோன்மடலே பொருளென மதித்தல்.

ஈயென் றிரத்தல் இழிவென் றுரைக்கும் இனியதமிழ்த்
தாயொன்றி வாழ்கரந் தைப்புனத் தையல்முன் தந்தபிணி
போயென் றெழியுமென் றேங்குநெஞ் சேபுகழ்ப் போந்தையொடு
வீயொன் றெருக்கென்பு வீழ்ந்தன வோவினை வேறிலையே.

### 102. பாங்கிக் குலகின் மேல் வைத்துரைத்தல்.

நீரிற் கலப்புறும் நெய்போற் பிறமொழி நேரினுந்தன்
சீரிற் றிரிதலில் லாதநற் செந்தமிழ் சேர்கரந்தை
ஊரிற் பிறந்தவர் ஒண்டொடி யோர்தரும் ஊறகல
நாரிற் றெடுத்தணி வாரெருக் கேறுவர் நாண்மடலே.

### 103. அம்மட லேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச்சாற்றல்.

வீரம் மறங்கொடை வேளாண்மை யாயபல் வீறெடு,தே
வாரம் மிகுதமிழ் வாழுங் கரந்தையில் வார்குழலீர்!
சேரன் பகைகொளச் செல்லுவன் நாளை சிவவடிவோ(டு)
ஈரம் இலாநுமுன் ஏகுவன் என்போ டெருக்கணிந்தே.

### 104. (அ) பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.

இல்லா விடையும் இருள்தருங் கூந்தலும் ஏர்மதியும்
வில்லார் குவளையும் விளையாத முத்தமும் வேயுடனே
எல்லாம் எழுதுவை ஆயின் கரந்தை இருந்தமிழ்போற்
சொல்லாம் அமிழ்தினை எவ்வா றெழுதுமுன் தூரிகையே.

### (ஆ) இதுவுமது.

புலந்தரு நாவலர் போற்றும் கரந்தையிற் பொன்னனையாள்
கலந்திகழ் நல்லெழில் தீட்டக் கருதுமுன் கைக்கிழியில்
சிலம்பொடு மேகலை சிந்தா மணித்திருக் கோவை யன்றி
வலந்திரு வாசகவண்ண நீ தேர்ந்து வரைவரிதே.

---

101. போந்தை—பனைமரம்; வீயொன்றெருக்கு — மொக்கின் தன்மையோடு கூடிய எருக்க மலர். 102. மடல்— மடன்மா; ஊறு—துயர்.

103. சேரன்பகை கொளல்—அவனுக்குரிய பனையை வெட்டுதல்; சிவவடிவு—நீறுபூசி எருக்கணிதல்; என்பு—எலும்பு.

104 ஏர்மதி—நெற்றி முகமும் ஆம். வில்லார்குவளை — புருவமும் கண்ணும். முத்தம் — பற்கள். வேய் — தோள், தூரிகை — வண்ணஎழுதுகோல், (ஆ) கோவை—உதடும்—மாலையுமாம்; திருவாசக வண்ணம்—திருவாசகத்தின் உட்பொருள், பேச்சினை எழுதும் ஓர் நிறம்; இப்பாடல்—சிலேடை.

### 105. தலைமகன் தன்னைத்தானே புகழ்தல்.

உள்ளத் திருப்பதை ஓவிய மாக்குதல் ஒல்லுமெனல்
எள்ளத் தனையும்பொய் இல்லைஎன் நெஞ்சும் எனதறிவும்
கொள்ளத் தரினெளி தாங்கிழி தீட்டுதல், கோகநக
வள்ளத் திருப்பவள் வாழ்கர ந் தைப்பதி வாணுதலே.

### 106. பாங்கி அருளியல் கிளத்தல்.

கரும்பார் கவிவளங் காணுங் கர ந்தையிற் கற்றநம்பி!
பெரும்பாவ மாஞ்சினை அன்றிற் பெடைக்குப் பிழைபுரிதல்,
இரும்பாம் மனத்தவர், இன்றமிழ் கேளார் இவர்களன்றி
விரும்பார் ஒருபெண்ணை வேண்டிமற் றோர்பெண்ணை வெட்டுதற்கே.

### 107. கொண்டுநிலை கூறல்.

தன்குறை சார்ந்தழத் தாய்தரும் பாலெனின், தண்டமிழால்
நன்குறை சீர்கர ந் தைத்தமிழ் நம்பி! அந் நங்கையிடம்
நின்குறை சென்றுரை நேரா விடிற்பினர் நீள்பனையை
முன்குறைத் தம்மடல் கொண்டே முடிக்க முயலுகவே.

### 108. தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற் குரைத்தல்.

கற்றுரை வாழ்வளித் தேத்துங் கர ந்தையிற் காவலனே!
பெற்றுரை யன்றிப் பிறருணர் பெற்றியிற் பேசகிலாள்
சிற்றுடை யன்றிநூற் சீலை உடுத்துமோர் சீரறியாள்
எற்று லுனைவருத் தும்கலை முற்றுத ஏர்மதியே.

### 109. (அ) தலைவன் தலைவி வருத்திய வண்ண முரைத்தல்.

ஐசேர் குமரசா மித்தகை தொண்டால் அருள்சிறக்கும்
மெய்சேர் தமிழ்க்கர ந் தைப்புனம்மேவிய மெல்லியலே!
பைசேர் அராச்சிறி தாயினும் பல்விடப் பான்மைகொளும்
மைசேர் விழிமட வாள்வருத் தாளெனல் மாண்பிலையே.

---

105. கோகநக வள்ளம்—தாமரை மலராகிய கிண்ணம், இருப்பவள்—திருமகள்;
106, பெண்ணை—பனைமரம்; 107. பனைமரத்தைக் குறைத்து மடன்மாஏறு—பனைஓலை நறுக்கில் கடிதம் எழுதி நின் குறையை முடித்துக்கொள் என்பது வேறு பொருள்; 108. பெற்றோர் உணர்வது—மழலைச்சொல். 109. ஐ-தந்தையார் பெயரின் முதலெழுத்து: தலைமையும்—பெருமையும் வேறுபொருள்; அரா—பாம்பு; (ஆ) கடுகுசிறுப்பினும்—சிறிய அளவினதாக இருப்பினும் என்றபடி; உலக வழக்கில் பெருத்துச் சிறுமையுற்றதற்குக் காட்டப்படும். முடுகுதழல் என்க.

(ஆ) இதுவுமது.

வடுகு துளுமலை யாளம் வழங்கிய வான்தமிழை
நெடுக வளர்ப்பவர் நேரும் கரந்தை நெரிகுழலாய்
கடுகு சிறுப்பினும் காரம் குறையுமோ ? காரிகையாள்
முடுகு விழித்தழல் மொய்ம்போ டறிவை முறுக்கியதே.

110. (அ) பாங்கி தலைமகள் செவ்வி யருமை செப்பல்.

உரைமேவு தஞ்சையில் ஓங்குங் கரந்தையின் ஒண்டமிழ்போல்
வரைமே லகவலும் வந்தார் கலித்துறை வண்டலொடு
விரைமேம் படுமலர் வெண்பாவை யும்வஞ்சி வேண்டலளெம்
அரைசேயுன் அன்படி யாள்சொலுஞ் செவ்வி அறிந்திலனே.

(ஆ) இதுவுமது.

நற்றுய ரின்பின் நலஞ்சேர் செவிலி நலம்புனையும்
குற்றேவல் நங்கையும் கூடிப் புரக்குமெங் கோமகளைச்
சற்றேனும் யான்றனிக் காணுதல் சாலாத் தமிழ்க்கரந்தை
உற்றுயும் நற்கலை கற்றுயுன் அன்புரை ஓதுதற்கே.

111. தலைவன் செவ்வி எளிமை செப்பல்.

சைவப் பனசை தரும்பரி சாயிரம் தண்டமிழால்
கைவரக் கேட்குங் கரந்தைமா ணுக்கரின் காரிகை!போய்
கைவரும் பூந்தழை காட்டியென் பேருரை கண்டவுடன்
மைவரும் கண்ணி மகிழ்ந்தணைத் தேயுனை வாழ்த்துவளே.

112. பாங்கி என்னைமறைத்தபின் எளிதென நகுதல்.

வாயறி யாதுண நாவிழைந் தாங்கென் வனமயிலைப்
போயணை வாமெனக் கொண்டாய், கரந்தையிற் பூந்தமிழ்நூல்
நீயறி யாததொன் றில்லைஎன் னின்றி நிகழ்வுறுமோ ?
தாயறி யாதசூ லுண்டோ தரணியிற் சாற்றுகவே.

113. அந்நகை பொறுதவன் புலம்பல்.

துளிநோக் கிலாவொரு துன்பப் பயிரினைத் தூர்பறித்து
வெளிநோக் கிலாதவர் வெந்நீரை விட்டு வெதுப்புதல்போல்
நளிநோக் கமைதமிழ் நல்குங் கரந்தையின் நாண்மடவோய்
அளிநோக் கிலா நகை யாலென தாவி அணங்கினையே.

---

110. வரைமேலகவல்—சிலம்பெதிர் கூவுதல்; ஆர்கலித்துறை—கடற்றுறை. வண்டல்—விளையாட்டு; மலர்வெண்பாவை—வெள்ளிய மலர்களால் சமைக்கும் பாவையுரு; செவ்வி—தனித்திருக்குங்காலம்; இதனுள்—அகவல், கலி, வெண்பா, வஞ்சி என்ற பாக்களும் ' துறை ' என்ற இனமும் வந்தன; நவம்புரியும்—அழகு

### 114. பாங்கி தலைவனைத் தேற்றல்.

மின்னுகு மெல்லிடைப் பாங்கியர் தாம்பலர் மேவிடினும்
என்னுவி யன்னவட் கியானுவி யாதலின் என்னுரையைப்
பொன்னுக ஏற்றருள் செய்வாள் கரந்தையிற் பொங்குதமிழ்
மன்னுக வந்தநல் வள்ளால்! மனத்துயர் மாற்றுகவே.

### 115. பாங்கி கையுறை ஏற்றல்.

பாடத் தழைக்குநற் பண்பார் கரந்தையிற் பைந்தமிழைக்
கூடத் தழைத்தொளி கொள்பா வலர்போல் குரிசிலின்கை
நாடத் தழைக்குமிந் நற்றழை யாவுமந் நங்கையுடல்
சூடத் தழைக்குமிங் குள்ளந் தழைக்குமித் தோன்றலுக்கே.

### 116. (அ) கிழவோனுற்றல்.

மன்னி வருந்தமிழ் மாண்பார் கரந்தை மலையிடத்தில்
மின்னி இடித்துக் கருத்தமிழ் தந்தரும் மேகமெனக்
கன்னி நகைத்துரை காட்டியென் னுள்ளங் கலக்கியபின்
முன்னி யருள்புரிந் தாளிவட் கென்னே முதுக்குறையே!

### (ஆ) இதுவுமது.

திண்மை அறநெறி தேர்ச்சி ஒழுக்கம் திகழ்வதற்கா
வண்மை மிகுதமிழ் வாழுங் கரந்தைநன் மாணவர்பால்
கண்மை இலாதவர் போல்நடக் குங்கணக் காயரென
உண்மை அருளுடை யாளுரை யாலெனை ஓர்ந்தனளே.

### 117. (அ) பாங்கி இறைவிக்கவன் குறையுணர்த்தல்.

கோல்தாங்கு செந்தமிழ்த் தாங்குங் கரந்தைநங் குன்றிடத்தே
வேல்தாங்கு கையிற் றழைதாங்கி உள்ளம் மெலிவுதரும்
மால்தாங்கி நாளும் வருவரோர் சொல்லும் வழங்கலிலர்
சேல்தாங்கு நல்விழி யாயதற் கென்னும் செயலுளதே?

---

படுத்தும். 111. பனசை—திருப்பனந்தாள்; பரிசு—ஐந்தாம் சார்ஜ் ஞாபகார்த் தத்தமிழ்ப்பரிசு, இன் உவமஉருபு, காரிகை—அண்மைவிளி, மாணவர்போல் மகிழ்ந்தென்க. 112. அணைவாம்—கூடுவாம்; தரணி—உலகம்.

113. துன்பப்பயிர்—வாடுகின்ற பயிர்ச்செடி; தூர்—வேர்; வெளிநோக்கிலார்—பரந்த உள்ளமில்லாதவர்; நளி—பெருமை; அளி—அருள்.

114. ஆகும்—ஒக்கும்; ஆவி—உயிர்; 115. சூடநங்கை உடல் மேலும் தழைக்கும்—இத்தலைவன் உள்ளமும் தழைக்கும் என்றுள்.

116. முதுக்குறை—அறிவு; (ஆ) திகழ்வதற்காக வேண்டி, கண்மை—கண்ணோட்டம்; கணக்காயர்—ஆசிரியர்; ஓர்தல்—ஆராய்தல்

117. மால்—மயக்கம்; (ஆ) வடமொழியாதல்—வழங்காதிருத்தல்.

### (ஆ) இதுவுமது.

நோக்கஞ் சுழன்றுடல் நொந்துளம் வாடியும் நுண்டமிழாற்
பூக்குங் கரந்தையில் நாளும் தழையுடன் போந்தொருவர்
வாக்கும் வடமொழி யாகிநிற் பார்வன வஞ்சிஅவர்
ஏக்கம் புலப்பட வில்லைஎன் செய்வ தியம்புகவே.

### 118. இறைவி அறியாள் போன்று குறியாள் கூறல்.

தாய்மொழி யாய்த்தமிழ் கொள்வார் பிறமொழி சார்ந்திடினும்
வாய்மொழி வாழ்விவை கொள்வான் கரந்தை வளர்தமிழ்பால்
போய்நுழை வாரவர் போலிந்த புட்கள் புவிமறந்து
சேய்மழை வான்பறந் தாலும் நிலத்திலூண் தேடிடுமே.

### 119. பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்.

நெட்டியை நீருள் மறைப்பது போற்கயல் நேர்விழியாய் !
கிட்டிய என்னிடம் வேறுகிள ந்தனை கேட்பவரைத்
தட்டியெ ழுப்புங் கவிவாழ் கரந்தையைச் சார்ந்தொருமான்
குட்டிவி னவிவந் தாரவர் இன்றுங் குறுகினரே.

### 120. தலைவி பாங்கியை மறைத்தல்.

விருந்தாக வும்வேரி கொள்ளவும் வேட்டை விருப்புடனும்
வருந்தாம லிப்புனம் பல்லோர் வருவர் ; மடமைதவிர்
மருந்தாகும் வண்டமிழ் வாழ்வாங் கரந்தை வரையுறைவாய்
இருந்தாலும் இவ்வுரை நம்மவர்க் கென்றும் இயல்பலவே.

### 121. பாங்கி என்னை மறைப்பதென்னெனத் தழாஅல்.

கையை மறைத்தெழு துங்கவி யுண்டோ ? கரந்தையில் நீர்ச்
செய்யை மறைத்தெழும் செங்கரும் புண்டோ ? திருவனையாய்
பொய்யை உரைத்தெனை நீமறைத் தாலுண்மை போன்றிடுமோ ?
மெய்யை இரண்டெனக் கொண்டதல் லாலுளம் வேறிலையே.

---

118. பிறமொழியை உயர்த்துக்கூறும் தமிழர்கள் தங்கள் வாழ்வு—உணர்வு மேம்பாட்டிற்குத் தமிழைச் சரண்புகுவர் என்றபடி "வானிடைப் பறந்தாலும் உணவுக்கு மண்ணில் இழிந்துவரும் பறவை என்றதனால் தலைவி அறியாதவன் போல் பேசினும் தலைவனையே விரும்புகின்ருள்" என்பதைக் குறிப்பித்தாளாம்.

119. நெட்டி—தக்கை; கிட்டிய—மனங்கலந்த. கிளந்தனை-மொழிந்தனை.

120. வேரி—தேன்; இருந்தாலும்—எவ்வளவு உரிமை இருப்பினும் என்றபடி, நம்மவர்—மலைவாணர். 121. செய்—வயல்; மெய்—உடம்பு;

### 122 (அ) பாங்கி கையுறை புகழ்தல்.

மருவோ டலர்மலர் மாந்தழை யாவும் மகிழ்ந்தணியப்
பொருளோ டுவமையிங் கொன்ருய்ப் பொலியும் புதுமையினை
இருளோ டெதிர்குழ லாயின்று காணுதற் கெண்ணுகின்றேன்
அருளோ டொளிர்தமிழ் ஆளும் கரந்தையெம் ஆரணங்கே.

### (ஆ) இதுவுமது.

நெஞ்சுருக் குந்திரு வாசகத் தேனை நிதம்பருகி
மஞ்சுருக் கென்ன நன் மாணவர் பால்பொழி மாண்கரந்தைப்
பிஞ்சிருக் கும்பெரு மாந்தழை யாமிதைப் பேணியணி
பஞ்சிருக் கும்பதத் தாயழ கேறுதல் பார்ப்பதற்கே.

### 123. கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

அஞ்சா றெழுத்தா லகிலத் திலங்கும் அருங்கருத்தை
எஞ்சா துரைக்குந் தமிழ்சேர் கரந்தை இரும்புனத்தில்
மஞ்சா லுவக்கும் மயிற்பேடை யோடு மகிழ,அவர்
நஞ்சார்ந் தவரென நங்காய்! மெலிந்துளம் நைகுவரே.

### 124. மறுத்தற் கருமை மாட்டல்.

கற்பனை யற்றவர் காவியம் போலவக் காவினிடை
பொற்புறு பூந்தழை வற்றின யானுமென் பொய்வறந்தேன்
கற்புறு வார்க்கமிழ் தாந்தமிழ் காக்கும் கரந்தைவரை
நிற்புற வஞ்சினன் நேர்ந்திளைப் பார்க்கென் நிகழ்த்துவதே?

### 125. தலைமகன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல்.

விரும்பின போதெளி தாகுங் கரந்தை வியன்வரைவேள்
இரும்பனை யாருளம் என்பால் இரங்குதல் இல்லையெனில்
கரும்பனை யாரிடம் செல்வேன் அவரென் கருத்தினுக்குப்
பெரும்புணை யாவரென் பார்பொருள் தேறலன் பெண்ணணங்கே.

### 126. பாங்கி தலைவியை முனிதல்.

தோயத் தமிழ்மணம் வீசுங் கரந்தையில் தோகையன்னுய்!
நேயத் தவரெனும் பேதைமை யாலே நிகழ்த்தியவென்
மாயப் புரைமொழி மன்னித் தருள்க மனங்கவர்ந்த
ஆயத் தவரிட மேயுரைப் பாயுனக் காவனவே.

---

122, மரு—மணம், பொருள்—உவமேயம்; மஞ்சுருக்கு—மழை; பதம்-பாதம்; ஏறுதல்-விளங்குதல், 123. அஞ்சாறு-முப்பது; மஞ்சு-கார்மேகம்; ஆர்தல்-உண்ணுதல்; 124; பொய்வறந்தேன்-இனிமேல் கூறுதற்குப் பொய் இல்லை என்பது; 125: இரும்பு அனையார் கரும் பனையார்-கரிய பனைமரம்;

### 127. தலைவி பாங்கியை முனிதல்.

பேசா மொழிக்கியல் பேசிய தாற்சிலர் பேதைமையால்
ஆசாக ஆரியம் ஐயிரண் டாவி அளித்ததெனக்
கூசா துரைப்பது போலாங் கரந்தைநங் கோமகனை
ஆசாக இவ்வடி யாளெனக் கிந்நாள் அறிவிப்பதே.

### 128. தலைவி கையுறை ஏற்றல்.

தேடும் புதுமையெ லாந்தரும் தீந்தமிழ் சேர்கரந்தை
நீடும் தலைவரின் நெஞ்சங் களிப்பவும், நேயமிக
ஊடும் நினக்குவப் பாகவும், நானிங் கொளிபெறவும்
வாடும் இவைதரு மேற்றரு வாய்தழை மாமருந்தே.

### 129. இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்.

பிழையொன் றிலாத்தமிழ் பேசுங்கரந்தையிற் பெய்வளையாள்
உழைசென் றியற்பெயர் ஓதவும் செய்யேன் ஒளிவளரும்
தழையென் றுரைத்தனன் தாய்தன் மகவைத் தழுவுதல்போல்
விழையொன் றுடல்தழைத் தாளணைத் தாளென் வியப்பிதுவே?

### 130. பாங்கி தலைவற்குக் குறியிடங் கூறல்.

தெய்வத் தமிழ்க்கரந் தைவரும் தென்றல் சிவிறியிட
நெய்தொத் தலர்தாது சந்தனம் நேர்ந்திட நீளரவம்
பெய்வித்த மாமணி நல்விளக் காமிப் பெருவனத்தைச்
செய்வித்த பாவையன் ஞர்பகல் ஆடிடத் தேர்குவரே.

### 131. (அ) பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டுசேறல்.

ஒன்றே இறையென ஓதுந் தமிழ்பயில் ஒண்கரந்தை
நின்றே விளங்கி நிழல்செயும் பூம்பொழில் நேயமிகச்
சென்றே மகிழ்திளைத் தேவிளை யாடுவம் செம்பவளத்
தின்றே னிறைக்கும் எழிலே! எழுகவிங் கென்னுடனே.

### (ஆ) இதுவுமது.

சத்தியம் போற்றும் ஆ.யா.அரு ளானந்த சாமிஎனும்
முத்தமிழ் வள்ளல்தொண் டேற்குங் கரந்தை முதற்புலவர்
பத்திமை யால்வளர்க் குந்தமிழ் போலும் பசும்பொழில்வாய்
கொத்தும லர்ப்பறித் தாடுகம் போதுக கோல்வளையே.

---

127. பேசாமொழி-சமக்கிருதம்; இயல்பேசியது-வடமொழியாக்கம் தமிழில் செய்தது; சிலர்—அதனுண்மையறியாதவர்; ஐயிரண்டாவி: எ. ஒ. நீங்கிய பத்து; ஆசாக—பற்றுக்கோடாக. 128. நீடும்—நின்றேங்கும். 129. விழை—விருப்பம்.

130, சிவிறி—ஆலவட்டம் (விசிறி) நெய்—தேன்; தொத்துதல்—தங்கியிருத்தல்,

### 132. குறியிடத் துய்த்து நீங்கல்.

வழிமொழி வார்க்கருள் பெய்யுங் கரந்தை வனத்திடையே
விழிமொழி சாயலுக் காற்ரு அளிகுயில் மென்மயில்கள்
பழிமொழி பேசவச் சூர்மகள் நீவரப் பார்க்குமதால்
பொழிலுழை நிற்கயான் போய்வரு காறுமென் பூங்கொடியே.

### 133. (அ) இறைவி இறையோனிடத் தெதிர்ப்படுதல்.

தேங்கமழ் சீர்கரந் தைத்தலத் திந்தச் செழும்பொழிலுள்
வீங்கிரு ளின்றிவிண் மீனின்றி வெய்யோன் விளங்குபகல்
ஏங்குபொன் நூபுரம் பூண்கொடி மீமிசை ஏர்மதிபூத்(து)
ஈங்குந டைபயின் றேகும் புதுமையை என்சொல்வனே!

### (ஆ) இதுவுமது.

கருப்பொரு டாம்மயங் குந்திணைக் குள்ளெனக் காட்டுதற்கு
நெருப்புரு காந்தள்நன் முல்லைசெந் தாமரை நெய்தல்கலந்
துருப்பெறு பூங்கரும் பென்முனர்ப் பெண்போல் ஒசிந்துவரும்
விருப்புறு செந்தமிழ் மேவும் கரந்தை வியன்புனத்தே.

### 134. புணர்ச்சி மகிழ்தல்.

காவுள் இருந்தமிழ்க் காரிகை போற்றிக் கரந்தையர்சொல்
பாவுள் அளபெடைக் கேபொருள் தேறினன் பாவையுறு
நாவுள் அமுதமென் பாருரை நாடினன் நானிலத்தில்
தேவுள் உமையொரு பாகனின் சீர்த்தி தெரிந்தனனே.

### 135. புகழ்தல்.

வல்லார் கரந்தையில் வாழ்சுரும் பீர்! இந்த மாநிலத்தில்
எல்லாக் கவினும் எழுந்துவந் தாலுமிவ் ஏந்திழைமுன்
நில்லா, உரைநிகழ்த் தா,வோ ரமையம் நிகழ்த்திடினும்
புல்லா எனைப்பொழி யாவருள், உள்ளம் புகலரிதே.

### 136. தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

தீவிய செந்தமிழ் தேரும் கரந்தைத் திகழ்புலவர்
காவிய மாய்க்கவி யாயுரை யாயருட் காட்சியுடன்
ஆவிய ளித்தெனை யாளமிழ் தே! யுன தாயமுனைக்
கூவிய ழைக்குமுன் சென்றே அவரிடைக் கூடுகவே.

---

131. செம்பவளம்–வாய்; 132. ஆ. யா. அருளானந்தசாமி பல்லாண்டுகள் சங்கத்தலைவராயிருந்து தொண்டாற்றிய முத்தமிழ்வள்ளல்; வழிமொழிதல்–வாழ்த்துதல். பழிமொழிபேச–சூர்மகளிடம் கோள்சொல்ல; நீவரப் பார்க்கும்–வஞ்சம் தீர்க்க எண்ணிப் பார்க்கும்; அதனால்; 133. ஏங்கும்–ஒலிக்கும்; நூபுரம்–சிலம்பு;

### 137. பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

புத்தம் புதியநற் பாவகை நாளும் புவிசிறப்ப
வித்துங் கரந்தையின் மானே நகைக்குமிவ் வேல்விழிக்கும்
முத்துங் கயலும் மறைந்தன நாணிநீர்; முல்லைமலர்க்
கொத்துங் குவளையும் கொண்டு வந்தேனிவை கொள்ளுகவே.

### 138. பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

சிறிதா முயலப் பெரும்பயன் சேர்த்திடும் செந்தமிழை
நறிதா வளர்ப்பவர் நச்சுங் கரந்தையை நண்ணியயல்
கறிதாய் வளர்மலை கூய்சுனை ஆடுறுங் காரிகையர்
பிறிதா நினைக்குமுன் னேவிரைந் தேகுக பெய்வளையே.

### 139. பாங்கி தலைவற்கோம்படை சாற்றல்.

அன்னை யிலாத்தமிழ் ஆளுங் கரந்தை அருட்டலைவ!
உன்னை ஒருவரம் வேண்டுதும் வானம் உறையமுதம்
தன்னை மறப்பினும் காதற் றலைவியைத் தான்மறவேல்
என்னை மறப்பினும் யானிடை நின்றதை எண்ணுகவே.

### 140. உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

வெங்கதிர் மேற்றிசை மேவினன் ஆதலின் வெற்ப! இனி
எங்களின் நல்விருந் தாகிநல் லான்பால் இனிதளைந்து
பொங்கிய சோறும் புளிங்கறி யாவும் புசித்தமிழ்தம்
தங்கிய சீர்கரந் தையென வெம்மனைத் தங்குகவே.

### 141. விருந்திறை விரும்பல்.

பருந்தா ரயில்விழிப் பாவாய்! கரந்தையிற் பைந்தமிழ்போல்
அருந்தா அமுதனை யீர்! உங்கள் கையால் அளிக்குமவை
மருந்தா யினுமமிழ் தாகும் எனக்குநும் மாமனையில்
விருந்தா யமருநற் பேறின்று வாய்த்ததென் மேற்றவமே.

---

134. அளபெடை வடிவம் இரண்டாயினும் எழுத்து ஒன்றாக மூன்று மாத்திரையளவாக எண்ணப்படும்—அசைஇரண்டாகும்; பாவை—செய்யுளை, பெண்ணை என்பது மறுபொருள். 135. புல்லா—அணைக்கா; புகல்—புகுதல்; 136. தீவிய—இனிய; தேரும்—ஆராயும்; ஆயம்—தோழியர்குழு; 137. வித்துதல்—உண்டாக்குதல்—நீரில் நாணி மறைந்தன என்க. 138 கறி—மிளகுக்கொடி; மலைகூவுதல்—எதிரொலி காணுதல்; 139. வானம் உறையமுதம்—மழை.

140. அளைந்து—உண்டு. 141. மேற்றவம்—முன் பிறப்பின் நல்வினை.

# 11. ஒருசார் பகற்குறி.

### 142. கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் போதுகண்டிரங்கல்.

உய்வைத் தருஞ்சீர் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தோதுகின்ற
தெய்வப் புலவன் திருவள்ளு வன்செய் திருக்குறளின்
மெய்வைத் திடாதவர் சிந்தையைப் போலவெய் யோன்மறைய
நய்வைத் தரவிருள் மாலையம் போதிவண் நண்ணியதே.

### 143. பாங்கி புலம்பல்.

ஆக்கந் தருந்தமிழ் ஆளுங் கரந்தை அணிவரைமேல்
"பூக்கும் மதி"யெனப் புன்மாலை தூதாய்ப் புகத்,தலைவன்
ஏக்கங் கொடுத்தகன் றுனெங்கள் ஏந்திழை இன்றிரவு
தூக்கங் கெடுவள் சுடரோன் இனியென்று தோன்றுவனே?

### 144. தலைவன் நீடத்தலைவி வருந்தல்.

எனைவிட்டு முன்செலும் ஏழைநெஞ் சே! யிரு; இன்றமிழ்த்தேன்
நனைவிட் டலர்கரந் தைப்பொழில் நென்னல் நயந்தவர்க்குத்
தினைமட் டுமேனும் தெரியுமோ உன்னைச்? சிறையளிகாள்!
மனைவிட்டு மாலையம் போதும் வராததென் மன்னவரே?

### 145. தலைவியைப் பாங்கி கழறல்.

நிதியோ டிசைதர நீடும் கரந்தையில் நேர்தமிழ்நூல்
விதியோ டெதிர்மறை மேவுதல் காணினிம் மேதினியில்
வதிவோர் இயற்கை செறிவும் பிரிவுமே வஞ்சியிதை
மதியா தவர்பிரிந் தாரென வாடுதல் மாண்பலவே.

### 146 (அ) தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

கொங்கிருக் குந்தமிழ் சேர்கரந் தைப்பொழில் கூடிமகிழ்
துங்கரிக் கொத்தசொல் தாம்துறந் தால்வரும் துன்புணரார்
அங்குரிக் குந்துயர் ஆற்றுவர் என்றுரை ஆடுவது
பொங்கரிக் கஞ்சிப் புலிக்குகை சேர்வதைப் போலுமன்றே.

---

142. மெய் வைத்தல்—பொருளை அறிந்தொழுகுதல்; வெய்யோன்—கதிரவன் நய்வு—துன்பம்; 143. புன்மாலை—பொலிவழியச் செய்து மயக்கத்தைத்தரும் மாலைக்காலம்; தூக்கம் கெடுவள்—பிரிவுத் துன்பத்தால் உறங்காள்; 144. நனை—மொட்டு; விட்டு—மணம் வீசி; நென்னல்—நேற்று; தினை—சிறிய அளவு.

145. விதி—உடன்பாடு. பிரிவு—இயற்கை என்றபடி. 146 கொங்கு—தேன்; துங்கர். இக்கு; ஒத்தசொல். தலைவர் கரும்பு போன்று சொல்லிய சூளுரை; அங்குரிக்கும்—தோன்றும்; பொங்கரி—அரியேறு; உரை—இடித்துரை.

### (ஆ) இதுவுமது.

முன்னம் பலமொழி மோதிய தாற்றுயர் மூண்டிருக்குந்
தென்னந் தமிழ்நிலத் திந்தியைச் சேர்ப்பவர் சீருரைபோல்
பின்னுங் கழற்றுரை பேசுவோர் அன்பின் பெருமையினை
உன்னும் உளங்கரந் தைப்பொழில் வாய்விரைந் தோடியதே.

### 147. தலைவி பாங்கியொடு பகர்தல்.

சுடருந் தணற்குத் துணையாம் வளிப்பின் சுருங்கியபோ
திடரும் அதுசெயல் போலெனக் கின்பமும் ஈந்தயலே
படரும் பொழுதவர் பைங்கணுந் தந்தனர்; பைந்தமிழோர்
தொடருங் கரந்தையிற் றேன்றமிழ் தொக்குநற் றூமொழியே.

### 148. தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

கல்லாத வர்க்கும் அருள்செய் கரந்தைக் கடிபுனத்தில்
இல்லாத ஏனல்நம் அன்னைக் குணர்த்திடி னிங்குறுதல்
செல்லாது, நின்னிலை தேரின் மனையகத் தேசெறிப்பாள்
பொல்லாது கற்பினுக் கெல்லா இனித்துயர் போற்றுகவே.

### 149. நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்.

பாவையங் கண்ணைவிட் டேகுதல் காணலன் பைங்கரந்தைக்
கோவையு மென்னையுங் கூட்டிப் பிரித்திடுங் கொள்கையுறு
தேவையெங் கண்முனர்க் காட்டுவ ரேல்வழி தேர்ந்திடுவேன்
பூவையெங் கேமணம் போக்கிப் பிரியுமிப் பூவிடத்தே?

### 150. தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

திருந்தார் உளங்குழை வாக்குஞ் செழுந்தமிழ் சேர்கரந்தை
இருந்தார் இசையுமின் பும்பெறல் போலநம் இன்றலைவர்
வருந்தேர் மணிக்குரல் கேட்டவிவ் வார்செவி வாழ்க! இனி
முருந்தார் முறுவலை நீமுகிழ்த் தாலென்ன மொய்குழலே?

### 151. தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

விரிக்கின்ற செந்தமிழ் மேவுங் கரந்தை வியன்புனத்தில்
சிரிக்கின்ற வேங்கைகண் டேநமர் சேர்ந்தார் தினையரிய
பரிக்கின்ற காவலும் நீங்கினம் பூவையும் பைங்கிளியும்
உரைக்கின்ற சொல்லினுக் கொப்புமை இல்லென் றுவந்திடுமே.

---

147. பெருநெருப்பிற்குத் துணையான காற்றுச் சிறு சுடருக்குப் பகையாதலின் இவ்வாறு கூறினாள்; பைங்கண்—துன்பம்; அமிழ்து—தமிழ். 148; இல்லாத ஏனல்—பறவைகள் கவர்ந்தநிலை; உறுதல்—காவல் செய்தல்; எல்லா—தோழி முன்னிலைப் பெயர். 149. கோவை—தலைவனை; தேவை—பால்வரை தெய்வத்தை.

### 152. தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

தேட்டம் விளைக்கின்ற செந்தமிழ் போற்றித் திகழ்கரந்தை
ஆட்டம் பயில்மஞ்ஞை காள்! இசை கற்ற அருங்குயில்காள்!
ஈட்டுந் தினைகொய ஈண்டினர் கானவர் ஏகுவம்யாம்
வாட்டங் கொளீர்மற வீர்! எமை அன்பர் மறப்பினுமே.

### 153. பாங்கி தலைமகன் முன்னின்றுணர்த்தல்

அணியார் செழுந்தமிழ் ஆளுங் கரந்தை அருட்டலைவ!
கணியார் தரும்பொனிற் கானவர் ஏனற் கதிரரியும்
பணியார்ந் தனர், பரண் காவலு நீத்தனள் பாவை, யினி
மணியார் மனைபுகு வாள்வழங் காளிவ் வறுங்களத்தே.

### 154. பாங்கி முன்னின் றுணர்த்தி ஓம்படை சாற்றல்.

ஊற்ருய் வளர்தமிழ் ஊறுங் கரந்தையில் ஓங்கிறைவ!
ஏற்ருள் தனக்குயி ராநினைக் கோமகள் இந்நிலையை
ஆற்ருள் அவள்மனைச் சேய்மையும் அன்றுநீ ஆங்குவரல்
மாற்ருய் அடைக்கல மாஞரை என்றும் மறவற்கவே.

### 155. கிழவோன் தஞ்சம் பெருது நெஞ்சொடு கிளத்தல்.

வேங்கை துரத்தினும் வெல்லுவன் நெஞ்சே! விரைமலர்சேர்
வேங்கை துரத்துதற் கென்செய்வ தின்பம் விளைதமிழின்
பாங்கை அறிந்தவர் வாழ்கரந் தைப்பதிப் பாவைஎனை
நீங்கை அறிந்தபின் னிவ்வுயிர் நீங்குதல் நேர்ந்திலனே.

## 12. பகற்குறி இடையீடு.

### 156. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

நால்வர் தமிழ்தெரி நாவார் கரந்தை நறும்புனத்தில்
பால்வந் திருந்தினைப் பைங்கதிர் முற்றிய பான்மையிற், பல்
கால்வந் தனைநனி கண்டுசெல் வாளெமைக் காணவினி
மேல்வந் திடருறல் வேண்டலம் யாங்கதிர் வேலவனே.

---

150. முருந்து—மயிலிறகின் அடி; 151, சிரித்தல்—மலர்தல்; பரிக்கின்ற—தாங்குகின்ற. 152. தேட்டம்—அறிவாகிய பொருள்; ஈட்டும்—விளைந்து முற்றும்.

153. கணியார்—வேங்கைமரம்; பொன்—பொன்போன்ற மலர்; மணியார்—கூலப்பொருளும் செல்வமும் நிறைந்த; வழங்கல்—வருதல்:

155: வேங்கை—புலி; நீங்கை—நீங்குதல்; 156: அனை—அன்னை;

### 157. இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

சிந்தனைக் குஞ்செவிக் கும்மமிழ் தாகிய செந்தமிழைத்
தந்தினிக் குங்கரந் தைப்புனம் மேவுநம் தாய்விளைந்த
செந்தினைக் காண்பது போலுனைக் காண்பதைத் தேரினது
நிந்தனைக் கேநினை வாங்குறி செல்லுதல் நீங்குகவே.

### 158. இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்.

அறிவுக் கமிழ்தமும் ஆக்கமும் சேர்க்கும் அருந்தமிழைத்
திறமிக் குணர்ந்துபின் செல்வோர் கரந்தையைச் சிந்தைசெயா
ருறவுக் கெனையெடுத் தொப்புமை காட்டுமிவ் வொண்புனமும்
நறவுப் பிழிமலர்ச் சோலையும் மஞ்ஞையும் நவ்வியுமே.

### 159. பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறல்.

விழாத்தொறும் நூல்வெளி யாக்கியென் றென்றும்விரி வுரைசெய்
குழாத்தொடு தொண்டுசெய் தோங்குங் கரந்தைக் குளிர்புனம்விட்
டழாத்துய ரோடெமர் ஆணையிற் சேறலை அன்பர்வரின்
தழாத்தொட ராயின மென்றுரை சாற்றுவிர் தத்தையரே!

### 160. பின்னுள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

ஈடும் எடுப்புமில் யாழ்நூல் அளித்திங் கிசைவளர்த்து
நீடும் கரந்தையின் நெஞ்சிடம் கொண்டவர் நேற்றுவரை
பாடுங் குரல்மடுத் தாய்சுர புன்னை! இப் பாவியினைத்
தேடும் படிவிடுத் தாரெவண் தோன்றுவர்? செப்புகவே.

### 161. தலைவன் வறுங்களம் நாடி மறுகல்.

பரிந்தார் வமிக்குப் பசுந்தமிழ் நூல்செயும் பாவலரைத்
தெரிந்தார் கரந்தைச் செழும்புனத் தேவார் தினைக்குரலை
அரிந்தார் களென்ற னுடம்பரி யாமலென் னுவிசெலப்
புரிந்தார்க ளீங்கிதண் என்மனம் போலொளி போயினதே.

### 162. குறுந்தொடி வாழுமூர் நோக்கி மதிமயங்கல்.

சேனு வரைய ருரையைக் கரந்தையிற் சேர்ந்தறியார்
யானு வறிகுவன் என்றுதொல் காப்பியர் யாப்பறியார்
போனு னறிகுவன் என்றனைப் பொன்னூர்ப் புகுநெறியை
ஏனே மயங்கியின் றென்பால் வருந்திளை ஏழைநெஞ்சே.

---

157. நிந்தனை—இற்செறிக்கும் நினைவு; 158; நறவு—தேன்; நவ்வி—மான்; மடுத்தாய்—கேட்டிருந்தாய்; 159; தழாத்தொடர்—நிலை மொழியும் வருமொழியும் நேரே பொருந்தாத தொடர். சேறலை—செல்லுதலை; தந்தையரே—கிள்ளைகளே; 160: இன்—உவமவுருபு 161: பரிவு—அன்பு; தெரிந்தார்—ஆய்ந்தமைத்துக்கொண்ட; இதண்—பரண்;

# 13. இரவுக்குறி.

## 163. இறையோன் இருட்குறி வேண்டல்.

மாகம் பசப்புற மாமலை ஏறினன் வான்கதிரோன்
மேகம் இருணிறம் மேவிய தாலினி மெல்லியலே!
பாகும் கசந்திடும் பைந்தமிழ் சேர்கரந் தைப்பதிநான்
போகும் வழியறி யேன்விருந் தாகப் புகுவதெங்கே?

## 164. பாங்கி நெறியின தருமை கூறல்.

கலைசூழ் தரவறங் காக்குங் கரந்தையிற் காவலனே
மலைசூழ் நெறிவரி நாகம் வழங்கும் வனங்கடொறும்
கொலைசூழ் விலங்கினம் கூடித்திரியும் குறவர்களேம்
நிலைசூழ் நகர்நெடுங் கங்குல் வருதல் நினக்கரிதே.

## 165. இறையோன் நெறியின தெளிமை கூறல்.

அறத்துறை நூல்பல செய்கரந் தைப்பதி ஆசிரியர்
மறத்துறை நூல்பயின் றேன்படை வாய்த்தனன் மாண்பகைவர்
நிறத்துறை வேல்வல னும்விலங் கூர்வன நேர்ந்திடிலென்
புறத்துறை கொள்வதல் லாற்புரி யாமிறை பூங்குழலே.

## 166. பாங்கி அவனுட்டணியியல் வினுதல்.

நாவலர் வேங்கட சாமிநாட் டாரின் நலங்கமழ்நூல்
பாவலர் சோலைக் கரந்தையிற் பாவையர் பாடிமகிழ்
பூவலர் காவும் புனமலர் சாந்தமும் பூணணியும்
கோவல னேவினை யாடிடத் தோடெவை கூறுகவே.

## 167. (அ) தலைவன் அவனுட்டணியியல் வினுதல்.

நாட்டார் புகழுங் கவிவேங் கடாசலம் நாநலத்தை
வேட்டார் கரந்தையில் மேவுந் தமிழ்போல் விளங்குவிர்எம்
நாட்டார் அணியியல் நீர்நாடி யாவதென்? நன்மொழிநும்
நாட்டார் நயந்தவை கூறின் நமக்காம் நலந்தருமே.

### (ஆ) இதுவுமது.

வேண்டாப் பொருளை விலைகேட்ப தொக்கும் விரும்பெமதூர்
நாண்டாங் கியல்மட வாரணி நாடியென் நற்கரந்தைத்
தூண்டா விளக்கனை யாய்நின தூர்வளர் தோகையரின்
பூண்டாங் கியல்மகிழ் பூம்பொழில் கூறின் புகும்பயனே.

---

162. தொல்காப்பியர் யாப்பறியார்–தொல்காப்பியரின் கருத்தை அறியமாட்டார்; போனுனறிகுவன்—போல்நான் அறிகுவன்; பொன்—தலைவி. 163. மாகம்–திசைகள். 165. படை—போர்க்கருவிகளைப் பயன்படுத்துந்திறன்; மிறை–தீங்கு.

**168. அவற்குத் தன்னுட்டணியியல் பாங்கி சாற்றல்.**

விழியென் றிருந்தமிழ் காக்குங் கரந்தையில் வேளனையாய் !
செழியன் திரைவளர் முத்தமும் தேமாத் திகழ்தழையும்
கழியன் புறுமலர் காந்தளும் சூடிகற் கண்டுகைக்கும்
மொழியின் விளங்குமெந் தோகையர் ஆடுவர் மொய்ம்பொழிலே.

**169. இறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தல்.**

படையா தெழுந்தமிழ் பாலித் தெழில்மிகு பைங்கரந்தைத்
தொடையார் கவிநலம் போலுநற் றேரகை!உன் தோள்விருப்பால்
உடையார் விலங்கணங் கூர்வன வற்றினூ ரேரகிலார்
இடையா மமேவரற் கெண்ணினர் செய்வதென் ஏந்திழையே.

**170. (அ) தலைமகள் நேராது நெஞ்சொடு கிளத்தல்.**

ஊதை மலியிருள் யாமத் துறுபுலி ஊரரவம்
கோதைத் தருநெறி கோமக னைவரக் கூறினளால்
மேதைக் கிலக்கிய மாவார் கரந்தை வியன்புலவர்
பேதைக் கிலக்கியம் பெண்ணொனல் யாதும் பிழையிலையே.

**(ஆ) இதுவுமது.**

தஞ்சம் புகுந்தவர் தாயாம் கரந்தைத் தமிழறியார்
வஞ்சம் பொருமை வலிவழக் கையம் வளர்ப்பவர்கள்
நெஞ்சம் புரையிருள் நேயத் தவர்வர நேர்ந்தவர்,ஊர்
நஞ்சும் கொலைமலி நாகமும் சூழ்நெறி நாடலரே.

**171 நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல்.**

பாலுந் தியதமிழ்ப் பாவார் கரந்தைநற் பாவலர்போல்
நாலுந் தெரிந்தவ ரேநயந் தார்வர நள்ளிருளில்
சேலுந் தியவிழிச் செந்திரு வேயினிச் செப்புதற்கு
மேலுந் தெரிந்தில னேவிடை உள்ளமும் மேவியதே.

**172. நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குணர்த்தல்.**

தேமாப் பலாச்சுளை வாழையின் தீங்கனி சீனிகற்கண்(டு)
ஆமாப் பொழியும் அமிழ்துடன் தேன்கலந் தாம்சுவைபின்
போமா றினிக்கின்ற செந்தமிழ்ப் பாக்கள் பொழிகரந்தைக்
கோமான் ! குறையிரந் தேன்மலர்ந் தாள்முகங் கோமளமே.

---

166. நூல்–இலக்கணம், பா–இலக்கியம். 167· வேட்டார்–விரும்பி அமைத்துக் கொண்ட. (ஆ) நாண் தாங்கும் இயல்—பூண்தாங்கும் இயல்—அணியியல்; புகும் பயன்–பயன் விளையும். 169. உடையார்–தலைவர்; அணங்கு—சூர்; ஊறு–துன்பம்.
170. ஊதை—மிகுபனி; கோதுஐ–துன்பத்தை; நெறி–வழி. (ஆ) புரை–ஒக்கும்; ஊர்நஞ்சு–பாம்பு; நாகம்–யானை. 171 உந்திய—வென்ற; நாலும்—நாற்பயன் நான்கும். உள்ளமும் மேவியது—என்மனம் அவரை விரும்பியது.

### 173. குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

தென்றற் பொதியத் திருந்தவன் தேர்ந்த செழுந்தமிழை
மன்றத் திருத்திய மாண்கரந் தையன மாமகளே!
குன்றத் திருங்கரி கொள்பகை யோடுநங் கொல்லையிலே
துன்றிப் பொருமொலி கேட்டனே யோபுவி தூங்கிருளே.

### 174. இறைவிக்கு இறைவன் வரவறி வுறுத்தல்.

முப்பெருஞ் சங்கமும் மூவேந்தர் தாமும் முயன்றளித்த
செப்பருஞ் செந்தமிழ்ச் சீர்வளர்த் தின்பந் திகழ்கரந்தைக்
கொப்பெனுங் காரிகை! உன்விருப் பால்நெறி ஊறகற்றிக்
கப்பிருள் வந்தார் கடிபுனல் நம்மைமுன் காத்தவரே.

### 175. பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல்.

இறவாக் கவிஇளங் கோவெழிற் சாத்த னியம்பியசொல்
மறவாக் கருத்தினர் வாழுங் கரந்தைநம் மன்னருனை
உறவாக் கொளவுயர் சோலையின் ஊடார்ந் துயங்குவரால்
நறவாக் கியதொடை யாய்விருந் தாகநீ நண்ணுகவே.

### 176. பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

மொழியைப் பரப்புங் கரந்தையைப் போல்வாய்! முறுவலுக்குப்
பழியைத் தரும்வன முல்லையைச் சென்று பறித்திரு,நான்
விழியை இதழை வெறுக்கின்ற நீலம் விரிகுமுதம்
பழியை அழிக்கப் பறித்தே வருகுவன் பைந்தடத்தே.

### 177. (அ) வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்.

புகலா னவர்க்கருள் பூக்குங் கரந்தைப் புலவரினேர்
பகலோ னகன்றிடத் திங்கட் பகைமனைப் பங்கயத்தை
இகலா னடைக்குமென் றில்லத் திருந்தெனக் கின்புதர
அகலா தெழுந்தனை? ஆரிருள் வாயெழி லாரணங்கே.

### (ஆ) இதுவுமது.

வாடாத நின்முக மாட்சியை நாணி மரைக்கதவை
மூடா திருந்தது வோமதி? மூடரை முத்தமிழின்
ஏடோத வல்லவ ராக்குங் கரந்தை இலக்கியத்தின்
பீடோது மென்முனர்ப் பேரரு ளால்வரும் பெண்ணணங்கே.

---

172. ஆமா—காட்டுப்பசு; அமிழ்து—பால்; பின்கோமாறு—சுவைகுறையுமாறு
173. இருந்தவன்–அகத்தியன்; கரந்தையன–கரந்தையைப்போன்ற; துன்றி–நெருங்கி. 174. நெறிஊறு—வரும்வழியில் உள்ள இடையூறுகள்; கப்பிருள்—செறிந்தஇருள். 175. ஊடார்ந்து–நடுவே வந்து; நறவாக்கிய—தேனைவடித்த.

### 178. தலைமகள் ஆற்றின தருமை நினைந்திரங்கல்.

மூப்பறி யாத்தமிழ் மூன்றும் வளர்த்து முதிர்கர ந்தை
யாப்பறி யார்கவி போனெறி யுஞ்,சுழி யாற்றுடனே
தாப்புலி யானையைத் தாக்குமிச் சாரலும் தாண்டியிருள்
காப்புறு வார்கணும் மாற்றிவந் தாயுயிர்க் காவலனே.

### 179 புரவலன் தேற்றல்.

அகத்தெழுங் காற்றி னளவா லெழுத்து மரும்பொருளை
வகுத்துணர் வேர்ச்சொலும் வாழ்மர பும்மலி வான்றமிழால்
பகுத்துணர் வார்புவிப் பன்மொழிப் பண்பையப் பாங்கினிருள்
புகத்தொளி வாக்குமிக் கைவேல்; கர ந்தையைப் போன்மயிலே.

### 180. புணர்தல்.

செப்ப லகவல் செறிந்தாங் கியல்மருட் செய்யுளுக்குத்
தப்பி லிலக்கிய மாயின மா தலின் தையலொடிங்
கொப்பி லிருந்தமிழ்ச் சங்கக் கர ந்தையில் ஒண்புலவோர்
செப்புங் கவிப்பொருள் தேர்வாரி னின்பந் திளைத்தனமே.

### 181. (அ) புகழ்தல்.

வளிமுத லாயவைம் பூதத் தியலுமவ் வானியலும்
ஒளிமுத லாகவின் கோளிய லும்பல் லுயிரியலும்
இளிமுத லாமிசைப் பண்ணிய லுஞ்சொலும் ஏர்கரந்தைக்
களிதமி ழாற்கவின் கூறுசொற் காணலன் காரிகையே.

### (ஆ) இதுவுமது.

தேனும் அமிழ்தும் தெவிட்டச் சுவைமிகு தீங்கவிதை
ஈனும் கரந்தை எழிலார் சிலம்பில் எழுமதி! உன்
கூனும் நிமிர்ந்து கறையும் குறையினும் கோதைமுகம்
மானும் பெருமையுண் டோகதிர் முன்வரின் வாடுவையே.

---

176. முறுவல்—பற்கள்; பைந்தடத்தே சென்று பறித்துவருவேன் எனக்கூட்டுக.

177. திங்களாகிய பகை மனையாகிய தாமரை மலரை; அடைக்கும்—குவியச் செய்யும்; (ஆ) மரை—தாமரை; கதவு—இதழ்; 'மதி' தாப்பிசையாக வந்தது; மூடரையும் என்ற உம்மை தொக்கது; பீடு—பெருமை; 178; தா—வலிமை காப்புறுவார்—ஊர்க்காவலர்; 179; தமிழால் மற்றைய மொழிகளின் இயல்பை அறிதல் போல வேல் ஒளியால் நெறிபார்த்து வந்தேன் என்றான்; 180; மருட் செய்யுள்—மருட்பா; தேர்வாரின்—ஆய்ந்தவர் போல.

**182. இறைமக ளிறைவனைக் குறிவரல் விலக்கல்.**

தன்பா லியைந்தவர்க் கெல்லா நலமுந் தருங்கரந்தை
யின்பா லறம்பயி லாதவர் செல்வம் எனவிருளில்
வன்பா லுழுவையும் யானையும் துன்பம் வழங்குபவால்
அன்பா லிரந்தனன் ஆருயி ரேவர லாரிருளே.

**183. இறைவன் இறைவியை இல்வயின் விடுத்தல்.**

கற்றார் மகிழ்கரந் தைத்தமிழ் நாவலர்காவியம்போல்
வற்றாச் சுவைகமழ் மங்கைநல் லாயுன் வளர்மனைக்கண்
பெற்றாள் நினது பிரிவறி யாமுனம் பேடையென
நற்றாள் சிவப்புறக் கொய்யா மலருடன் நண்ணுகவே.

**184. இறைவியை எய்திப் பாங்கி கையுறை காட்டல்.**

முகநாணுந் தாமரை மொக்கிவை யுன்றன் முறுவலுக்கு
மிகநாணும் முல்லையம் போதிவை காண்கநின் வேல்விழிபார்த்
தகநாணுங் காவிக ளாமிவை செந்தமிழ் ஆர்கரந்தைப்
புகநாணும் புன்மடம் போலொளி போயின பூங்குழலே.

**185. இற்கொண்டேகல்.**

இயலார் தமிழ்வளர்த் தின்பார் கரந்தையிவ் வேந்தலுடன்
அயலார் நமையறி யாமுனும் அன்பா லருகணைத்துத்
துயிலார் செவிலியெ ழாமுனும் காவலர் தோன்றுமுனும்
கயலார் விழிமட வாய்விரை வோம்நங் கடிமனைக்கே.

**186. பிற்சென்றிறைவனை வரவு விலக்கல்.**

அரவஞ் சரிகரி மேவும் புனத்திடை ஆண்டகைநீ
வரவஞ் சலையெனின் வண்கரந் தைத்தமிழ் வள்ளுவனார்
இரவஞ் சுகவெனச் சொல்வதற் கென்பொருள் ஏற்பவர்க்குக்
கரவஞ் சுகவெனச் சாற்றுதற் கோர்பொருள் காணலையே.

**187. பெருமகன் மயங்கல்.**

நெய்ம்மிகுந் தாறு சுவைநிகழ் உண்டியை நீள்கலத்திற்
பெய்துண்ணும் போது கழுத்தைப் பிடிப்பவர் பெற்றியென
வெய்துரை யாடினை, மீக்கரந் தைத்தமிழ் மெல்லியலும்
நய்வுறும் யானுமிந் நாளுளம் ஒன்றிய நட்புகண்டே,

---

182. அறம்பயிலார் தாம் கொண்ட செல்வத்திற்கும் செல்வம் அறம் பயிலாதவர்க்கும் துன்பிழைத்தல் போல உழுவையும் யானையும் தம்முள் துன்புறுத்திக் கொள்ளுமென்க; 183. கொய்யாமலர்—சென்றுசேர்கல்லாப்புள்ள என்பது போல நின்றது; 184. இரவாதலின் தாமரை மொக்கென்றாள்;

### 188. தோழி தலைமகள் துயர் கிளந்துவிடுத்தல்.

சங்கந் திகழ்கரந் தைத்தமிழ் நாவலர் தாம்புகழ்முச்
சங்கந் திகழ்தொகை நூலறிந் தாயுளச் சால்பொடுதே
சங்கந் திகழ்தரு மாமகள் சங்கை தவிர்ந்துணரச்
சங்கந் திகழொலியாலூர் புகுந்ததைச் சாற்றுகவே.

### 189. திருமகட் புணர்ந்தவன் சேறல்.

நெருங்குறு வார்க்கமிழ் தாந்தமிழ் நாளும் நிகழ்த்தியிசை
தருங்கவி வாணர்கள் சேர்கரந் தையனத் தையலிழை
மருங்கினுக் கோடுமின் னும்முகக் கோடிய வான்மதியும்
ஒருங்கெழு மாலினி யூர்புக லெற்கெளி தொண்டொடியே.

## 14. இரவுக்குறி இடையீடு. (அல்லகுறி)

### 190. இறைவிக் கிருளை இறைவர வுணர்த்தல்.

கதிரொத்த வாய்மைக் கவிவாணர் சூழ்ந்து கரந்தையிலாய்
மதுரைத் தமிழ்புரை மங்காய்! குயில்கிளி மாமயில்கள்
எதிரொத் துவேதம் பயில்பவர் போனள் ளிரவினிலூர்
அதிரக் குரலெடுத் தார்த்தன வின்னும் அயர்ந்திலவே.

### 191. தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக் குரைத்தல்.

வல்லாறு மெல்லிடைச் சார்பெழுத் தாலொலி மாறுதலைக்
கல்லார் வடமொழி என்றே கதைப்பர் கரந்தையினிற்
சொல்லா ரியல்தெரி யாரத னுண்மையைத் தூக்கலர்போல்
அல்லாக் குறியை அவர்செய்த தாச்சென் றழுங்கினனே.

### 192. பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பல்.

மடக்குத் திரிபு யமகமந் தாதி மிறைமுதலாம்
மிடுக்குற் றெழுகவி யாற்பிறர்க் கின்பம் விளைவதுண்டோ
அடக்குற் றிரும்பொரு ளஞ்சொற் புனைகவி யார்கரந்தை
நடக்குற் றவர்தெரி யாக்குறி நாடினர் நல்லவரே.

---

185. கடி—காவல்; 186. அஞ்சு அரி—அச்சந்தரும் அரிமா. இரவுக் காலத்தில் வருதலை அஞ்சுக என்பது யான்கொண்ட பொருள் நீ இரப்பதை அஞ்சுக என்பையாயின் இரப்பார்க்குக் கரவஞ்ச வேண்டுதலின் எம் வேண்டுகோளை மருதே என்றுள். பின்னும் கரவஞ்சுக வென்பதற்கு மறைந்தொழுகும் களவொழுக்கத்தை அஞ்சுக என்ற பொருளையும் காண்க என்பாள் காணல் ஐய என்றுள்.
187. நய்—நை—போலி; 188. தேசு அங்கம் திகழ் — ஒளி வீசும் உடல். ஊர்புகுந்தமைக்கறிகுறியாக சங்கொலி நிகழ்த்துக என்றுள்;
189. இழை மருங்குல்—நூல்போன்ற இடை; 190. அயர்ந்தில—உறங்கில;

### 193. தலைமகன் புலந்துபோதல்.

சுடர்மதி யாவையுந் தூக்கிவி ழுங்குமித் தூங்கிருளில்
விடர்நதி மாமலை தாண்டிவந் தாய்விழி வேண்டுபவர்
தொடர்கரந் தைத்தமிழ் மாக்கவி போன்றவள் தோள்விருப்பால்
படர்தரு நோயையல் லாற்பயன் தந்திலை பாவிநெஞ்சே.

### 194. புலர்ந்தபின் வறுங்களந் தலைவி கண்டிரங்கல்.

உலராத தண்டமிழ் ஓங்குங் கரந்தை உரைச்செயுளுட்
சிலராதல் செந்தமி ழன்றிப் பிறமொழி சேர்ப்பதுண்டோ
அலராது செங்கழு நீர்மாலை மாதவி யாதலினால்
புலராத போதுவந் தார்கொலெம் மையரிப் பூம்புனத்தே.

### இதுவுமது.

மாலை வரமனம் வாடுறும் மங்கை மடியமண
மாலை புனைந்ததிம் மாதவி என்றோ வளர்தமிழ்ச்சொன்
மாலை புனைபவர் வாழ்கரந் தைப்பதி மன்னவரின்
மாலை மிகநினைந் தோவொலி செய்தன வான்புட்களே.

### 195. தலைவி தன்றுணைக் குரைத்தல்.

குராவரு சோலையிற் கூடியு ளத்தினைக் கொண்டகன்றோர்
இராவரு வாரென ஏகினன் தோழிசொல் லின்புலவர்
பராவரு செந்தமிழ் வாழ்கரந் தைப்பதி பற்றலர்போல்
விராவரு துன்பினை மேவினன் செய்வதென் வேறினியே ?

### 196. தலைமகளவலம் பாங்கிதணித்தல்.

கட்டிய மாலையம் மாதவி மேலுள காரணத்தை
ஒட்டியு ணர்ந்திடின் காதலர் வந்ததிங் குண்மையினி
மட்டியல் கோதை ! கரந்தையில் மன்னி வளர்தமிழ்நூல்
சுட்டிய ஊழ்வலி யேயது நீக்குளத் துன்பினையே.

### 197. இறைவன்மேற் பாங்கி குறி பிழைப்பேற்றல்.

அறியா ரெலாமிங் கறிவா ருறினென் றறிஞர்புகழ்ச்
செறிவார் தமிழ்க்கரந் தைவரு செம்மலச் சேயிழையாள்
குறியாக் குறிகுறித் தீர்நும தூருங் குறித்திலிர்யாம்
நெறியா லுறினுமென் நீர்மதி யாவிடின் நெஞ்சினிலே.

---

191. தூய தமிழ்ச்சொற்களையும் ஒலி வேறுபாட்டினால் வடசொல் என்று அறியார் கூறின் இலக்கணந்தெரியாதவர் அதன் உண்மையறியாது மயங்குதல்போல் அல்லகுறிப்பட்டேன் என்றாள்; 192. மிறை—சித்திரகவி. அரியபொருள்களை எளிய சொற்களால் புனையும் கவிசேர்கரந்தை என்க. நடக்குற்றவர்—ஆண்டுப் பயின்றவர்; 193. விடர்—மலைப்புதர்;

**198. இறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றல்.**

தஞ்சையின் சீர்கரந் தைத்தமிழ் சங்கத் தரும்புலவோர்
வஞ்சியர் வஞ்சியர் என்பதைத் தேறலன் வந்திருள்வாய்
மஞ்சயர் சோலையில் நெஞ்சுடல் சோர்ந்தும் மறக்குமொரு
விஞ்சையிற் றேர்ந்திலன் விஞ்சின ளாமதில் மெல்லியலே.

**199. தலைவி குறிமருண்டமை பாங்கி தலைவற்கியம்பல்.**

பரவும் பொருணிறை பைந்தமிழ் சேர்கரந் தைப்பதியாய்
அரவந் திரிதலிற் கிள்ளைக ளஞ்சியங் கார்ப்பரித்த
அரவந் தனைக்குறி யாமகிழ்ந்தேகி அடைந்துதுயர்
தரவந் தனள்மலர்ப் பூங்கொடி எல்லாம் தலைவிதியே.

**200. அவன்மொழிக் கொடுமை பாங்கி தலைவிக்குணர்தல்.**

விரவி யெழுஞ்சுவை சேர்கரந் தைத்தமிழ் வீறறிவார்
இரவி லெழுந்திடை யூறறி யாதங் கிருந் "திரவி
புரவி எழுந்தமை கண்டபின் போயினேன் பொங்கியுளம்
மருவி எழுந்துயர் மாற்றுவ ராரெ" ன மாழ்கினரே.

**201. என்பிழைப் பன்றென் றிறைவி நோதல்.**

வகையா யிருந்தமிழ் வாழ்விக்க வந்த கரந்தையில்வாழ்
தகையா யவர்குறிச் சாருமுன் னேநமைத் தானழைத்துப்
பகையா வருங்குயில் கிள்ளைகள் நீங்காப் பழிசெய்யவென்
மிகையா நினைந்தனர் மேலவர் செய்வதென் மெல்லியலே.

**202. தாய்துஞ்சாமை. (வருந்தொழிற்கருமை)**

மொழியுரங் காப்பவர் மொய்க்குங் கரந்தையுள் முத்தமிழின்
வழியறங் காப்பவர் வந்துறு வேனெனும் மல்கிருளும்
பழியிறங் காமொழி அன்னைமுன் தந்தனள் பாலமுதம்
விழியுறங் காதெனக் கின்றுமிக் கீந்தனள் வெந்துயரே.

---

194. வேற்றுப்பொருள் வைப்பை அங்கமாகக் கொண்ட ஏதுவணி – பிற்கவியில் மாலை என்பது முறையே—முன்னிரவு மலர்த்தொடை செய்யுள் மயக்கம். இது யமகம் என்னும் சொல்லணி; 195. குரா—ஒரு மரம்; 196. மட்டு—தேன். ஊழ்வலியே அது என்றுனும் ஊழ் வலி ஏயது என்றுனும் பிரித்துக்கொள்க;

197. செம்மல்—அண்மைவிளி. குறியாக் குறி—முன்னறிவியாத அடையாளம், குறித்தாய்—நிகழ்த்தினுய்; குறித்திலிர்—நீர் கூறவில்லை; நெறியாலுறுதல்—தேடியடைதல்; 198. வஞ்சியர் — கொடிபோல்பவர் — வஞ்சியர் — வஞ்சனை உடையவர், கொடியார். மஞ்சயர்—முகில்தங்கும். விஞ்சை—கல்வி.

199. அரவம்—பாம்பு, ஒலி; 200. இரவிபுரவி—கதிரவன் தேர்க்குதிரைகள்;

201. நம் மொழிக்குத் தோற்ற குயிலும் கிள்ளையும் அம்மொழியாலேயே இடர் செய்தன என்றுள் தலைவி. மிகை—குற்றம்;

### 203. நாய்துஞ்சாமை.

தரைக்கு முதன்மொழி யாந்தமிழ் சார்கரந் தைப்பதிசேர்
வரைக்குத் தலைவனம் பால்வரும் போதினில் வன்மொழியே
உரைக்குஞ் செவிலியொ டன்னை யுறங்கினும் ஊர்புகுந்து
குரைக்கும் ஞமலியின் கூட்டநங் கூட்டங் குலைப்பதற்கே.

### 204. ஊர் துஞ்சாமை.

இயலிசை யன்றியும் நாடக மொன்றினை ஏன்பிரித்தார்
பயிலிசை நற்கரந் தைப்புகழ்ப் பாவலர் ? பாவையர்கண்
துயிலிசை யாமலத் தோன்றல் வரும்வழித் தொல்லைதரும்
செயலினை ஓர்ந்திலர் தேமொழி ஊரினும் துஞ்சிலவே.

### 205. காவலர் கடுகுதல்.

வாயொடு சிந்தனைக் கின்பளிக் குந்தமிழ் வாழ்கரந்தைச்
சேயொடு சென்றினிச் சேர்வதற் கோர்வழி தேறகிலேன்
தாயொடு நாய்மகி ழூர்துயின் றுலுமென் தங்கிருளில்
பேயொடு மாறுறுங் காவலர் போகிலர் பெண்கொடியே.

### 206. நிலவு வெளிப்படுதல்.

பலவாய நூல்தரும் பைங்கரந் தைத்தமிழ் பாங்கிருக்க
சிலவாய நாளுறும் செம்மையில் லாமொழி சேரரசாய்
உலவாயி ருப்பது போலுமிவ் வானில் உடைந்தமதி
நிலவா யெழுநெருப் பாகவென் நெஞ்சினி னேரிழையே.

### 207. (அ) கூகை குழறுதல்.

பாட்டான் மலிந்த பழந்தமிழ் நூலைப் பரப்பியொளி
ஈட்டான் மலிகரந் தையெழிற் பாவுறு மின்பமெனக்
கூட்டான் மகிழநங் கோன்வரும் எல்லைக் குழறுமிந்தக்
கோட்டான் றனையொரு கோட்டான் வதைக்கிலென் கோல்வளையே.

### (ஆ) இதுவுமது.

கவ்வருக் கத்திலி ரண்டொன்று மாறிக் கலக்குமவ்வால்
தவ்விப் பறக்குமா றென்பது தானத் தலைவர்வருஞ்
செவ்விக் கிகல்செய்த தாலினிச் செந்தமிழ் சேர்கரந்தை
நவ்விக் கிகல்விழி யாய்நந் தவமிக நன்றுநன்றே.

---

202 மல்கிருள்—செறிந்த இருள்; பழியிறங்கா—சுடுசொல் குறையாத;
203. வரை—மலை. கூட்டம்—குழு, புணர்ச்சி; 204. நாடகங் காணுதலால் பாவையர் துயிலிசையாமலிருந்தனர் என்க; 205. சேய்—முருகன். பேய் போலுங்காவலர்—உறங்காது திரிதலுக் குவமை; 206. சிலவாயநாள்—குறைந்த ஆயுள். செம்மை—இலக்கணம். உலவா—உலவி. உடைந்தமதி—குறை மதி அல்லது முகத்திற்குத் தோற்ற மதி;

### 208. கோழி குரல் காட்டுதல்.

வெஞ்சூட் டிருஞ்சுடர் மேவுதற் கோதமிழ்வேளெனுங்கார்
மஞ்சூட் டிடவளர் மாண்கரந் தைமன் வரவுகண்டோ
செஞ்சூட் டிருஞ்சிறை சேவலும் கூவியென் சிற்றுயிர்க்கு
நஞ்சூட் டியபுகு மீதே இயற்கையிந் நானிலத்தே.

## 15. வரைதல் வேட்கை.

### 209. தலைவியைப் பாங்கி பருவரல் வினுதல்.

ஆலமுண் டோன்வரை விந்தமும் போய்த்தமிழ் அன்னையின்று
ஞாலமுண் டோன்வரை யும்மிழந் தாளென நைந்தனையோ?
மூலமுண் டோபிற நின்றுயர்க் கன்னை முனிந்தனளோ?
மேலுமுண் டோகரந் தைத்தமிழ் போற்கமழ் மெல்லியலே?

### 210. (அ) தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

செல்லா உணவுமென் கொள்ளா உறக்கமும் செப்புமொழி
ஒல்லா நிலையுமோர்ந் தன்னைக் "கரந்தையைப் போலொளிரும்
நல்லாய்! உளத்திலென் நாடினை?" என்றனள் நாக்குழற
எல்லா! மறைத்தொரு வில்லா விடையை யியம்பினனே.

### (ஆ) இதுவுமது.

பண்பட்ட செந்தமிழ்ப் பாநலம் பார்த்துப் பயில்கரந்தைத்
தண்பட்ட மேவிய சாரற் குறுகுந் தலைவரின்பால்
எண்பட்ட நெஞ்சொடு யானிருக் கும்போ தெனைவளர்த்தாள்
கண்பட்ட தாலுளம் புண்பட்ட தேவுயிர்க் காரிகையே.

### 211. தலைமகள் தலைவன் வருந்தொழிற் கருமை சாற்றல்.

தரையொடுங் காத தமிழ்சேர் கரந்தைத் தலைவர்வரின்
உரையொடுங் காத செவிலியும் ஊருமூர்க் காவலரும்
குரையொடுங் காத ஞமலியும் கூகையும் கோழியும்வான்
வரையொடுங் காத மதியும் பகைசெயும் வாணுதலே.

---

207, கோட்டான்—கூகை; கோட்டான்—மரக்கிளையால் (ஆ) கவ்வருக்கத்திலிரண்டொன்று மாறிக்கலக்கும் ம—காகம்; ஆறுரென்பது—கூகை; செவ்வி—காலம்; நவ்வி—மான்; 208. செஞ்சூட்டு—கொண்டை; ஊட்டிய — ஊட்டுதற்கு; நானிலத்தியற்கையாவது—பட்டகாலிலே படுதல்.

209. ஆலமுண்டோன் — சிவபெருமான். வரை — இமயமலை. விந்தம் — விந்தியமலை. ஞாலமுண்டோன் — திருமால். வரை — வேங்கடமலை. பிறமூலமுண்டோ என மாறுக — துயர்வேறுமுண்டோ என்க; 210. ஒல்லாநிலை—பொருந்தாமை. ஓர்ந்து – ஆய்ந்து; எல்லா! — தோழியே! இல்லாவிடை—பொய்ம்மை; தண்பட்டம்—குளிரோடை; எண்பட்ட—சிந்தனையுடைய; கண்பட்டது—கண்டனள் என்றபடி:

### 212. தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்.

அருந்தமிழ் வேலையில் ஆரமு துண்ணற் கறிஞர்புகழ்க்
கரந்தையின் பாலணை வாமெனச் சொல்வர் கமழ்குழலாய்!
மருந்தனை யார்மனம் போல்வலி கொள்ளுமோர் மாட்சியிலேம்
தெரிந்தனை வோமவர் சீர்பதி நந்துயர் தீர்வதற்கே.

### 213. பாங்கி இறைவனைப் பழித்துரைத்தல்.

நெறிமர பாயவை நீங்ககி லாத்தமிழ் நேர்கரந்தைக்
குறிமர பானமைக் கூடிய கோனுளங் கொண்டதெலாம்
பொறிமர பாயின வோவுயி ரென்றுபு கன்றதுபொய்ச்
செறிமர பாயின தாடவர் யாவரும் தீயவரே.

### 214. இறைவி இயற்பட மொழிதல்.

வளிநிலை வான்பரி ஞமம் ஒளியொலி மாட்சியெலாம்
தெளிவுடன் செப்புந் திறந்தமிழ்க் குண்டெனத் தேர்ந்திருந்தும்
இளிவரல் நம்மவ ராற்பெறக் கண்டனம் ஏர்கரந்தைக்
களிதமி ழார்மறந் தாரெனின் நம்வினை காரிகையே.

### 215. கனவு நலிபுரைத்தல்.

மொழித்தேன் பிழிபவர் வாழ்கரந் தைப்பதி வள்ளலுடன்
சுழித்தே னிரவினிற் றூக்கமென் றோர்ந்திலன் றுண்ணெனவே
விழித்தே னியற்கையை வெஞ்சுடர் தன்னை வெறுத்திறையைப்
பழித்தேன் நினைவென வோர்நிலை யீண்டுப் படைத்ததற்கே.

### 216. கவினழி புரைத்தல்.

பீடுறு செந்தமிழ்ப் பெட்பார் கரந்தையைப் பேணகிலார்
நாடொறு நூனய மாயகி லார்மதி நைவதென
வாடுறு மென்னெழில் மங்கைநல் லாயிந்த, மண்ணுலகிற்
கோடுறு தேன்மகிழ்ந் தாரதைச் சேற்றிடைக் கொட்டுவரே?

---

211. தரையொடுங்காத—தரையின்கண்ணே பிறமொழிகள்போல மறையாத; உரை—இடித்துரை; ஞமலி—நாய்; வான்வரை—ஆகாயத்திடத்து; 212. தமிழ்வேலை—தமிழாகிய கடல். 213: நெறி-இலக்கணம்; மரபு—சான்றோர் வழக்கு; குறிமரபால்—குறியினிடத்து முறைமையாலே. பொறி மரபு—ஐம்பொறியால் நுகரும் இன்புச் செயல்; செறிந்த பொய் என மாறுக. 214: வளிநிலை—காற்றின் இயக்கமும் செறிவும்; ஒளி—வானிடத்துள்ள கோள்கள் கதிர்மதி முதலியன: ஒலி—கடலொலி இடி அநுகரண ஓசை முதலியனவும் எழுத்தொலி முதலியனவும்;
215: சுழித்தல்—திளைத்தல் தூக்கமும் விழிப்புமாகிய இருநிலைமையுடைய இயற்கையையும் அதனை இயற்றும் கதிரவனையும் காரணமாகிய கடவுளையும் வெறுத்தேன் என்றாள் தூங்கிக்கொண்டேயிருந்தால் கனவு நிலை நீடிக்குமென்ற கருத்தால்: 216. கோடுறுதேன்—கொம்புத்தேன்; பிறபொருள்வைப்பணி,

### 217. தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்.

ஒன்றே இறையென ஓதுந் தமிழ்நெறி யோர்கரந்தை
நின்றே பயின்றநெஞ் சத்தவர்க் கென்றன் நெடுந்துயரைச்
சென்றே உரைப்பவர் நன்றே பெருதவென் தீவினையைக்
கொன்றே புகழ்பெறு வாரெனக் கும்முயிர் கூட்டுவரே.

### 218. துன்புறு பாங்கி நீ சொல்லெனச் சொல்லல்.

தும்பியி டத்தினற் றேனிருக் கும்மிடம் சொல்லுவரோ ?
அம்பிய லும்விழி யாய்கரந் தைத்தமிழ் ஆளர்போல்
வெம்பியி ருந்தெழில் வாடுமுன் மேனி மெலிவையெலாம்
நம்பிய கப்பொருள் தேறினர்க் கென்யான் நவிலுவதே.

### 219. அலர்பார்த் துற்ற அச்சக் கிளவி.

வீயலர் நன்மணம் மேவுங் கரந்தை வியன்றமிழைத்
தோயலர் வாயுரை போற்றுயர் செய்யுமித் தோகையரின்
வாயலர் நாணுதும் வார்குழல் ! முன்னம் மதன்சிலையில்
சாயலர் ஆற்றகில் லேனிவை வேறெனைச் சார்கின்றதே.

### 220. ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி.

செல்லுறு காரெனச் செந்தமிழ்க் காவியம் செய்தகம்பன்
சொல்லுறு நற்கரந் தைமகிழ் தோன்றல் துணிந்துவரும்
கல்லுறு கான்வரைக் கைம்மலை தேடிக் கடும்புலியூர்
அல்லுறு புன்னெறிக் கேயுளம் போயின தாயிழையே.

### 221. காமமிக்க கழிபடர் கிளவி.

சங்கந் திகழ்கரந் தைத்தமிழ் ஒப்பத் தருமமிழ்து
பொங்குங் கடற்கழி காள்பொழில் காளெழிற் புள்ளினங்காள் !
இங்குற் றழுவதென் னேயெனக் கேளலிர் என்னுயிரிற்
பங்குற் றவர்வரப் பார்த்துரை யீரென்ன பாவமிதே ?

### 222. தன்னுட் கையா றெய்திடு கிளவி.

உடல்வெளுத் தாயுறங் காயுண வுண்ணுய் உயர்குருகே !
மடல்விடு செந்தமிழ் மன்றல்மிக் கோங்க மகிழ்கரந்தைக்
கடல்வழி நோக்கிநின் றேங்குமென் போலக் கலந்தவரை
அடல்புரி யாணினத் தாற்றுயர் நீயும் அடைந்தனையே ?

---

217: சென்றுரைப்பவரைப் பெருத தீவினையைச் சொல்லுதலாவது சென்றுரைப்பவரை நேரச் செய்தல்; செய்பவர் புகழ் பெறுதலோடு தனக்கும் உயிரளித்தவராவர் என்ருள்: 218: தும்பி—வண்டு; தலைவனே நின்துயர் அறிவான் நான் சொல்வது மிகை என்று தோழி கூறினள் என்பது கருத்து. 219: வீஅலர்—விரியும் மலர்கள் அலரும்; தோயலர்—பொருந்தாதவர்; வாயலர்—வாயாற் கூறும் பழிமொழி. சிலையில் சாய்அலர்—வில்லிற் பொருந்தும் மலரம்புகள்:

223. நெறி விலக்குவித்தல்

கணங்கொளுஞ் செந்தமிழ்க் காவலர் துன்னுங் கரந்தையின்பாற்
குணங்கொளும் நூலறி கோமகன் தன்னைக் குறுகியவர்
மணங்கொளும் நாளினல் லாலிருள் வாயரி மாவிலங்கின்
நிணங்கொளும் நீணெறி வாரலென் பார்க்கிசை நீடுமன்றே.

224. குறிவிலக்குவித்தல்.

நெறிவரு செந்தமிழ் நீடுங் கரந்தையை நேரணங்கே
கறிவளர் சாரல்நம் காவிடை முன்னங் கலந்துவரும்
குறிவரு வாரிடம் கூறுக அன்னையக் கொல்லையிலே
மறிதரு வாள்பகல் ஆரிருள் சேரலம் வாரலென்றே.

225. வெறி விலக்குவித்தல்.

தேடும் பொருள்களெ லாந்தருந் தெய்வத் தமிழினிசை
பாடும் கரந்தையைப் பற்றலர் போலுளம் பைங்கணுற
ஆடும் வெறியினை ஆய்ந்தனள் அன்னை நம் அண்ணலினுற்
கூடும் பசப்பை யணங்கணங் கிற்றெனக் கொண்டனளே.

226. பிறர் வரைவு விலக்குவித்தல்.

பெற்றோர் அறிகிலர் என்மனம் நன்மணம் பேசிமனை
உற்றோர்க் குரைவிடுத் தாலுடன் யானும் உயிர்விடுவேன்
மற்றோர் பிறப்பினி லேயெனை முன்னம் மணந்துகொளக்
கற்றோர் மகிழ்கரந் தைவரை யாரிடம் கண்டுசொல்லே!

227. குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

பார்கொண்ட வாழ்வினைப் பாடுந் தமிழ்வளர் பைங்கரந்தை
ஊர்கொண்ட வேலவர் உற்றா ருடன்களி றூர்ந்துமணச்
சீர்கொண்ட னைந்திடிற் செந்திரு வேநமைச் சேர்ந்தவர்கள்
கார்கண்ட தோகையைப் போலெதிர் ஏற்றுக் களிகொள்வரே.

---

220. சொல்—இடி; உறுதல்—பொருந்துதல்; கைம்மலை—யானை; அல்—இருள். 221. கழிபடர்—மிக்க துன்பம்; 222: மன்றல்—புகழ் மணம்; அடல் புரிதல்—கொல்லுதல். 223 கணம்—குழு; அரிமா—சிங்கம். நிணம்—கொழுப்பு

224. கறிவளர் கானம்—மிளகுக்கொடி படரும் மலைச்சாரல்; குறி—பகற்குறி இரவுக்குறி; மறிதருதல்—வந்துவந்துபோதல்; சேரலம்—வரமாட்டோம்.

225. பைங்கண்—துன்பம்; வெறி—வேலனாடும் வெறியாடல்; அணங்கு—சூர்மகள். 226. உரைவிடுத்தல்—மண உறுதி கூறுதல். 227. உலகில் வாழ்வதெப்படி என்ற அறநெறியை விரித்துக்கூறும் தமிழ் என்றபடி.

# 16. வரைவு கடாதல்.

## 228. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

ஈரைந் தொலியிரு நான்கிடம் மேவி எழுந்தமிழின்
சீரைந் துரைப்பவர் சேர்கரந் தைப்பதி செம்மல்! விழி
நீருந்து கண்ணியைக் கண்டவெந் தாயெனை நேர்வினவ
ஊருந் திரையவள் வண்டல் அழித்ததென் றோதினனே.

## 229. அலரறிவுறுத்தல்.

காவுற் றெழுந்தநுங் காதல் முகையைக் களவெனுமோர்
நாவற்ற வண்டலர்த் தாநிற்ப விந்நகர் நங்கையர்வாய்
மேவுற் றலர்ந்தத னூற்கரந் தைப்பயில் வேளனையாய்!
நோவுற் றினைந்தனள் பாவைஎன் னேயினி நோற்பதுவே?

## 230. தாயறிவுறுத்தல்.

ஒலியும் வடிவும் உருமாறி னும்வேர் உறுபொருளால்
மலியும் தமிழ்ச்சொலிஃ தாரிய மன்றென மாண்கரந்தைப்
பொலியும் புலவோ ரறிவராங் கன்னை நம் பூங்கொடியாள்
மெலியும் உருமறை யின்விளை வென்று வெதும்பினளே.

## 231. வெறியச் சுறுத்தல்.

உள்ளத் தெளிவுரைக் குந்தமிழ் நூல்கள் உணர்வுடையோர்
கொள்ளத் தருங்கரந் தையெங் குரிசினீ கொண்டநலம்
எள்ளத் தனையறி யாளணங் கிற்றென எண்ணிமறி
துள்ளத் துணிக்கும் வெறியாட லன்னை தொடங்கினளே.

## 232. பிறர்வரை வுரைத்தல்.

எண்மை உணர்வழ காழும் இசையோ டியன்றுசுவைத்
தண்மை தருந்தமிழ் சேர்கரந் தைமலர்த் தாருடையோய்!
பெண்மை மிளிருமென் பேதைக் குருகினர் பேசுமணம்
உண்மை தெரிந்திடின் உண்டாம் விளைவையும் உன்னுகவே.

---

228. ஐ-ஔ—கூட்டொலியாதலின் உயிரொலிபத்தென்றபடி. இடப் பிறப்பும் முயற்சிப் பிறப்பும் ஆயஎட்டு. எழுத்து, சொல், பொருள், யாப்புஅணி என்ற ஐந்திலக்கணம். வண்டல்—ஒரு மகளிர் விளையாட்டு. 229. கா—சோலை. நோற்பது—மணநாளை எதிர்பார்த்தடங்கியிருத்தல் 230. சில தமிழ்ச் சொற்கள் வடமொழிபோன்றிசைப்பினும் அடியையும் பொருளையும் ஆய்ந்தால் தமிழே என்பதுறுதியாம் என்பது முன்னிரண்டடிகளின் கருத்து. மறை—களவு.

231. குரிசில்—தலைவன்; மறி—ஆடு. 232. உருகினர்—அழகில் மயங்கினர்; மணம் பேசும் உண்மை என மாறுக; உன்னுக—எண்ணிப்பார்:

### 233. வரைவெதிர் வுரைத்தல்.

குழைத்தமு தூட்டிய குன்றை முனித்தமிழ் கொள்கரந்தைத்
தழைத்தரு ளோங்கிய சான்றவர் முன்வரத் தானுமொளி
இழைத்தெழில் மேவுமென் நங்கைநல் லாள்மணம் ஏற்கவரின்
மழைத்துளி கண்டசகோரமொப் பார்மலே வாணர்களே.

### 234 வரையுநாளுணர்த்தல்.

கார்கொண்ட காவினிற் கள்வாய் மலர்ந்து கணியுரைக்க
ஊர்கொண்ட திங்களும் ஒதிடு மாலினி ஒண்கரந்தைச்
சீர்கொண்ட செந்தமிழ் தேர்ந்தாய் ! மணங்கொளும்செவ்வியினை
யார்கண்டு ரைப்பவர் நானிலத் தேபிற நாளுமுண்டே ?

### 235. பாங்கி தலைமகளறிவறிவுறுத்தல்.

அருங்குணத் தாற்புகழ் வேண்டா கணபதி ஆற்றியதொண்
டொருங்கெழு சீர்கரந் தைத்தமிழ் ஓதிய ஒண்மையினல்
மருங்கெழு தோழியர் போலெனக் குந்தன் மனத்துயரைப்
பெருங்குணத் தோய் ! மறைத் தாளவள் பெற்றியென்பேசுவனே?

### 236. குறிபெயர்த்திடுதல்.

புயல்சேர் பொழிலிடைப் பூவைக் கணிந்தநின் பூத்தொடையை
அயில்சேர் மொழியன்னை கண்டுமுன் னையம் அடைந்தனள்நீர்
குயில்சேர் குறியிடம் கூடுதல் நீங்குக! கோவையுறப்
பயில்வார்க் கருள்தரு பைங்கரந் தைத்தமிழ்ப் பாவலனே !

### 237. பகல் வருவானை இரவு வருகென்றல்.

இருள்கெடுப் பான்மதி வான்புகுந் திப்புவி ; ஏந்திழையாள்
மருள்கெடுப் பான்மலர்க் கான்புகுந் தையநீ ; வன்மனத்துச்
சுருள்விரிப் பான்வளர் சங்கக் கரந்தையின் தூய்தமிழ்ப்போல்
அருள்! சிரித் தல்லிய ழைத்திடும் போதுவந் தாண்டகையே.

---

233. குன்றைமுனி--சேக்கிழார்-தமிழ் பெரிய புராணம்; சகோரம்—மழையை விரும்பி வான்பார்த்திருக்கும் ஒரு பறவை இனம். 234. கள்-தேன்-கணி—வேங்கை ஊர்கொண்ட திங்கள்—பரிவேடமமைந்தமதி. (சோதிடன் கூற ஊரார் ஒத்துக் கொண்ட மாதம் என்பது தொனி.) வேங்கை மலர்தல் திங்கள் பரிவேடஞ் சூழ் தல் ஆய நாளில் மலைவாணர் மணம் முடித்தல் பண்டை வழக்கு. 235. புகழையும் விரும்பாத அரிய குணத்தை உடைய கணபதி இவர் தமிழ வேளவர்களின் நண் பர் பல்லாண்டுகள் சங்கக் கல்விநிலையங்களின் தாளாளராக இருந்து பெரும் பணிபுரிந்த சான்றோர்; பெற்றி—தன்மை. 236. புயல்—கார்மேகம்; பூவை—தலைவி; கோவையுற—நெறிமுறையாக. 237. மதிகண்டு மலரும் அல்லியைச் சிரித்து வரவேற்குமென்றது நயம்.

### 238. இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

உரையோ டிலக்கணத் துண்மை பரப்பும் உயர்ந்தபரம்
பரையோ டிலங்குநற் பண்பார் கரந்தையிற் பாவலனே
மரையோ டெமது மனைக்கத வைமதி யும்மனையும்
நிரையோ டடைப்பர் நீ ரெங்ஙனம் நேர்வதந் நீளிரவே.

### 239. பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.

நல்லந் துவன்கலிப் பாத்தொகை நாடி நயமறிந்து
சொல்லுந் தமிழ்க்கரந் தைமகிழ் தோன்றல்! தொடர்பகையை
வெல்லும் பொழுதறி வாயுனை வேண்டி மெலியுமவர்க்
கல்லும் பகலும்வந் தன்புசெய் தாற்பிழை யாவதென்னே?

### 240. பகலினும் இரவினும் அகலிவணென்றல்

நடையூறு செந்தமிழ் நாவீறு கொண்டவர் நற்றமிழ்நூற்
புடையூறு பூங்கரந் தைப்பதி யாய்வரப் போதிரண்டும்
இடையூறு செய்யும தாலினி வாரலை ஏற்றவர்க்குக்
கொடையூறு கையுடை யாய்! குலத் தாரொடுங் கூடுகவே.

### 241. உரவோனூடும் ஊருங்குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறல்.

புலந்திகழ் நூற்றுறை போற்றுநல் லோர்கள் புகழ்கரந்தை
நலந்திகழ் நாடுமுன் னூருங் குலனும் நறுமரபும்
நிலந்திகழ்சீர்த்தியும் வாய்மையும் மாசு நிகழ்வதற்கோ
பொலந்திகழ் மார்பஇப் பொல்லா ஒழுக்கினைப் பூண்டதுவே.

### 242. ஆறுபார்த்துற்ற அச்சங் கூறல்.

முழுதறங் காத்தமூ வேந்தர் வளர்க்க முகிழ்த்ததமிழ்
விழுதிறங் குங்கரந் தைக்கவி போன்றவள் விம்முமனம்
கழுதுறங் கும்மிருட் காதலி னல்வருங் கானெறியின்
பழுதுணர்ந் துன்னடி தாங்குதற் கேவரும் பார்த்திபனே.

### 243 ஆற்ருத் தன்மை ஆற்றக் கூறல்.

இருக்கும் எழும்விழும் ஏங்குபுன் னீரை இருவிழியும்
பெருக்கும் உடல்பசப் பாகும் பிறரிடம் பேசுமொழி
சுருக்குந் துருத்தியைப் போன்றுயிர்க் கும்முயிர்த் தோகையினை
உருக்குந் துயரறி வாய்க்கரந் தைத்தமிழ் உத்தமனே.

---

238. மரை—தாமரை; மதியும் அன்னையும் முறையே தாமரை மலரையும் வீட்டையும் அடைத்தலினால் இரவில் வரவியலாதென்றார். 241. புலம்—அறிவு.
242. அறம்முழுதும் எனமாறுக, விழுதிறங்குதல்—தாங்குதல்; கழுது—பேய்; பழுது—நெறியின் தீங்கு. 243. உருக்கும்—மெலிவிக்கும்.

### 244. (அ) காவல் மிக உரைத்தல்.

திணைக்காவல் பூண்டவச் சேயிழை யாளைச் செவிலியுடன்
மனைக்காவல் பூண்டனள் அன்னைமுன் மூவர் வளர்த்ததமிழ்
தனைக்காவல் பூண்டவர் தாங்குங் கரந்தைத் தலைவஇனி
உனைக்காவல் பூண்டவள் உள்ளம் உவப்பதை உன்னுகவே.

### (ஆ) இதுவுமது.

அருளைத் தருந்திரு அப்பர்சம் பந்தர்ஆ ரூரர்தமிழ்ப்
பொருளைத் தெரிந்தொளி பூக்குங் கரந்தைப் புகழ்த்தலைவ!
பொருளைத் தவிர்த்தன்னை பொன்காவல் மேவிப் புவியுறங்கும்
இருளைப் பகல்செய எண்ணினள் செய்வதென் ஏழையரே?

### 245. காமமிக வுரைத்தல்.

பஞ்சினும் மெல்லடிப் பாவையைக் காமப் பகைநெருங்கி
அஞ்சிடக் கான்வளர் தீயெனப் பற்றுநின் ஆகமெனும்
மஞ்சுறு நீரையல் லாற்கனல் மாற்றும் மருந்திலைவாழ்
விஞ்சையிற் கூர்தமிழ் மேவுங் கரந்தையில் வேலவனே.

### 246. கனவு நலிபுரைத்தல்.

பாங்கா னவர்க்கருள் பைங்கரந் தைத்தமிழ்ப் பண்புடையோய்
தூங்கா தவளுடற் சோர்வால் விழிகள் துயிலமையம்
பாங்கா யிருந்தருள் பாலிப்ப தாகவப் பஞ்சணையை
நீங்கா தணைந்துபின் நெட்டுயிர்ப் பாள்நினை வல்லவென்றே.

### 247. கவினழி புரைத்தல்.

வணங்கினி தேத்தநல் வாழ்வளித் துள்ளம் வளர்த்தறிவை
மணங்கொளச் செய்ந்தமிழ் வாழ்கரந் தைப்பதி மன்னவ! முன்
அணங்குறு நல்லெழி லின்னுரு வோவென ஐயமுற்ற
சுணங்கணி தோகையை இன்றுநீகாணின் துணிவரிதே.

---

244. மனைக்காவல்—இற்செறிப்பு. மூவர்—தேவார ஆசிரியர், மூவேந்தர். உள்ளம் உவப்பது—வரைந்தெய்துவது. 245. மனையிலுள்ள பொருள்களைக் காவல் செய்யாமல் திருமகள் போன்ற தலைவியைக் காவல் செய்தாள் என்றபடி; இருளைப் பகல் செய்தல்—உறங்காமை; கான்வளர்தீ—காட்டுத்தீ; மஞ்சு—கார்மேகம்; உறு—பொருந்தும்; கனல்—விரகத்தீ; விஞ்சை—கலை,

246. நினைவல்ல கனவென்று விம்முவாள் என்றபடி. வணங்கி இனிதேத்த; உள்ளம்—உள்ளப்பண்பு; மணங்கொளல்—புகழாற் கமழ்தல்; காட்சியில் அரிவையோ அணங்கோ என்றையுறச் செய்தவள் இப்போது அழகழிந்திருத்தலால் தலைவியோ பிறளோ என்றையுறச் செய்வாள் என்று கவினழிவு கூறினாள்.

# 17. ஒருவழித் தணத்தல்.

### 248. தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்.

வண்ணம் புலப்பட வேண்டியோர் சொல்லை வகையுளியாப்
பண்ணுங் கரந்தைநற் பாவலர் போலென் பதிபுகுந்து
பண்ணும் வினையுள தாலுயிர்ப் பாங்கிநம் பான்மொழிக்கென்
எண்ணம் புலப்படுத் தேகிமுன் மீளுவ னின்றிரவே.

### 249. பாங்கி விலக்கல்.

படிக்குந் துறைதொறும் பண்பட்ட பாவலர் பைந்தமிழ்நூல்
வெடிக்குங் கரந்தையின் வேந்தனை யாய்நீ விரைந்துபதி
முடிக்குங் குறையுள தேலினி மொய்குழல் முத்தெனநீர்
வடிக்குந் துயர்தெரி யாய்தெரி வேனுயிர் வாழ்வரிதே.

### 250. தலைவன் நீங்கல் வேண்டல்.

நன்று புரிகரந் தைத்தமிழ் நூனயம் நாடலர்போல்
சென்ற மதியினை மீட்பதற் காயினும் சேர்ந்துபதி
நின்று வருதனன் றுமுயிர்ப் பாங்கிஎன் நெஞ்சமெனும்
மன்று ணடம்புரி வாளை மறந்துயிர் வாழ்கிலனே.

### 251. தலைவனைப் பாங்கி விடுத்தல்.

நீயின்றி வாழாத நெஞ்சுடை யாளிடம் நின்பிரிவைப்
போயின்று சொல்லுமுன் பொல்லா வினைக்குறை போய்முடித்து
வாயின்று மாலையின் றேல்கரந் தைத்தமிழ் மாணவ! பின்
ஈயென்று காலனின் பாலவ ளாவி இரந்துகொள்ளே.

### 252. பாங்கி தலைவிக் கவன் செலவுணர்த்தல்.

சீரேறு செந்தமிழ் மாதவர் தெய்வத் திருமுறைநூல்
ஈராறு மன்புளத் தேற்றவர் வாழும் எழிற் கரந்தைப்
போரேறு போன்றவர் பூங்குழ லாய்த்தன் பதிபுகுந்து
காரேறு வான்மதி காலுமுன் மீளக் கருதினரே.

### 253. தலைவி நெஞ்சொடு புலத்தல்.

களித்தாய் மிகவவர்க் காண்டொறுங் காதற் கடறினைத்தாய்
ஒளித்தாய் பிறர்க்கவர் நீங்கலர் வேட்கை உடையரெனத்
தெளித்தாய் கரந்தையிற் செந்தமிழ் கேளலர் சிந்தையென
விளைத்தாய் துயரெனக் கின்னும் உனக்கிது வேண்டுமன்றே.

---

248. வண்ணம்—இசை (ஒரு செய்யுளுறுப்பு); வகையுளி—ஒரு சொல்லைப் பொருள் நோக்காது இசைநோக்கிப் பிரித்தல். மீளுவனின்றிரவே என்பது சாடு வாக்கியம். 249. வெடித்தல்—உணர்வாற் பொங்கிவருதல். 250. வினைகருதிச் சென்றமதி. 251. இன்றிரவு வரவில்லையேல் தலைவிஉயிர்விடுவாள் என்றபடி.

### 254. சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி.

மொழிவளர்ப் பார்க்கிட மாங்கரந் தைப்பதி மொய்ம்பர்வரும்
வழிவிருப் பாலுளம் வாடுறு வேற்கொரு வாயுரையும்
கழிநிரைத் தார்கட லேகய லேவளர் கைதைகளே!
பழிவிருப் பான்மொழி யாதிருப் பீர்கொலென் பாவமிதே?

### 255. தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

ஆழ்வா ரருளமு தார்வார் கரந்தை அணிவரைமேல்
தாழ்வா ரலரவர் ஊழ்வருந் தண்டலை சார்ந்துமலை
சூழ்வா ரருவியிற் றோய்குவம் ஆடிநந் துன்பகல
வீழ்வா மவர்வழி மேனடப் போமினி மெல்லியலே.

### 256. தலைவன் வந்தமை பாங்கி உரைத்தல்.

பழுதகற் றுந்தமிழ்ப் பாவலர் சூழ்கரந் தைப்பதியைத்
தொழுதுறு வார்தமிழ்த் தூக்கறிந் தெண்சுவை துய்ப்பதுபோல்
பொழுதொருங் கேமகிழ் பூத்திருப் பாய்! புரி போரினிடை
எழுதெழில் மார்பரிங் கீண்டின ராதலின் ஏரிழையே.

### 257. வந்தோன் தன்னொடு நொந்து வினாதல்.

அன்னை மொழிமறம் நாடரும் பண்பை அவமதித்தார்
முன்னை யொழியமற் றியார்க்கு மருள்செய் முறைகரந்தைத்
தன்னை அடைந்தவர் தாமறி வார்துயர் தாங்ககிலாப்
பொன்னை மறந்ததென் பூந்தமிழ்ப் போற்றும் புரவலனே?

### 258. தலைவன் பாங்கியொடு நொந்து வினாதல்.

மலருந் தமிழ்க்கொரு மாளிகை யாயுளம் மல்கிருளைப்
புலரும் படிச்செயும் பொற்கரந் தைத்தமிழ்ப் பூவையொப்பீர்?
அலரும் பிரிவுமிங் கேதுயர் செய்யவும் ஆற்றியிருள்
புலரும் வரையிலெவ் வாறிருந் தீரெனைப் போன்றுயிர்த்தே.

### 259. பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.

ஒப்பிய னூறரும் கால்டுவெல் போப்பிவர் ஓர்ந்துணர்ந்தே
இப்புவி யோர்க்குரை செய்தமிழ் இன்புறு மேர்கரந்தை
உப்பிய லுங்கவி போன்றவட் கோரிடை யூறுமின்றிச்
செப்பிய சொன்னினை நதேபுறங் காத்தனன் தென்னவனே.

---

252. காரேறுவான்–மாலைவானம்; காலுதல்–ஒளிவீசுதல். 253. ஒளித்தாய்–காதலால் தோன்றிய வேறுபாடுகளை அலராகு மென்று கருதி மறைத்தொழுகினாய் தெளித்தாய்–உறுதி கூறினாய் 254. வாடுறுவேற்கு–வாட்டமுறும் எனக்கு; கழி–உப்பங்கழி; கைதை–தாழை; கேட்டார்க்கு விடை தாராமையால் வரும் பழி.

255. தாழ்தல்—தங்குதல்; ஊழ்வருந்தண்டலை—தலைவன் முறையாக வந்து இன்புறுத்தியசோலை; மலை–தலைவன்மலை.

## 18. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

**260. (அ) என்பொருட் பிரிவுணர்ந் தேந்திழைக் கென்றல்.**

வள்ளற் கரந்தையில் வாழ்தமிழ் தேர்ந்த வணர்குழலாய்
உள்ளத் துறைவியென் இல்லத் திருந்தெனக் கோகைதர
அள்ளற் பழனம்விட் டேசுரம் போகி அரும்பொருளைக்
கொள்ளக் கருதுமென் கொள்கையெல் லாமுரை கோமகட்கே.

**(ஆ) இதுவுமது.**

மடியிம் மிடியுமி லாக்கரந் தைத்தமிழ் வள்ளுவர்சொல்
அடியும் முடியுமிங் கார்வதற் குத்துணை யாநடுவைப்
பொடியுஞ் செடியுமிக் கார்வழி போக்கிப் பெறப்புகுவேன்
கொடியுந் துடியுமொவ் வாவிடை யாளிடம் கூறுகவே.

**261. நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றல்.**

நாமார நற்றமிழ் சேர்கரந் தைப்பதி நாவலனே!
நாமார ராவிடம் பாலிற் கலந்தென நங்கையென்பால்
ஏமார நன்பொருட் கேகுவன் சொல்லென் றியம்புவதேன்
ஏமார னுக்கெதி ரெய்ப்பா ளிடஞ்சென் றியம்புகவே.

**262. நீடேனென்றவ னீங்கல்.**

ஊசற் கயிறென ஒள்ளிழை பாலென் உயிரிருக்க
வீசும் பலகையின் மீளுவன் வண்பொருள் மேற்பிரிவேன்
பேசற் கினியபல் பீடார் கரந்தையர் பேணுதமிழ்
வாசத் தொடை மகிழ் வீரங்கு நீடலன் வாட்டமுற்றே.

**263. பாங்கி தலைவிக் கவன்செல வுணர்த்தல்.**

நுண்பொருட் பாவைநன் றேநுகர் தற்குநன் னூலிடையாய்
எண்பொருள் கோளறிந் தார்மணந் தன்னை இடைநிறுத்தி
ஒண்பொருள் சேர்கரந் தைத்தமிழ் போன்ற உனையடைய
வண்பொருள் கோள்புரிந் தேகினர் நாளை வருகுவரே.

**264. தலைவி யிரங்கல்.**

சீரார் கரந்தையிற் செந்தமிழ்க் காவியஞ் செய்யவல்லார்
ஏரார் திருவெனைப் போலுயிர்ப் பாவை இயற்றவுங்கல்
நீரார் எனத்தெரிந் தேன்பொருள் வேண்டியென் நெஞ்சழியச்
சாரார் எனச்சுரந் தாந்தனித் தேகிய தன்மைகண்டே.

---

256. பழுது–குற்றம்; மும்மலம்; தூக்கு–பாட்டு; உயர்வு எண்சுவை–வினைத் தொகை–எட்டுச் சுவை என்பதுமாகும்; போரிடை எழுதெழில்–விழுப்புண்பட்ட அழகு. 257. அன்னையையும் மொழி முதலியவைகளையும் பழித்தாரிடம் அருள் செய்தலாகா தென்றபடி. 258. உளமல்கிருள்–அறியாமை; உயிர்த்து எனத் தானும் பிரிவால் வருந்தியமை கூறினன்.

### 265. பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

விருப்பாடு செந்தமிழ் மேவுங் கரந்தையின் வேலவரந்
நெருப்பாடு கானடந் தாருன் பொருட்டதை நேர்ந்திலை, நீர்
கரப்பாடு கண்ணினைக் காட்டுவை யேலலர் காலுமிதைச்
சுருப்பாடு பூங்குழல்! சூழ்ந்தறிந் தாலொரு துன்புமின்றே.

### 266. தலைவி கடுஞ்சொற் சொல்லல்.

கண்டார் கருவிழி தீயும் கருதின் கருத்தெரியும்
வெண்டேர் தெரிகணை வேடர் திரிசுர வெம்மைகண்டும்
தொண்டார் கரந்தையிற் றேற்றுந் தமிழைத் துறந்தவர்போல்
கொண்டார் கழற்றுரைப் பெண்டிர் மதியையென் கூறுவதே?

### 267. (அ) வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

நாடும் பொருள்வினை நற்கரந் தைத்தமிழ் நாவலர்சொல்
ஏடும் இயற்கையும் ஏறப் பயின்றவர் ஏகுநெறி
வாடும் பெடைக்குநல் வல்சிகொண் டூட்டிதன் வார்சிறகால்
மூடும் பருந்துகண் டால்வர வோவலர் மொய்குழலே.

### (ஆ) இதுவுமது.

சாவா மருந்தினும் சாலப் பயன்றரும் தண்கரந்தை
மூவா இருந்தமிழ் மூன்றுந் தெரிந்தவர் முன்னியகான்
நாவா லுடற்கனல் நக்கித் தணிக்குஞ்செந் நாயினதால்
போவா ரலர்புகு வார்புலம் பேலினிப் பூங்குழலே.

---

260. இல்லத்திருந்து—மனைவியாய்க் கற்புக்கடம்பூண்டு; அள்ளல் பழனம்—சேறுமிக்க வயல்; சுரம்—பாலை; மடி—சோர்வால் வரும் மறதி; மிடி—அறிவுப் பஞ்சம்; அடி, நடு. முடி—அறம், பொருள். இன்பம்; ஆர்தல்—நிறைதல்; பொடி-சுடுமணல். செடி-முட்புதர்; (வேட்டுவராலுறு துன்பம்) துடி-உடுக்கை.

261. நாம் ஆர—நாம் துய்க்க; நாம்ஆர் அராவிடம்—அச்சம் பொருந்திய பாம்பின் நஞ்சு; ஏம்ஆர—இன்பத்தைப்பொருந்த (ஏமம்) ஏமாரன்—மலரம்புகளை உடைய மன்மதன்; எய்ப்பாள்—இளைப்பாள், இது ஈரடிமடக்கு.

262. வீசும்—முன்னும் பின்னும் போய்வரும். 263, பொருள்கோள்—செய்யுளுள் சொற்களைப் பொருள் பொருந்துமுறையில் பிரித்து மாற்றிப் பொருள்கொள்ளும்முறை; பொருள் கோள்புரிந்து—வரைவுப் பொருளைக் கொள்ள விரும்பி.

264. பிரிந்தால் உயிர்போகும் எனக் குறிப்பிட்டாள்; சாரார்—பகைவர்.

265. கான்—பாலைவனம்; நீர்கரப்பாடுகண்—கண்ணீர் தோன்றுமல் மறைக்க முயலும் கண்கள்: சுரும்பு—வண்டு; சூழ்தல்—ஆராய்தல். 266. வெண்டேர்—கானல்நீர்; தெரிகணை—ஆராய்ந்து கொண்ட அம்புகள்: கழற்றுரை—இடித்துரைத்தல். 267. ஏற—மிகுதியாக; வல்சி—உணவு; ஒவலர்—ஒழியார்.

267. மூவா—கெடாத; இரும்—பெரிய; முன்னிய—கடந்து சென்ற. 268: பெய்வான்—பெய்வதற்காக: 269. தன்னொத்த முகில்களுடன் கூடாமல் தனித்துப் பெய்யும் கோடை மழை என்றுள்:

### 268. பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

தென்னரின் செந்தமிழ்ச் சீரறி யாருளம் போறகருத்திங்
குன்னுரை போலிடித் துள்ளுணர் வில்லா ருரைக்கவிபோல்
மின்னியெ ழும்புயல் வீருர் கரந்தையின் மெல்லியலே!
என்னிரு கூர்விழி போன்மழை பெய்வான் இருவிசும்பே.

### 269. இகுளை வம்பென்றல்.

முற்றப் பயின்றவர் மொய்க்குங் கரந்தையின் முத்தமிழைக்
கற்றுத் தெளியுமுன் னேகவி பாடிக் களிப்பவர்போல்
சுற்றத் துடன்முகில் சூழுமுன் னின்று சொரியுமழை
கொற்றத் துடன்பெயும் கார்கால மென்றுநீ கொள்வதென்னே?

### 270. இறைமகள் மறுத்தல்.

பொருதியங் குந்தமிழ் வாழ்கரந் தைப்பதி போன்ருளிர்வாய்
குருதியிற் கோபமண் கூரச் சிலைவான் குனிக்கவலர்
கருதியித் தோன்றியும் தோன்றிடக் கண்டினும் காரிலெனல்
பருதியைப் பட்டமிட் டேமறைப் போமெனும் பான்மையதே.

### 271. அவர்தூதாகிவந்ததிப் பொழுதெனத் துணைவிசாற்றல்.

வெல்ல வருந்தமிழ் வீருர்கரந்தை விளக்கமுறும்
நல்ல குறுந்தொகை நற்றிணை நூல்கள் நவிலுமுறை
வல்ல பெருந்தகை, வார்குழல்! முன்றன் வரவுனக்குச்
சொல்ல விடும்புயல் தூதென வேயறி துன்பொழிந்தே.

### 272. தலைமகள் ஆற்றல்.

களவியல் கற்பொடு கற்பார் கரந்தைநங் காதலவர்
உளவியல் ஓர்ந்தில ரென்பதொவ் வாதவ ருன்னுடனே
அளவிய போதினி லாருயிர்ப் பேழைஎற் காவைஎன்ற
கிளவியி னுட்பொருள் தேறுக ஆறுக கேண்மைநெஞ்சே.

### 273. அவனவண் புலம்பல்.

செப்பேடு தேர்ந்தவர் வாழுங் கரந்தைத் தெளிதமிழுள்
நப்போலு வேனினிச் சுட்டவ் விணுவுநீ ராவிரென்ற
ஒப்பேயி லாளுரை ஓர்ந்திலன் என்னுயி ரோவியந்தான்
இப்போது வாழ்நிலை எவ்வாறி ருக்குமென் ஏழைநெஞ்சே?

---

370. பொருதியங்குந்தமிழ் - பிறமொழிகளோடு போரிட்டுயர்ந்த தமிழ்.

271. கோபம்—இந்திர கோபப்பூச்சிகள்; மண்கூர—நிலத்தில் மிகுந்துகாண; சிலை—இந்திரவில்; குனிக்க—வளைக்க; 272 அளவிய—கலந்த.

273. சுட்டுமுதலியவற்றின் துணையின்றி மொழிக்குமுன் வராத நகரம் தலைவனின்றி வாழ முடியாத தலைவிக்குவமை.

**274. மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்லல்.**

பண்பூக்கு நற்றமிழ் பாடுங் கரந்தைநற் பாவையொப்பாள்
கண்பூக்க நின்றுதேர்க் காணுக்கிக் கண்ணீர் கலங்கிமதி
விண்பூக்கு மாலைகண் டேங்குமுன் மேவ விரைபரித்தேர்
மண்பூக்க என்னுளம் போல்விடு வாய்வல வாவிரைந்தே.

**275. (அ) மேகத்தொடு சொல்லல்.**

உறுப்பொடு செந்தமிழ்க் காவிய மோங்க உயர்கரந்தை
நெறிப்படு பாவலர் நெஞ்சந் திகழ்குறள் நின்னையன்றிச்
சிறப்பொடு பூசனை செல்லா தெனும்பொருள் தேர்ந்தனன்யான்
புறப்படு செய்திமுன் போய்முகில்! சொல்லுக பூங்குழைக்கே.

**(ஆ) இதுவுமது.**

பொருள்முற்றி மீளுமென் போற்கடல் நீருண்டு போம்முகிலே
அருள்முற்றி ஞர்மொழி ஆளுங் கரந்தை அடையலர்போல்
மருள்முற்றி மாமையைப் பீர்கொள மாழ்கி மனம்வருந்தும்
இருள்முற்று மீர்ங்குழற் கென்வர வின்னே இயம்புகவே.

**276. பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தல்.**

வேதம் விளைவுசெய் யாவருள் வேண்டி வியன்குருகூர்
நாதன் மலர்திரு வாய்மொழி நாடி நவில்கரந்தை
ஓதும் தமிழ்தெரிந் தார்மணித் தேர்பரி ஊர்வருமுன்
ஊதும் வலம்புரி கேட்டனை யோ? மகிழ் ஒண்டொடியே.

**277. வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.**

சங்கம் பறித்தவர் தஞ்சமென் றேமுனச் சங்கெடுத்துச்
சங்கம் புரிந்தவர் தஞ்சைக் கரந்தைநற் சங்கமதில்
சங்கம் புரிந்தபல் செஞ்சொற் றமிழ்தெரிந் தாரிடமார்
சங்கம்! புரிந்துயிர் தந்தனை வாழ்க! தழைத்துலகே.

**278. தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினுதல்.**

தணப்பொழி யாதுமைத் தஞ்சமென் றோரைத் தவிக்கவிட்டு
மணப்பொருள் தேடிவின் மாறிய கானல் வழிநடந்தீர்
கணப்பொழு தாயினும் கையறு வேமைக் கருதினிரோ?
குணப்பொருள் தேர்கரந் தைத்தமிழ் போற்றும் குலத்திறையே.

---

274; தேர்க்கால்—தேர் வரும்வழி: 275 மாமை—அழகு; பீர்—பசப்பு, மாழ்கி—மயங்கி: 276. கூருகூர்நாதன்—நம்மாழ்வார்; 277 சங்கம்—வளையல்; பறித்தவர்—பிரிவால் கழலச்செய்தவர்; சங்கம்—கூட்டம்; சங்கம்—மதுரைத் தமிழ்ச் சங்கம்—புரிதமிழ்—சங்கம் தந்த எட்டுத்தொகை முதலிய நூல்கள்; சங்கம்! வலம்புரிச்சங்கே!

**279. (அ) தலைவன் நினைந்தமை செப்பல்.**

உள்ளக் கிழியில் ஒளிருமென் ளுருயி ரோவியத்தைக்
கள்ளப் பிணிமறப் பாகுங் கயவன் கலைப்பதென்ப
தெள்ளத் தனையுயிர் என்பா லுவளரை எய்திடுமோ ?
கொள்ளச் சுவைக்கவி தோன்றுங் கரந்தையிற் றூமொழியே.

**(ஆ) இதுவுமது.**

முழக்கம் புரிகரந் தைத்தமிழ் மூழ்கிய மூதறிஞர்
ஒழுக்கம் பெறவுரை செய்சடங் குண்மையை ஓர்ந்திலரெம்
பழக்கம் எனத்தமிழ்ப் பண்பழிப் பாரெனப் பாவைமறந்
திழுக்கம் பெறுவதற் கோபொருட் கேகினன் ஏந்திழையே?

**280. பாங்கி ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.**

தாருந் தகவுந் தணியாத காதலும் சாற்றியுன
தூரும் பெயரும் உறுபுகழ் யாவும் உரைத்தணங்கைச்
சாரும் துயரம் தடுத்தாற்றி னேன்யான் தனித்தமிழின்
சீருஞ் சிறப்புமிங் கோதுங் கரந்தையிற் சேரரசே.

## 19. வரைவு மலிவு.

**281. காதலன் பரிசப்பொருள் விடுத்தமை பாங்கி காதலிக்குரைத்தல்.**

தரிசைப் பயன்றரும் தண்டலை யாச்செயும் தண்மழைபோல்
வரிசைப் படஉள மாண்பளிக் குந்தமிழ் வாழ்கரந்தை
அரசிப் பொழுதிரு ஆனையின் மேல்நம் அகநிறைய
பரிசப் பொருள்விடுத் தார்மணப் பானுனைப் பான்மொழியே.

**282. காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்.**

பெண்பெற்ற வர்பெறும் பேறென்பர் நல்லமாப் பிள்ளைபெறின்
பண்பெற்ற பைங்கரந் தைத்தமிழ்க் காளையைப் பண்புருவை
மண்பெற்ற மன்னனை, மங்கை! நம் அன்னை மருமகனா
நண்புற்ற தைப்பெரும் நற்றவ மென்றெண்ணும் நானிலத்தே.

---

278. தணப்பு ஒழியாது—தீங்குதலை ஒழியாமல் (நீங்கி என்றபடி) விண்—மழை

279. கள்ளப்பிணி—வஞ்சிக்கும்படியான நோய்; ஒழுக்கம் முதலியவற்றிற்காக மூதறிஞர் உண்டாக்கிய சடங்குகளைப் பின்னோர் கண்மூடிப் பழக்கமாக மேற்கொண்டனர் ஆதலின் அவர் போல என்றான்; எனவே தலைவியை மணப்பதற்காகப் பொருள் தேடப்போன யான் தலைவியையே மறந்துவிடுவேனா ? என்று நினைத்தமை கூறினான். 280. தார்—மாலை; தகவு—பண்பு. 281. தரிசு—மேட்டுநிலம்; தண்டலை—சோலை; அகம்—மனை; உள்ளமும் ஆம்.

**283. பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைவிக்குச் சாற்றல்.**

புத்தர் இயேசு புகழ்நபி போற்றிப் புரிநெறியும்
சித்தர் உரைநெறி யுந்திகழ் செந்தமிழ் தேர்கரந்தை
அத்தர் அனுப்பிய ஆர்வலர் பால்நம் அகமகிழ
ஒத்ததி யற்றுதற் கோர்ந்தனர் நங்கை! உறவினரே.

**284. தலைமகள் உவகை யாற்றுதுளத்தொடு சொல்லல்.**

அரும்புசொற் றேறும் அணியுஞ் சுவையும் அறிவுடனே
நிரம்புசெந் தீந்தமிழ் நேருங் கரந்தையை நேயமிக
விரும்புநெஞ் சே! நமை விட்டன துன்பும் மெலிவுமினிச்
சுரும்புளர் சோலைதென் றல்மதி எல்லாந் துணைசெயுமே.

**285. தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.**

துறையா னுலவுதொல் நற்றமிழ்க் காவியம் சூழ்கரந்தை
இறையோ னிலவுக ஊழி! எந் தோழிக் கினிதளித்த
மறையா மலரையம் மன்றல் மலர்கொடு மாற்றிமணப்
பறையா லுரைசெயும் பாங்கினைக் கூறசொற் பார்க்குதுமே.

**286. தலைவி மணப்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்.**

மெய்வந் திறைநிலை மேவவிப் பூவில் விளக்கமுறச்
செய்வந் தமிழைமன் சிந்தையென் பார்கரந் தைத்தலைவ!
பொய்வந் துறுமிடைப் பூவைமுப் போதும் புதுமலரால்
தெய்வம் பராவுதல் காண்க மணந்துனைச் சேர்வதற்கே.

**287. பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்.**

தொல்லோர் கவிநயந் தோன்றும் கரந்தையிற் றேர்கையரை
நல்லார் எனுமொழி தேறினன் நெஞ்சே! நமக்குமுனர்
அல்லார் குழலிநம் ஆக்கங் கருதி அருளணங்கைச்
சொல்லார் தொடைபுரிந் தேத்திப் பரவுமித் தூய்மைகண்டே.

## 20. அறத்தொடு நிற்றல்.

**288. கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.**

எத்துந் திரைக்கடல் ஞாலமொன் றுக இயல்நெறியை
வித்துந் தமிழை விளக்குங் கரந்தையை வேண்டலர்போல்
சித்தங் கலங்கித் திருக்கவின் போய்விழிச் செங்கயல்நீர்
முத்தம் பொழியுமோர் மூலமென் னேயுரை மொய்குழலே?

---

283 அத்தர்—தலைவர்; ஆர்வலர்—அன்புச் சுற்றத்தார்; ஒத்தது—திருமணம்.
284. பிரிந்தாரைத் துன்புறுத்திய தென்றல் முதலியன; மணம் நேர்தலின் துணையாகும் என்றாள் தலைவி.

### 289. தலைமகள் கலுழ்தற்குக் காரணங் கூறல்.

பகையைத் திருத்திநற் பண்பை வளர்த்திடும் பைந்தமிழ்நூற்
றொகையைப் பெருக்கிடுந் தொல்கரந் தைப்பதி தோகையொப்ப
முகையைக் குழைத்துவண் டுண்டோடு சோலையில் முன்கலந்தா
நகையைப் பறித்தகன் றூரினிச் செய்வதென் நானிலத்தே.

### 290. தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்.

நாளும் நவில்நவக் கோளும் கணிக்குநன் னுவலரை
ஆளும் கரந்தையில் ஐங்குறு நூற்றினை ஆய்ந்துணர்ந்தார்
சூளும் உரைத்தணங் கின்கழல் சூழ்ந்து துணிவுறுத்தென்
தோளும் மணந்துமுன் சொன்னசொல் நம்பிய துன்பமிதே.

### 291. இறைவி தலைவன் இகந்தமையியம்பல்.

பொழுதுசென் றேடினும் பூத்தசொல் நிற்குமிப் பூவிலெனும்
பழுதகன் றேருரை யேபழு தாயதிப் பைங்கரந்தைத்
தொழுதுநின் றேதிய தோன்றல் உரைப்படி தோன்றலர்நாப்
அழுதுநின் றேங்கலல் லாற்கரி யாவதற் காருளரே?

### 292. பாங்கி யியற்பழித்தல்.

வான்மாறி னும்மொழி மாறுக் கரந்தை வளர்தமிழ்ப்பாத்
தேன்மாரி யோடுநின் செவ்வாய் அமுதம் திளைத்தவர்சொல்
தான்மாறி னுலது தங்கங் களிம்புறும் தன்மையதாம்
மீன்மாறு கண்ணிமே லோரெனச் சொல்வது வெற்றுரையே.

### 293. தலைமகளியற் படமொழிதல்.

சினையீன்ற யாமைதன் சிந்தனை யாலருள் செய்யுமென்பார்
சுனையீன்ற தேமலர்ச் சூட்டிய காதற் றுணைவரன்றி
எனையீன்ற தெய்வமும் என்துயர் நீக்குதற் கில்லைதமிழ்
அனையீன்ற பாவலர் ஆர்கரந் தைப்பதி அன்னவளே.

---

285. துறையான்—துறைதோறும்; இறை—தலைவன்; மறையாம்அலர்—களவாலாகிய பழிச்சொல்; மன்றல்மலர்—திருமணமாலை; பறை—மணமுரசு.

286. மெய்--மெய்ஞ்ஞானம்; பூவை—தலைவி. 287 அல்—இருள் (கருமை) சொல்லார்தொடை-பாமாலை. 288.ஞாலமொன்ருக-உலகமக்கள் ஓர் உறவினராக.

289. முகையைக்குழைத்து வண்டுண்டோடுசோலை—உள்ளுறை; நகை—மகிழ்ச்சியால் விளையும் சிரிப்பு. 290. நாள்—நட்சத்திரம். கோள்—நவக்கிரகம்; சூள் — சத்தியம். 291. கரி — சான்றுபகர்வோர்; 292. வான்—மழைபெய்யும் பருவம்; மொழி—வாய்மை, மேலவர்—மேலாய பண்புடையோர்.

293. சினை—கரு; தமிழன்னை தொகுத்தல் விகாரம். 294. தாழ்குவம்—வணங்குவோம். 295. துங்கம்—சிறப்பு; மனைக்கு வேற்றுமை மயக்கம்;

**294. தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்.**

வண்டமிழ்ப் பாக்கொடு வையினும் தெய்வம் மகிழுமெனக்
கண்டநற் சீரடி யார்கழல் போற்றுங் கரந்தையர்கோன்
விண்டசொற் பொய்த்தலின் வெந்துயர் தெய்வம் விளைக்குமுனம்
தண்டனிட் டாய்மலர் தூய்பொறுப் பாயெனத் தாழ்குவமே.

**295. இல்வயிற் செறித்தமை யியம்பல்.**

தோற்றந் தெரிதலில் லாத்தமிழ் மூன்றையும் துங்கமுறச்
சாற்றுங் கரந்தைத் தமிழ்ச்சங்க மன்ன தகவுடையாய்!
காற்றுங் கதிரவன் வெம்மையும் என்றன் கவினுருவை
மாற்றும் என நினைந் தோசெறித் தாளனை வாழ்மனைக்கே.

**296. செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை பகர்தல்.**

உள்ளும் புறமும் ஒழியாத போர்கள் ஒழியநெறி
விள்ளுந் தமிழை விதியா லுணர்த்தும் வியன்கரந்தை
வள்ளல் குறிவரக் கண்டுநம் அன்னை "வரைமுருகன்
நள்ளென் இருள்வரக் கண்டனன்" என்று நவின்றனளே.

**297. செவிலி தலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியை வினுதல்.**

வித்தி விளைவுசெய் துண்ணுமல் வாழும் வியன்நெறியைச்
சித்தி பெறவுரை செய்யுங் கரந்தைநற் செந்தமிழை
நத்தி உணரகில் லாரென நங்கை நலிவதற்குக்
கொத்து மலர்க்குழ லாயென்ன காரணங் கூறுகவே?

**298. பாங்கி வெறி விலக்கல்.**

அலைமேவு நீர்ப்புவி அல்லல் உருமல் அருள்கரந்தைக்
கலைமேவு செந்தமிழ் காதலித் தேத்துங் கவினிறையே!
மலைமே லிருந்துமிம் மான்துயர் நோக்கலை மைம்மறியின்
கொலைமேவ நின்றஉன் கொள்கையென் னேயதைக் கூறுகவே.

**299. செவிலி பாங்கியை வினுதல்.**

மருந்துங் கருவியும் இல்லா மருத்துவம் வாய்ப்பதற்குப்
பொருந்தும் வழியுரைக் குந்தமிழ் போற்றிப் புகழ்கரந்தை
விருந்துண் கடவுளை வேண்டாம லிங்கு விலக்கியதேன்?
வருந்தும் எனக்கதன் வாய்மைஎல் லாமுரை வாள்விழியே.

---

296. உட்போர்—காமம், வெகுளி, மயக்கம். முதலாயின; புறப்போர்—பொருள் நிலை ஏற்றத்தாழ்வுகளாலும் செருக்காலும் விளைவன; 297. யோகநெறி காயகற்பங்களாகிய விஞ்ஞான நெறிளால் உயிர்வாழ்தல்; (நத்தி) நச்சி விரும்பி; நங்கை-தலைவி; 298. அல்லல் உருமல் வாழுங் கலையைத் தருந்தமிழ் என்க; மைம்மறி-ஆட்டுக்குட்டி 299. மருந்து—பூசுதல்; உண்ணுதல்; நுகர்தற்காவன; கருவி—அறுத்தல் துளைத்தற்காவன; வழி-உணவு; ஒழுக்கம்; யோகம் முதலிய வழிகள்; விருந்து—புதிய இலக்கியங்கள்.

**300. தோழி பூத்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.**

மாலை தொடுத்திட வான்மலர் தேடி மனம்வருந்திக்
கோலை எடுத்தொரு கொம்பை வளைத்தனள் கோல்வளையக்
காலை புகுந்தொரு காளை கரந்தைக் கவிமணக்கும்
சோலை மலரளித் தான்துணிந் தேற்றனள் தூமொழியே.

**301. (அ) புனல்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.**

தீம்புன லாடித் திளைக்கின்ற போதுநம் தீவினையால்
காம்பன தோளியைக் காவிரி வவ்வக் கரந்தைவளர்
தேம்படு செந்தமிழ் தேர்ந்தவோர் வீரன் திடுமெனவார்
பூம்புனற் புக்குநம் பூவையைத் தந்துபின் போயினனே.

**(ஆ) இதுவுமது.**

இழுக்கம் உறும்வழி ஊன்றிடுங் கோலென இவ்வுலகோர்க்
கொழுக்கம் தருங்குறள் ஓதுங் கரந்தையில் ஓரிளைஞன்
முழக்கம் புரிமணி முத்தாறு நீந்திநம் மொய்குழல்தான்
வழுக்கும் படியறி யாதமிழ் போதினில் வவ்வினனே.

**302. களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.**

தலைவந்த செந்தமிழ்த் தாங்குங் கரந்தைநற் சாரலிலே
மலைவந்த தென்னுமோர் மாவரக் கண்டு மனநடுங்கும்
சிலைவந்த கண்ணியைத் தென்பா லிருத்தியோர் சேயனையான்
கொலைவந்த வேல்கொடு கொன்றுபின் கொண்டான் குறுநகையே:

**303. தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினவுதல்.**

பாலூட்ட சோறிடத் தாயர், படுக்கநற் பஞ்சனை,தென்
காலூட்ட மாளிகை, காமகிழ் தாடநற் கன்னியர்கள்,
தாலூட்ட நீயிருந் துங்கரந் தைத்தமிழ் தன்னையொப்பாள்
நீலூட்டு மெய்யையு நீரோட்டு கண்ணையும் நேர்ந்ததென்னே?

**304. செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியாலறத்தொடு நிற்றல்.**

பார்வேண்டு செந்தமிழ்ப் பண்பார் கரந்தைப் பதியினின்றும்
நீர்வேண்டு மென்றுநம் நீள்மனை வந்துமுன் நின்றசிலைப்
போர்வேண்டு தோளவன் பொன்வேண்ட நம்முயிர்ப் பூவையவன்
தார்வேண்டு மென்றனள் தாய்வேண்டு மோவினித் தாழ்குழலே?

---

300. வான்மலர்—புதிய சிறந்த வெள்ளிய மலர்கள்; கவிமணக்கும் என்பது உவமைத்தொகை: பிறனென்றெண்ணுது ஏற்றலின் துணிந்தென்ருள்.

301. காம்பு—மூங்கில்; வார்பூமபுனல்—ஆற்றுநீர்; மணிமுத்தாறு—கரந்தையைச் சார்ந்துசெல்லும் வடவாற்றின் பெயர். 302. மா—யானை; சிலை—விற்போலும் புருவம்; சேய்—முருகன்; 303. தென்கால்—தென்றற்காற்று; கா—சோலை; தால்—தாலாட்டு; நீல்—நீலம். அஃதாவது பசலை; நீர்—கண்ணீர்.

# 21. உடன் போக்கு.

### 305. பாங்கி தலைவற்கு உடன் போக்குரைத்தல்.

மலைதொட்டு நீர்வேட்கை மாற்றுவ தொக்குமெம் மானைமணம்
விலையிட்டு மேற்கொள்வ தென்பது வேலவ! விம்முமுயிர்
நிலைகெட்டு நீங்குமுன் னேயக் கரந்தைக்கு நீங்குக, தீ
உலையிட்ட புன்மெழு கொத்தவள் தன்னை உடனழைத்தே.

### 306. (அ) தலைமகன் மறுத்தல்.

மானம் வழங்கலில் லாதிடை யூறுறின் வல்லுயிரைத்
தானம் புரிதமிழ் தாங்குங் கரந்தைத் தமிழிசைபோற்
கானம் புரிமொழிக் காரிகை யாள்,கொடுங் காட்டினையும்
வானம் வழக்கறு கானையுந் தாண்டிமுன் வந்திடுமே?

### (ஆ) இதுவுமது.

பரிக்குந் தமிழ்க்கரந் தைப்பதி சேய்மையைப் பார்க்கிலன்,கோ
ளரிக்கும் கரிக்கும் பகையாகுங் காட்டினை அஞ்சலன்,தீ
எரிக்குஞ் சுடரைஎண் ணேன்,மலர்ப்பாதம் இருஞ்சுரத்தில்
தரிக்குந் தகவுடைத் தோவெனும் ஐயந் தடைசெயுமே.

### 307. அவள் உடன் படுத்தல்.

இயலும் மொழிதனை ஏற்பவர் ஞானம் எழுமளவிற்
பயிலும் எனத்தெரிப் பார்கரந் தைத்தமிழ்ப் பாவல! நின்
அயிலும் அருளுமன் னுண்மைத் துணையும் அவட்கிருக்க
வெயிலும் கொடுஞ்சுர வெம்மையுமென்செயும் மெல்லியற்கே.

### 308. (அ) தலைவன் போக்குடன் படுத்தல்.

மணந்தோனை யன்றிமற் றோர் தெய்வமில்லையிம் மண்ணிலெனும்
குணத்தோய் தமிழ்க்கரந் தைப்பதி ஒக்குங் குலக்கொடிக்குப்
பணந்தோய்ந் திருப்பவர் பாழ்மனம் போற்சுடும் பாலைஎளி
தணந்தேகு நெஞ்சம்! நீ எவ்வா றவள்துயர் ஆற்றுவையே?

### (ஆ) இதுவுமது.

ஊக்கம் உணர்ச்சி ஒளிதரு சிந்தனை உண்மைநெறி
ஆக்கம் புரிதலில் லாவகப் பட்டிகள்; ஆய்கரந்தை
நோக்குந் தமிழ்வளம் இல்லைஎன் பாரவர் நோயுளம்போல்
தாக்குஞ் சுரத்தினில் தையல் உடன்செலச் சார்ந்தனமே.

---

304. சிலைத்தோள்—போர்வேண்டுதோள் எனக்கூட்டுக; சிலை—மலை; பொன்—திருமகளை ஒத்த தலைவியைக் குறித்தது. தார்—(மண)மாலை. 305; மலைதொட்டு—பாறையைத் தோண்டி; விலை—பரிசப்பொருள்; உலையிட்ட புன்மெழுகொத்தவள் விம்முமுயிர் நிலைகெட்டு நீங்குமுன் எனக்கூட்டுக.

### 309. தலைவிக் குடன்போக் குரைத்தல்.

காடும் மலையும் கடுஞ்சுர மும்போய்க், கவிக்குயில்கள்
பாடுந் தடங்கரந் தைப்பதி சேரப் பதமலர்கள்
கூடுங் கொலோவெனக் கூறுவர் ஆறுவர் கோன்,தனியே
வாடும் அவர்கருத் தென்னவென் றோர்ந்திலன் வாள்விழியே.

### 310. தலைவி நாணழிவிரங்கல்.

நிலத்திற் சிறந்தவர் நேருங்கரந்தை நிறைதமிழ்நூற்
புலத்திற் சிறந்தவென் பூங்குழ லாய்! தமிழ்ப் பூவையர்க்கு
நலத்திற் சிறப்பெனும் நாணம் நலிவுசெய் நாகரிகக்
குலத்திற் பிறப்பதைக் காட்டிலும் வேறு கொடுமையின்றே.

### 311. கற்பு மேம்பாடு பாங்கி கூறல்.

கண்ணிற் சிறந்த துயிருயி ரின்மிகுங் காட்சியதை
மண்ணிற் றருந்தமிழ் வாழ்கரந் தைப்பதி வான்புலவோர்
பெண்ணிற் சிறந்தது நாணமென் றூலும் பிறங்குகற்பை
எண்ணிற் சிறியதென் பாரினி ஏந்திழை ஏகனன்றே.

### 312. தலைவி யொருப்பட்டெழுதல்.

படிமைசெய் பாவலர் போற்றுங் கரந்தையின் பண்பறியார்
அடிமைசெய் தைம்பொறிக் கச்சமுற் றென்றும் அடுத்தவர்க்கு
மிடிமைசெய் வாரனத் தாய ருரையொடு மேவலரும்
குடிமைசெய் பாவை! குளிர்சுரத் தும்பின் குறுகிடுமே?

### 313. பாங்கி சுரத்தியல் புரைத்துழித் தலைமகள் சொல்லல்.

ஐம்பொறி வாயி லவித்தெண் குணமறி வாரி றைவன்
செம்பதம் சேரசித் தார்த்த ருரைத்தநற் றெய்வநெறி
நம்புதென் சீர்கரந் தைத்தமிழ் நன்னூல் நயந்திலர்போல்
வம்புரை தாயுறை இல்லினும் செல்சுரம் வாட்டிடுமே?

---

306. தானம்–ஈகை; காடு–பாலை நிலம்; சேய்மை–நெடுந்தூரம்; கோளரி–சிங்கம்; கரி–யானை; சுடர்–கதிரவன்· சுரம்–பாலை; தரித்தல்–தங்கிநடத்தல்.

307. பயிலும்–வளமிக்கு வளரும்; அயில்–கைவேல். 308. பட்டிகள்–அறிவிலாரும், கயவரும்; நோயுளம்–பிறரைத் துன்புறுத்தும் உள்ளம். 309. தனியே என்பது தாப்பிசை. 310. சிறந்தவர் சிறப்பென்னும் என இயையும்.

311. காட்சி–அறிவு. 312. படிமைசெய்பாவலர்–தவ உருத்தாங்கி அதற்குரிய பணிபுரியும் புலவர்க்ள்; மிடிமை–வறுமை; குடிமை–குடிப்பிறப்பிற்குரிய பண்புகள்; மேவுஅலரும்–பொருந்திய அலர்மொழியும். 313. எண் குணம் அறிவு ஆர்இறைவன்; செம்பதம்–செம்மையைத்தரும் பாதம்; சித்தார்த்தர்–புத்தர்; நம்புதென்சீர்–நம்பி ஒழுகும் அழகு; வம்பு–புதுமை; உறை–தங்கியுள்ள,

### 314. பாங்கி கையடை கொடுத்தல்.

காருங் கதிருமவ் வான்மறந் தாலும் கரந்தையர்சொற்
சீருந் தளையுநற்செய்யுள் மறப்பினும் செந்திருவை
ஏரும் இளமையுந் தாமறந் தாலும் இனிமறவேல்
தாருங் கழலும் புனைமாரனே ! யுயிர்த் தையலையே.

### 315. பாங்கிவைகிருள் விடுத்தல்.

எழுவாய்க் கியைந்துமுன் னிற்கும் பயனிலை அன்ன,நிகழ்
பழிவா யடைத்துநம் பாடிவிட் டேகதிர் பார்க்குமுனம்
கழுவா யிலையறங் கண்ணாத வர்க்கெனக் கட்டுரைசெய்
மொழிவாழ் கரந்தையை முன்னுமுன் னேர்குவன் மொய்குழலே.

### 316. தலைமகனைத் தலைமகன் சுரத்துய்த்தல்.

நையப் படுமொழி நீக்கிக் கவிசெயும் நற்கரந்தை
வையப் புகழ்த்தமிழ் மாதவர் போலவென் மாமயிலாய் !
பையப் பதமெடுத் தென்பதம் நோக்கிப் பதித்துவரின்
வெய்யிற் பரலுடன் துன்புசெய் யாதிவ் வியன்சுரமே.

### 317. தலைமகன் தலைமகள் அசைவறிந்திருத்தல்.

நச்சுக் குணத்தவ ராயினும் நச்சி நறுந்தமிழை
மெச்சத் தருங்கரந் தைப்பதி போலுமிம் மென்பொழில்வாய்
அச்சந் தருசுர மாறுந் துணைத்துய ராற்றியிருந்
துச்சிக் கதிர்குடக் காயபின் செல்குவம் ஒண்டொடியே.

### 318. உவந்தலர் சூட்டி உள்மகிழ்ந் துரைத்தல்.

தேனூறு செந்தமிழ்த் தெய்வக் கரந்தையர் தேர்ந்தவக
நானூறு கற்றவென் நாவினுங் கைசெய்த நற்றவமென் ?
ஊனூறு மென்னுயிர்க் கொண்மலர் சூட்டி உவப்பவுமிக்
கானூறு காவினிற் கானீவ வும்வியர் காக்கவுமே.

### 319. கண்டோர் அயிர்த்தல்.

சீரழ கார்தமிழ் சேருங் கரந்தைத் திசைவழியே
பேரழ கீருரு வாய்வரும் பெற்றியிற் பெண்மயிலும்
போரரி யும்மெனப் போதுவர் யாரிவர் ? பொய்யுரையால்
பாரறி யாத்துயர் செய்பவர் போற்சுடும் பாலையிலே.

---

314. ஏர்—(எழுச்சி) அழகு. 315. எழுவாய்க்கு முன்னிற்கும் பயனிலைபோலக் கதிர் தோன்றுமுன் நும்கண் சேர்குவன் எனக் கூட்டுக; கழுவாய்-பிராயச்சித்தம்: கட்டுரை-கழற்றுரை; முன்னுதல்-அடைதல். 316, நையப்படு மொழி-துன்பஞ் செய்யும்சொற்கள்; பதம்-பாதம்; பரல்-பாலை நிலக்கூர்ங்கல்; 317. நச்சி-விரும்பி; மெச்ச-போற்ற; குடக்கு-மேற்கு. 318. ஊன்-உடல்; ஊறும்-உணர்வாயிருக்கும்; கான்-நறுமணம்; கால்நீவ-காலைவருட; வியர்-வேர்வை; காத்தல்-துடைத்தல்.

### 320. கண்டோர் காதலின் விலக்கல்.

தவந்தரு செந்தமிழ் தேர்ந்தார் கரந்தையைச் சார்வதற்குச்
சிவந்தனள் சீறடிச் சேயிழை வெஞ்சுடர் சேர்ந்து,வரை
கவிந்தனன் கானமும் செல்லவொண் ணுதெங் கடிமனையில்
உவந்தருள் உண்டிசெய் தேகுவிர் நாளைநும் ஊரினுக்கே.

### 321. கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

பற்ருர்க் கருள்செய்யும் பண்பார் தமிழ்தெரி பாவலனே
சற்றே நடந்துசென் றம்மலை தாண்டிடின் சார்குவிர் நூல்
கற்ரு ரினும்பொருள் உற்ருரி னுந்தங் கடமைசெயப்
பெற்ருர் புகழ்மிகப் பேசுங் கரந்தைப் பெருநகரே.

### 322. தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

இதுவான் பொழிலீ திளையவ ராடு மிளமரக்கா
அதுவாள் பயிலிடம் ஆங்கது மங்கைய ராடரங்கம்
உதுவான் கலைகட் குறைவிட மாயுல கோம்புதமிழ்
மதுவார் கரந்தைத் தமிழ்ச்சங்க மாமன்றம் வாள்விழியே!

## 22. கற்பொடு புணர்ந்த கௌவை.

### 323. செவிலி பாங்கியை வினுதல்.

கானேடு மண்கடற் கல்லீண்டு தோன்றிக் கதிர்ப்பதன்முன்
வானேடு தோன்றி வளியோடு பாவும் வளர்தமிழைத்
தேனேடு மாறுறச் செப்புங் கரந்தைத் திருவனையாள்
மீனேடு மாறுகண் ணுய்! எவண் சென்ருள் மெலிவுறுத்தே.

### 324. பாங்கி செவிலிக்குணர்த்தல்.

ஒவ்வா மனத்திற் குடனுகி என்றன் உயிர்வருத்தி
வெவ்வா யுரைகொடு வேகவைப் பாருயிர் மெல்லியல்யான்
எவ்வா றிருப்பதிங் கே! சுரம் இன்பமிக் கீயுமென்ருள்
தெவ்வோர் மகிழ்தமிழ் சேர்கரந் தையன்ன தேமொழியே.

---

319; பெற்றி — தன்மை; அரி — சிங்கம்; 320; தவம் — முயற்சி; வெஞ்சுடர் — கதிரவன்; வரைகவிந்தான் — மலையில் தாழ்ந்தான்; கானம்—பாலை; உண்டி உவந்துசெய்தெனமாறுக; 323; கான் — காடு; கல் — மலை; கதிர்த்தல் — செவ்வையாய் விளங்குதல்; வளியோடுபாவும் — காற்றுள்ள இடமெங்கும் தமிழ் மணம் கமழும் என்றபடி; 324; ஒவ்வா — மனம் விரும்பாத; வெவ்வாயுரை — சுடுசொல்; தெவ்வோர் — பகைவர்

### 325. (அ) பாங்கியினுணர்ந்த செவிலி தேற்றுவோர்க் கெதிரழிந்துகூறல்.

தென்பால் வளர்மொழிக் கன்னைக் கரந்தையிற்சேர்தமிழால்
அன்பால் உறங்கிடத் தாலாட்டி யான்பால் அகற்றிமகிழ்ந்
தென்பால் அருத்திமிக் கின்பால் வளர்த்தனன் ஏதிலன்பின்
வன்பால் நடந்திட வன்பாற் பிரிந்தனள் வாணுதலே.

### (ஆ) இதுவுமது.

முருந்தார் முறுவலும் கூந்தலும் தோன்ருத முன்புபெற்ற
அருந்தா அமுதை அழற்சுரம் போக்கி அழியுமென்பால்
மருந்தேய் கரந்தையில் வண்டமிழ் கற்றும் மனமறியப்
பொருந்தா உரைசெயும் போலியர் போன்று புகன்றனிரே.

### 326. செவிலிதன் அறிவின்மை தன்னை நொந்துரைத்தல்.

சொல்லிடு வார்க்கமிழ் தாகுங் கரந்தைநற் றூமொழிபைம்
புல்லிடு வாளிள நவ்விக் கடிக்கடி பூவையுண
நெல்லிடு வாள்கனி கிள்ளைக் கருத்துவள் நெட்டுயிர்த்துப்
புல்லிடு வாளெனப் பூங்குழல் செய்கையைப் போற்றிலனே.

### 327. செவிலி தெய்வம் வாழ்த்தல்.

கராமுண்ட பிள்ளையைக் காட்டிற் கரிந்தவோர் கன்னியை நல்
அராவுண்ட காளையை அன்றளித் தாய்தமிழ் ஆசையினல்
இராவுண்ட கூந்தலெம் ஏந்திழை யாள்வரின் ஏர்கரந்தை
விராவெண் டமிழ்த்தொடை சாத்தி வழுத்துவன் வேணியனே.

### 328. செவிலி நற்ருய்க் கறத்தொடு நிற்றல்.

நூல்படிக் குங்கரந் தைத்தமிழ் மேன்மையை நோக்கலர்போல்
சேல்வடிக் கண்ணிநம் சிந்தை கலங்கச் சிறுபொழுது
பால்கொடுத் தாரினும் கால்பிடிப் பார்க்குப் பரிந்துவடி
வேல்பிடித் தாஞெரு வேந்துட னேகினள் வெஞ்சுரத்தே.

---

325; தென்பால்—தென்னுட்டில்அன்னையாகியதமிழ் என்க; ஆன்பால்—பசுப் பால்: என்பால் . முலைப்பால்; ஏதிலன்——அயலான்; வன்பால்—வலிய பாலை நிலம்; முருந்து—மயிலிறகின்அடி; பெற்ற—வளர்ப்பதற்காகப்பெற்ற; அழியும்—துன்புறும்; மருந்து-மடமை நீக்கும் மருந்து; போலியர்-கற்ருர்போல் நடிப்பவர்.

326; தூமொழி—தலைவி; நவ்வி—மான்மறி அடிக்கடி என்பதை எங்கும் கூட்டுக; புல்லிடுவாள்—அணைத்துக்கொள்வாள்; 327; கராம்—முதலை; கன்னி—பூம்பாவை; அரா—பாம்பு; காளை—அப்பூதியடிகளின் மூத்தமகன்; இராவுண்ட—இருள்போன்ற: விராவெண் – எண்ணங்கள் விரவும்; வேணியன்—சிவபெருமான்;

328; சேல் –கயல்; வடி—கூர்மை; சிறுபொழுது—குழந்தைப் பருவப்பொழுது; கால்பிடிப்பார்—கணவர் (இது ஒரு திருமணச் சடங்கு)

### 329. நற்ருய் பாங்கியொடு புலம்பல்.

அன்னையொப் பாள்மகள் என்றறிந் துந்தமிழ் ஆர்கரந்தைத்
தன்னையொப் பாள்என் தவமக ளின்உளச் சார்பறியேன்
மின்னையொப் பாள்மனம் போல்மணம்செய்ய விரைந்திருப்பேன்
பொன்னையொப் பாய்! அவ மேசுரம் போக்கிப் புகன்றனையே.

### 330. அதுகேட்ட பாங்கி அழுங்கல் கண்டு நற்ருய்புலம்பல்.

நடுநின்ற சீர்கரந் தைப்புல வோர்தரும் நன்னெஞ்சினைத்
தொடுகின்ற பாவின் சுவையறி யாதவர் தூற்றுளம்போல்
சுடுகின்ற பாலையிற் ருேகையைப் போக்கிய துன்பினும்நீ
விடுகின்ற கண்ணீரென் மேனியைத் தீய்த்திடும் மெல்லியலே.

### 331. நற்ருய் பாங்கியர் தம்மொடுபுலம்பல்.

பஞ்சுரந் தும்பி பயில்கின்ற பொங்கரிற் பாவையுடன்
கொஞ்சிநின் ருடிய கோல்வளை யீரொரு கோன்புரிந்த
வஞ்சனை யாற்கரந் தைப்பதி வாழ்த்தலர் மானநம்மைப்
பஞ்சுர மாம்பதத் தாள்பிரிந் தேகினள் பாலையிலே.

### 332. நற்ருய் அயலார்தம்மொடு புலம்பல்.

மல்லுக்கு நின்று மடிபிடித் துத்தன் மனம்விரும்புஞ்
சொல்லுக்கு டன்படச் செய்வோள் கரந்தையத் தோன்றலென
தில்லுக்கு யர்ந்தவன் என்னுது வெஞ்சுரம் ஏகினள்பின்
கல்லுக்குப் பால்தரக் கற்றேனை ஒப்பவர் காண்மின்களே.

### 333. பயிலிடந் தம்மொடு புலம்பல்.

மயிலே! மலர்த்தடங் காவே! இசைத்தமிழ் வாழ்கரந்தைக்
குயிலே குரவை பயிலிட மே! செய்த குன்றுகளே!
அயிலே எனும்விழி ஆயிழை பின்னக லாதெனக்கு
மயலே அளிப்பதற் கோவிருந் தீரிந்த மாநிலத்தே.

### 334. (அ) நிமித்தம் போற்றல்.

எரிவாய் அருஞ்சுரம் ஏகிய ஏந்திழை ஈண்டுவரக்
கரைவாய் கரைந்துன் பெயர்ப்பொருள் காக்கின் கறியுடனே
பரிவாய் அருத்துவன் பாற்சோறு பின்கரந் தைத்தமிழின்
வரிவாய் உனைவைத்து வாழ்த்தி வணங்குவன் வான்கொடியே.

---

329 பொன்—திருமகள்; அவம்—வீண்; 330: நடுநின்றசீர்—நடுவு நிலைமை யாகிய சிறப்பு; புலவோர் தரும் பா எனக்கூட்டுக; தூற்றுளம்—தூற்றுவாருளம்;

331 பஞ்சுரம்—ஒருபண்; தும்பி—வண்டு; பொங்கர்—சோலை; மான—ஒப்ப; பஞ்சு உரமாகும் மெல்லிய அடியினை உடைய; 332; மல்—உடற்போர் ஈண்டு சொற்போர் குறித்தது; இல்—இல்வாழ்க்கை; என்னுது—என்று என்னிடம் சொல்லித்தான் விரும்பியாங்குமுடித்துக்கொள்ளாமல் — இரக்கமில்லாமையின் தலைவியைக்கல்லென்ருள்;ஒப்பவர்—என்போல்மகளைப்பெற்றவர்; மயல்—வருத்தம்;

### (ஆ) இதுவுமது.

கொடியாளை யீன்ற கொடியே னிருக்கக் கொடியெனவுன்
படியாது மோரார் பகர்வார் கரந்தைப் பழம்புலவர்
கடியாது நின்கிளை காத்தலின் காக்கையென் பாரெனது
தொடியளூ றக்கரை வாய்பெறு வாய்நறுந் தூய்பலியே.

### 335. நற்றாய் சுரந் தணிவித்தல்.

வரமும் உலகினில் வாழ்வும் பயந்திடும், வற்றிசெத்த
மரமும் தளிர்விடும் மன்கரந் தைத்தமிழ் வான்கவிபோல்
அரமும் அயிலும் பொருவெம் பரல்மல ராகியனற்
சுரமும் குளிர்க! துளிவா னருள்க! என் தூமொழிக்கே.

### 336. தன் மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

பஞ்சூட் டியவடிப் பார்க்குமுன் சேக்கும் பதத்துடன்கார்
மஞ்சூட் டெனத்தமிழ் மாரு தளித்து மகிழ்கரந்தைச்
செஞ்சூட் டிளவனச் சேவடி யாளொரு சேயுடனே
வெஞ்சூட் டிரும்பரற் பாலையில் யாங்ஙனம் மேவினளே?

### 337. இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கல்.

சேரும் வளியிழைச் சிற்றில் சிதைக்கச் சிவந்துவிழி
நீரும் பெருக்கிநி லாச்சோ றுஞ்மல் நெடிதழுவாள்
காரும் நிழலுமில் லாவருங் கானிற் கனிதமிழ்நூல்
தேருங் கரந்தையைச் சிந்தைசெய் யாரெனச் சேர்ந்தனளே!

### 338. அச்சத் தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

கந்தழி யேயிறை என்னுங் கரந்தைநற் காளையுடன்
பந்திமி குந்தெழும் பாறுசெந் நாயுழல் பாலைவழி
மந்திம ரக்கிளை மாறுதல் காணின் மனநடுங்கிக்
கொந்துமலர்ப்புகுங் கோல்வளை எங்ஙன் குறுகினளே!

---

334: எரிவாய்—தீவாய்க்கப்பெற்ற; பெயர்ப்பொருள்—காக்கை எனவே என்னுயிரைக் காத்தலைச் செய்; வரி—பாடல்; கொடி—காகம்; கொடியாள்—கொடி போன்றவள்; படி—தன்மை; பழம்புலவர்—அறிவால் முதிர்ந்தவர்; 335; வற்றி செத்த மரம்—பட்டமரம்; தளிர்விடும்—விடச்செய்யும்; அயில்—கூர்மை; துளி—மழை; 336; பஞ்சூட்டிய—செம்பஞ்சுக்குழம்பூட்டுவதற்காக; சேக்கும்—அச்சத்தால் செவக்கும்; பதம்—பாதம்; மஞ்சூட்டுஎன—மழைபயிர்க்கு ஊட்டுதல்போல; செஞ்சூட்டு—செவந்த உச்சிக்கொண்டை; பரல்—கற்கள்; 337; சேரும்...அழுவாள்—இயல்பாக அடிக்கும் காற்றால் இழைத்த சிற்றில் சிதைய அறியாமையால் கண்ணீர் பெருக்கி அழுவாள்; 338; கந்தழி—பற்றுக்கோடற்ற நிலை: பந்தி—வரிசை; பாறு—கழுகு; அனை—அன்னை;

### 339. கண்டோர் இரக்கம்.

வனைகோல் கெடுத்தநல் லோவியன் போல வளர்த்தவளோ
டனைகே டுறத்துணை ஆயமெல் லாந்தமிழ் ஆர்கரந்தை
நினையா ரெனத்துயர் நீடமுன் நீங்கா தழுக்கறுப்பார்
வினைகோ லுளம்புரை வெஞ்சுரத் தேனிவர் மேவினதே ?

### 340. ஆற்றுத் தாயைத் தேற்றல்.

அழியாப் பிறமொழி ஆக்குங் கரந்தை அறிந்துதமிழ்
மொழியாக் கிடத்திசை முற்றுந் திரிந்து முயன்றுமுடித்
தொழியாப் புகழ்க்கரந் தைப்புல வோரென ஊர்தொறும்போய்
பிழியாக் கரும்பினைப் பெற்றன்றி மீள்கிலன் பேதுறலே.

### 341. ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல்.

ஒன்றி யிருந்துமுன் நான்குறி யாமையை உன்னியிவ்வா
றின்றெழு வாளென எட்டுணை யுந்தெரி யேன்நவமாய்த்
துன்றிய மாதவத் தீர்கரந் தைத்தமிழ்த் தோகையவள்
வன்றிற லாதபத் தான்வளர் பாலையில் வந்தனளே ?

### 342. (அ) மிக்கோர் ஏதுக் காட்டல்.

பொதியிற் பிறந்துமுச் சங்கமென் தொட்டிலிற் போர்ச்செழியர்
நிதியின் வளர்ந்தநம் தெய்வத் தமிழ்மகள் நேயமிகப்
பதியிற் சிறந்தொளிர் பைங்கரந் தைமணம் பற்றினள்முன்
விதியிற் கிடந்ததை வேறுசெய் வாரெவர் மேன்மகளே ?

### (ஆ) இதுவுமது.

கடிமலர் தீங்கனி கார்முகில் முத்தங் கறங்கருவி
செடிமரம் வான்கடல் சேர்மலைக் கென்பயன் செய்யுமிரு
அடிமலர் கன்றவுன் ஆயிழை சேர்ந்ததும் ஆங்கதுவால்
படிமிசை வாழ்வியல் என்பார் கரந்தைநற் பாவலரே.

### 343. செவிலி எயிற்றியொடு புலம்பல்.

செயிற்றியஞ் சீர்குண நூல்முத லாயவை சென்றிடினும்
பயிற்றிய முத்தமிழ் செய்வார் கரந்தைப் பதியனைய
எயிற்றி நல்லாயொரு காளைபின் இவ்வழி ஏகினளோ ?
இயற்றிய பாவையொக் கும்மென தாருயிர் ஏந்திழையே.

---

339; வனைகோல்—தூரிகை; ஆயமெல்லாம் துயர்நீட எனவும் முன்மேவி னதே எனவும் இயையும்; 340; அழியாக் கருத்தென இயையும்; புகழ் ஒழியா என மாறுக; பிழியாக்கரும்பு—தலைவி; பேதுறல்—எதிர்மறைவியங்கோள்; 341; நான்குறியாமையை—ஆராயாதிருந்தமையை; உன்னி—கருதி; நவம்—புதிது; ஆதபம்—கதிரவன் இப்பாடல் எண்ணலங்காரம்; 342; நிதியின்—செல்வம்போல்; வேற்றுப்பொருள் வைப்பணி; ஆங்கது—அத்தன்மையது; இப்பாடல் நிரனிறையணி;

### 344. செவிலி குரவொடு புலம்பல்.

" சுழலும் மனத்துடன் தாயுமிவ் வாயமும் சோர்வுகொளக்
கழலுங் கணைவிலும் தாங்குங் கரந்தையக் காளையுடன்
அழலுஞ் சுரத்தக லேல்!" எனக் கூற அறிவிழந்தாய்
நிழலும் மலருமுன் நேர்குழற் கீந்த நெடுங்குரவே!

### 345. சுவடுகண்டிரங்கல்

கமழுங் கரந்தைத் தமிழ்க்கா ரிகைமுன் கழிநெடிலாய்த்
திகழும் நெடிலடி காளை,பின் நேரடி சிந்தடிமான்,
புகழும் படியிரு சீரடிப் பாங்கர் பொசிந்தவடி
நிகழும் விலங்கடி நேராத வேடர்தம் நெட்டடியே.

### 346. செவிலி கலந்துடன்வருவோர்க் கண்டுகேட்டல்.

இமையும் விழியும் எனவரு வீர்! தமிழ் ஏழிசையும்
அமையுங் கவிதரு வார்கரந் தைப்பதிக் கார்வமுற
இமையம் எனத்துயர் எம்பால் வளர்த்தொரு ஏந்தலுடன்
அமையும் மருளுமென் தோளியு மிவ்வா றடைந்தனரே?.

### 347. கலந்துடன்வருவோர் புலம்பல்தேற்றல்.

உலம்புனை தோள்வடி வேலன்,என் ஒண்ணுதல் ஓர்ந்துரைத்த
சிலம்பணி சேவடி யாளுடன் இன்னுஞ் சிறு பொழுதில்
கலம்பகங் கோவைநற் றேனுலா மாலைக் கவின்தொடையல்
நலம்புனை செந்தமிழ் சேர்கரந் தைப்பதி நண்ணுவரே.

### 348. செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல்.

உற்றுற்று நோக்கியென் கண்வாள் இழந்தன உன்னியுனி
எற்றெற்றெ னும்முளம் இற்றிற்று கால்தளர்ந் தேங்குறுமால்
பற்றுற்று செந்தமிழ் பாடுங் கரந்தைப் பதியனையாட்
பெற்றுற்ற பேதையட் கெவ்வாறு முன்னின்று பேசுவனே.

---

344. குரவு—குராமரம். 345. காரிகைமுன் கழிநெடிலாய்த்திகழும் நெடிலடி காளை—தலைவியின் அடிச்சுவற்றிற்கு முன்பாக மிகநீண்டுதெரியும் பெரிய அடி தலைவன் அடிச்சுவடே; சிந்தடிமான்—சிறிய அடியாய்த்திகழ்வது மான்போன்ற தலைவியின் அடிச்சுவடு இருசீரடி—அழகிய இருவகை அடிகள்; பாங்கர்—பக்கம்; பொசிந்த—கலைந்த; நேராத—பகையாகிவந்த; நெட்டடி—தோற்றுேடியஅடி; அடிகள்யாவும் ஆகுபெயர்கள்—இதனுள்குறளடி முதலாக ஐந்தடிகளும் தொனியாகவந்தன; சொற்பொருள்பின்வருநிலையணி. 346. அமையும் மருளும்—மூங்கிலும் அஞ்சும். 347. ஆறு—வழி; உலம்—திரண்டகல்; பிறர்மனை நோக்காத பேராண்மையனுதலின் சிலம்பணி சேவடியாள் என்றுன் தலைவன் பின் ஒதுங்கிநின்ற காலடி நோக்கி. 348. வாள்—ஒளி; பெற்றுற்றபேதை—முன் பெற்று இப்பொழுது துன்புறும் நற்றுய்.

## 23. மீட்சி.

### 349. தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

ஆயுந் தமிழ்க்கலை அத்தனை யும்முணர்ந் தாழ்ந்ததனுள்
தோயுங் கருத்தைத் துருவும் கரந்தைநற் றுங்கரென
வேயும் பரலும் மிகுஞ்சுரந் தேடியும் வேல்விழியும்
சேயும் புகுநெறி தேர்ந்திலன் சேர்ந்தனர் சேணகரே.

### 350. தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.

தும்பிப யில்நறுஞ் சோலையி தீங்கிது தொல்கரந்தை
நம்பிய கப்பொருள் நாம்பயில் நல்லிடம் நங்கையர்கள்
பம்பி இசைநடம் கூத்துடன் பாடிப் பயிலிடமீ(து)
அம்பிய லும்விழி யாய்நம தூர்ப்பொது வம்பலமே.

### 351. தலைவி முன்செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்.

வந்தேன் வனைகழற் காளையோ டென்றுமுன் வன்பிரிவால்
நொந்தே இளைக்குமென் தோழியர்க் குத்தமிழ் நுண்ணறிவால்
செந்தேன் வடிப்பவர் வாழ்கரந் தைப்பதி சேர்ந்துவரும்
கொத்தார் மலர்க்குழ லீர்க்குமை யேலெனக் கூறுமினே!

### 352. முன்சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல்.

நினைந்தவர்க் குப்புகழ் நேருங் கரந்தை நெடுந்தமிழால்
புனைந்தநல் லோவியம் போலொரு பூங்குழல் பொற்றுகளால்
வனைந்தென மேனியோர் வார்கழ லோனுடன் வந்தனள்மான்
இனந்தனை வென்றகண் ஏந்திழை யீர்நும நின்னகர்க்கே.

### 353. பாங்கியர் கேட்டுநற்றாய்க் குணர்த்தல்.

அன்றுபெற் றாய்மக வாகஎம் அன்னாய்! அகம்வருந்தச்
சென்றுவெங் கானிடைச் செம்மல்பின் சேர்ந்து திரும்பியதால்
இன்றுபெற்றாய்மக ளாகவுன் றேகையை இன்கரந்தை
மன்றினிற் செந்தமிழ் தேர்ந்தவர் போலுள்ம் மாண்புகொளே.

---

349. துருவும்—ஆராயும்; துங்கர்—மேலோர்; வேய்—மூங்கில்; சேய்—தலைவன்; பரல்—சிறுகல். 350. நம்பி—ஒருவரை ஒருவர் விரும்பி; பம்பி—செருக்குற்று;

351. தோழியர்க்குக்கூறுமின் எனக்கூட்டுக: 352; பூங்குழல்—தலைவி;

353; அன்று மகவாகப் பெற்றவளை—இன்று (மறுபிறப்பென்னும்படி) வளர்ந்த மகளாகவே பெற்றாய் என்றார்;

**354. நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்.**

இளிசெய் மொழியுளம் எல்லாம் கவர்ந்தவவ் ஏந்தலென
தொளிசெய் மனைவருமோ அவர்தாய்மனை உற்றிடுமோ ?
களிசெய் கரந்தைத் தமிழ்நச்சி வள்ளியைக் காதலித்தின்
அளிசெய் துயர்முருகே ! உளங் கோளுரை ஆற்றுகவே.

## 24. தன்மனைவரைதல்.

**355. நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல்.**

சேவையர் காவலர் சேக்கிழார் செய்திருத் தொண்டர்தந்நூற்
கோவையின் கோளறி வார்கரந் தைப்பதி கொற்றவன் நம்
பாவையை நம்மனைப் பான்மணம் செய்யப் பரிவுகொள் நம்
தேவையைக் காளையின் தாயிடம் சென்றினிச் செப்புவமே ?

**356. செவிலிக்கு இகுளை வரைந்தமை யுணர்த்தல்.**

தனித்தமிழ் வாழ்கரந் தைத்தமிழ்ச் சங்கத் தனிவிழவில்
இனித்தெழுஞ் சும்மையைப் போற்பல இன்னியம் ஏங்குதல்உன்
பனித்தெழு வார்குழல் பாவைஎன் பாங்கியைப் பண்புடனே
குனித்தவிற் சேய்மணங் கொள்முழக் கேஎனக் கொள்ளுகவே.

**357. வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தல்.**

நடைக்குயர் செந்தமிழ் நாளும் வளர்க்கும் நறுங்கரந்தை
யிடைக்,குல மாதரும் ஈன்றவர் உள்ளமும் இன்புகொள
அடைக்கல மாகநம் ஆயிழை யாளைநல் லந்தணர்முன்
படைக்கலம் வாய்த்தவன் பாலளித் தாரெனப் பன்னினரே.

**358. தலைவன் பாங்கிக்குயான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றென்றல்.**

நறவே கமழ்குழல் நங்கைநல் லாய் ! வளர் நானிலத்தில்
அறிவே இறையெனும் அன்பார் கரந்தை அருந்தமிழ்நூற்
செறிவே எனக்கமழ் தேமொழி யாளைத் திருமணத்தால
உறவே புரிந்தவிவ் வுண்மையெல் லாநுமர்க் குற்றுரையே.

---

354; இளி — ஒருபண்: உளங்கோளுரை ஆற்றுக — தலைவன் உட்கருத்தை உரைப்பாயாக; 355; கோள்—கொள்கை; தேவை—விருப்பம்;

356; தனிவிழா—சிறந்த விழாக்கள்; சும்மை—ஆரவாரம்; ஏங்குதல்—ஒலித்தல்; உன்பாவை—என்பாங்கி என்க; 357; நடை—ஒழுக்கம்; படைக்கலம் வாய்த்தவன்—போர்வல்லான் என்றபடி; பன்னினர்—சிறப்பித்துக் கூறினர்.

358; திருமணத்தால் உறவு புரிதல் — வரைந்துகொள்ளுதல்;

### 359. பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்தல்.

செந்நா வலர்தமிழ் தேருங் கரந்தையைத் தேறலர்வாய்
வெந்நா எனச்சுரம் மேவிய காலை விளம்பியதும்
அந்நா ளறத்தொடு நின்றதும் யாரவள் அன்னையர்பால்
இந்நா ளருமணம் ஏன்றதும் முன்சென் றியம்பினளே.

## 25. உடன் போக்கிடையீடு.

### 360. நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுதல்.

மும்மைப் பயன்விளை முத்தமிழ் மொய்த்து முகிழ்கரந்தைச்
செம்மைத் திறம்விளைத் தாறுசெல் வீருயிர்ச் சேடியர்பால்
நும்மைப் பிரிந்துசெல் நோவதல் லாற்பிற நோவறியா
திம்மைப் பயன்பெற ஏகினள் நன்றென் றியம்புமினே.

### 361. தலைமகள் தன்செலவீன்றாட் குணர்த்திவிடுத்தல்.

முன்னைப் பழம்பொருள் யாவினும் முன்முகிழ் முத்தமிழ்நூல்
தன்னைப் பயில்கரந் தைப்பதி சார்ந்து தவம்புரிவீர்!
பொன்னைக் கெடுத்த வுலோபியைப் போலுளம் பொன்றிறையும்
அன்னைக் கருளுடை யான்பினர்ச் சேர்வ தறைகுவிரே.

### 362. நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

நற்பே றெனத்தமிழ் நாடுங் கரந்தைநன் நாவலர்கள்
கற்பே நிலைபெறுங் கன்னியர் பொற்பெனக் கண்டுரைத்த
சொற்பே ரிசைவளர்ப் பானுன தோகையோர் தோன்றலுடன்
கற்பா வியகடங் காவெனச் சேறலைக் கண்டனமே.

### 363. நற்றாய் அறத்தொடு நிற்றலின் தமர்பின் சேறலைத் தலைவி கண்டு தலைவற் குணர்த்தல்.

பார்வளைக் கும்புகழ்ப் பைங்கரந் தைப்பதி பாவலனே!
சீர்விளைக் குந்தமிழ் போலொளி மேவுமச் செங்கதிரைக்
கார்வளைத் தாலெனக் கைக்கணை வேல்கொடு கானலில்நம்
தேர்வளைப் பானெமர் சேர்ந்தனர் செய்வதென் தேறலனே.

---

359; தீயனபேசும் நாவாதலின் வெந்நா எனப்பட்டது; யாரவள் அவளே சென்றியம்பினள் எனத் தன்னைப் பிறர்போலக் கூறினள் தோழி;

360. மும்மைப்பயன்— மூன்றும் (அறம்பொருளின்பம்) பயனும் (வீடு) என்க; செம்மை—தவம்; சேடியர்—பெருமைமிக்க தோழியர்; 362: கன்னியர் பொற்பு—அழகு; கல் பாவியகடம்—பரல்கள் நிறைந்த பாலை; கா—சோலை.

363. கானல்—பாலை.

364. தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

நடையார் செழுந்தமிழ் நண்ணுங் கரந்தையை நச்சலர்போல்
அடையார் எனின்விடும் அம்பொன்றி னுல்விண் அடைவருனக்
குடையார் எனின்படை ஓச்சலன் வன்பரி ஊர்ந்துமலைப்
புடையார் குவனவர்ப் பின்போது வாயினிப் பூங்குழலே.

365. தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக் கவன்றுரைத்தல்.

உகைத்தோங்கு வன்பரி வாழிபல் லூழி ! உயர்ந்தநெடுந்
தொகைப்பாக்க ளுக்குரை சொன்னர் கரந்தைநற் றேன்றலினை
பகைத்தார்க்குப் பஞ்சுப் பொதிமுனர்த் தீயாய்ப் படையெடுத்து
மிகைத்தார்க்கும் வீரனை வெந்நிடச் செய்துமுன் மேவினையே.

## 26. வரைதல்.

366. சென்றேன் மீண்டுவந்து வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

மன்னிய சீர்கரந் தைத்தமிழ்ப் பாவும் மகிழிசையும்
முன்னிய தென்னவிம் மொய்குழ லாளும் முருகனுஞ்சேர்ந்
தின்னிய மார்த்திட நன்மணம் பூணும் எழிலையெலாம்
பன்னிய ஆயிரம் நாவினை இந்நாள் படைத்திலமே.

## 27. இல்வாழ்க்கை.

367. தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

ஈருயி ராயெதிர் ஏற்றேம் உடம்படு மெய்யெனவும்
சீருயர் தேமலர் போன்றேம் தொடுக்குசெந் நாரெனவும்
ஆருயிர்ப் பாங்கி ! நின் றில்லறம் பேணுதற் காக்கினை நீ ;
மாரியொக் குங்கரந் தைத்தமிழ் மங்கை ! கைம் மாறரிதே.

368. பாங்கி வாழ்த்தல்.

ஆளுந்தமிழும் அணிசேர் கரந்தையும் அன்னமகிழ்
நாளுஞ் சிறந்து நனிகாதல் மேவியிந் நானிலத்தில்
வேளும் இரதியும் நும்மையொப் பாரென விள்ளும்வகை
வாளும் மறவனும் போலிணைந் தூழிநீர் வாழியவே.

---

364. நடை—ஒழுக்கம்; நச்சல்—விரும்பல்; அடையார்—பகைவர்; உனக்குடையார்—உன்தமர். 365. உகைத்தோங்கும்—விரைந்து செல்லும். நெடுந்தொகை—அகநானூறு; மிகைத்தார்க்கும்—வென்று ஆரவாரிக்கும்; வெந்—முதுகு. 366. முருகன்—அழகன்; பன்னிய—பாராட்டிப் பேசுவதற்கு.

367. ஈருயிராய்—நிலைமொழி இறுதியும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்கள் போல; மங்கை ! எனத் தலைவியிடம் கூறினன்.

368. விள்ளுதல்—சொல்லுதல்; மறவன்—வீரன்.

**369. பாங்கி தலைவியை வரையுநா ளளவும் வருந்தாதிருந்தமை உரை என்றல்.**

ஏற்றி வணங்கினர்க் கின்னருள் செய்யும் எழிற்றமிழைப்
போற்றி வளர்கரந் தைப்பதி போற்றலர் போன்றலரைத்
தூற்றி வுரைப்பவும், துன்புசெய் மாலையுந் தூமதியும்
கூற்றி னுறுப்பவும் ஆற்றிய தெங்ஙனங் கோல்வளையே ?

**370. பெருமகளுரைத்தல்.**

சந்த நிறையுந் தமிழ்சேர் கரந்தையஞ் சாரலில்முன்
தந்த தழையும் தணந்துறை யேனென்ற தண்ணளியும்
வந்த நிலையும் வரைகுவன் என்றநின் வாய்மொழியும்
உந்த உடலும் உளமுநை யாமல் உறைந்தனனே.

**371. தலைவனைப் பாங்கி வரையு நாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்.**

பாண்பாவு செந்தமிழ் பாடுங் கரந்தைநற் பாவல ! வுன்
கண்பாவை போல்வடிக் கண்ணியைக் கண்டு களித்துயிர்தோய்
நண்பாவை, இம்மண நாள்வரைக் கும்பிற நாடுபிரிந்
தெண்பாவு துன்புடன் எவ்வாறு நோற்றங் கிருந்தனையே ?

**372. மன்றல் மனைவரு செவிலிக்கிகுளை அன்புற வுணர்த்தல்.**

அருள்கொண்ட நோக்கநீர் ஆட்டி,அன் னுய் ! வளர் அன்புநிறை
பொருள்கொண்ட சொல்லருத் திச்சுவை நாளும் புகுத்திடலால்
இருள்கொண்ட கூந்தலும் ஏரார் கரந்தையவ் வேந்தலும்நாள்
உருள்கொண்ட திங்களோ டிருதுவும் ஓரார் உறைகுவரே.

**373. பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக் குணர்த்தல்.**

பொருந்தும் வகையிற் பொருளுக் கிலக்கணம் பூண்டுலகந்
திருந்தும் வகைசொலும் செந்தமி ழாற்பணி செய்கரந்தை
இருந்துன் மகளும் இறைமக னும்புரி இல்லறம்நல்
விருந்தும் உறவும் வியந்துடன் வாழ்த்த விளங்கிடுமே.

---

369; ஏற்றி—புகழ்ந்து; போற்றலர்—பகைவர்; தூமதி—முழுமதி; கூற்றின்—யமனைப்போலும்; 370: சாரல்—மலைப்பக்கம்; தணந்து—பிரிந்து; வந்தநிலை—குறியிடத்துத் தவருமல் வந்தநிலை; வாய்—உண்மை; உந்த—உள்ளத்தை ஊக்க; 371: பண்பாவு—இன்னேசை விரவிய; வடி—மாவடுபோன்ற; நண்பாவை—உறவாகுவை; எண்பாவு—எண்ணத்தில் விரவுகின்ற; நோற்று—பொறுத்து; 372: நோக்கம்நீர்—நோக்கிமாகிய புனலால் நீராட்டி; உருள் கொண்ட—கழியும்படியான; 373. கரந்தை இருந்து—கரந்தையின்கண் இருந்து;

**374. மணமனை சென்றுவந்த செவிலி தலைமகள் கற்பு நற்றாய்க்குணர்த்தல்.**

கருதின் மழைபெயும் காற்றேவல் செய்யும் கனலுமதி
பருதி பனிதரும் பைந்தமிழ் சேர்கரந் தைப்பதியில்
வருதி எனமலை வந்திடுங் கற்பினின் மாமகள்பால்
தருதி இடமெனச் சால்புகள் யாவுந் தவஞ்செயுமே.

**375. செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத்தன்மை உணர்த்தல்.**

அட்டிற் புகுந்துண வாக்கும் அழகும்நின் ஆய்மகள்கோன்
வட்டில் நிறைத்துணச் செய்யழ கும்மனை வந்தவர்க்கூண்
இட்டிற் புரியழ குங்கரந் தைத்தமிழ் ஏந்தலுடன்
கட்டிற் புகுமழ குஞ்சொலச் சொற்களைக் காண்கிலனே.

**376. செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்.**

திருவள் ளுவர்மகிழ் தீந்தமிழ் நாளுந் திசைநிறைப்போர்
மருவக் கரந்தைநம் மன்னவ னுந்திரு மாமகளும்
ஒருவர்க் கொருவர் உறைவிட மாக உறங்குதலால்
துருவத் துறினுமல் தோன்றலின் தேர்மனைத் தோன்றிடுமே.

## 28. பரத்தையிற் பிரிவு.

**377. காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேதுவிதாம் அவ்விறைக் கென்றல்.**

அன்புல விக்களி மேவியில் லோம்பிய அண்ணல்தமிழ்
இன்புல விக்கமழ் ஏழிசையுந் தரும் ஏர்கரந்தை
நன்புல விக்கெனும் சொல்லியர் நாடகம் நாடினனுல்
வன்புல விக்கொரு ஏதுவி தாம்மனை வாள்வழிக்கே.

**378. தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்.**

தாலஞ் சிறப்புறத் தண்டமிழ் தாங்கினர் சார்கரந்தைச்
சீலம் புரிந்தவர் செய்கையி னுற்கவின் சேருடலும்
நீலம் படர்ந்துகண் நீலநீர் கான்றிதழ் நெட்டிமைகள்
ஆலம் புரையிர வுங்குவி யாதினி ஆவதென்னே?

---

374. கனலுமதி—மதிநெருப்பாக்கும்; பனி—குளிர்ச்சி; வருதிஎன—வருவாயாக என்றால். 375. அட்டில்—மடைப்பள்ளி; வட்டில்—உண்கலம்; இட்டு இல் புரியும்—அளித்து இல்லறம் செய்யும். 376. துருவத்துறினும்—வட,தென் துருவங்களுக்குத் (தலைவன்தேர்) சென்றிருந்தாலும்; அல்—இரவில்.

377. அன்பு உலவி; நன்-புல-இக்கு—நல்லவயலிடத்தே விளைந்த கரும்பு: வன்-புலவிக்கு—வலிய ஊடலுக்கு; நாடகம்—கூத்து; (நாடுகின்ற அகம்) 378. தாலம்—நாக்கு; செய்கை—பரத்தையிற்பிரிவு; நீலம்—பசப்பு; ஆலம்—நஞ்சு;

### 379. ஈங்கிது வென்னெனப் பாங்கி வினுதல்.

கூடலிற் தெய்வதங் கூறுந் தமிழ்க்குரை கூட்டுவித்த
பாடலிற் சான்றநக் கீரனின் பாமகிழ் பைங்கரந்தைத்
தோடவிழ் தாரினன் தோண்மகிழ் வாய்; உளந் துன்புடனீ
வாடலின் மூலமென் னேவுரைப் பாயினி வார்குழலே.

### 380. (அ) இறைமகன் புறத்தொழுக் கிறைமகள் உணர்த்தல்.

கடலிற் பரந்தவென் காதலைக் கண்டுங் கனிந்திலையேல்
மடலிற் சிறந்துனே யான்மணப் பேனென்ற, மைந்துபுரி
அடலிற் சிறந்த,சொல் ஆய்கரந் தைத்தமிழ் அன்னவரின்
றுடலிற் சிறந்தவர்க் கேயுளம் போக்கினர் ஒண்டொடியே.

### (ஆ) இதுவுமது.

வாய்மகிழ் தேமாங் கனியுண் கடுவன் வளர்கமுகின்
காய்மகிழ்ந் துண்ணுபு கைவிடுங் காவிற் கரந்தைவளர்
தூய்தமிழ் தேர்ந்தவர் சொற்செயல் ஒன்றிலர் தோழி! யயல்
போய்மகிழ் வாரிசை நாடகங் காணுமோர் பொய்வளர்த்தே.

### 381. தலைவியைப் பாங்கி கழறல்.

வையத் துயர்திணை வந்தவப் போதே மலர்ந்ததமிழ்
உய்யத் தருபவர் ஓங்குங் கரந்தை உடையவர்பால்
ஐயப் படுமுரை ஆடலும் உள்ளத் தழுங்குதலும்
நையப் பழகலும் நற்குடி மாதர் நடையலவே.

### 382. தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டழுங்கிக் கூறல்.

குங்குமம் பூசிநற் கோசிகங் கட்டிக் கொடிப்பவளத்
தொங்கல ணிந்துடன் வெட்சியுஞ் சூடியித் தோழிசெலும்
கொங்கலர் செந்தமிழ் கூருங் கரந்தையிற் கோமகளூர்
பொங்கலர் சேர்த்திடப் பூமக ளாயினள் போன்மினிதே.

### 383. பரத்தையர் கண்டு பழித்தல்.

ஆரிய மாமொழிச் செய்வதற் கந்நாள் அகமகிழ
வாரிவ ழங்கிய வண்டமிழ் தேர்கரந் தைப்பிரிந்து
சோரி குளித்தெனத் தோற்றுமித் தோழியைத் தூய்மையிலார்
சேரிவ ரப்புறச் செம்மைசெய் தாள்குலச் சேயிழையே.

---

379. தெய்வதங்கூறுந் தமிழ்—இறையனுர்களவியல். 380. மைந்து—வலிமை. அடல்—போர்; உடலிற் சிறந்தவர்—பரத்தையர். (ஆ) வாய்மகிழ்—இப்பாடல் உள்ளுறை. 381. உயர்திணை—மக்கள்; தமிழைப் பிறர் உய்யுமாறு தருபவர் என்க. நைய—உளம்நோக. 382. கோசிகம்—செம்பட்டு; தோழி செல்லும் ஆதலின் ஊர் அலர் சேர்த்திடக் கோமகள் பூமகள் ஆயினள்போலும் என்க.

384. பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைவன் வரவுகண்டுவந்து வாயில்கள் மொழிதல்.

செங்கதிர் போன்றசெந் நாவலர் சேர்நெடுஞ் சீர்கரந்தைப்
பொங்குறு செந்தமிழ்ச் செம்மையிற் றேர்ந்தநற் சேயனையான்
செங்கழு நீர்செவப் பாடையிற் ஞேழிமுன் சேர்ந்ததனுல்
மங்கையின் பாலுல கோரியல் காக்கவில் வந்தனனே.

385. (அ) வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தல்.

இன்னுசெய் தார்க்கும் இனிதாற்றல் சால்பென் றியம்புதமிழ்
முன்னே யறிந்தவென் மொய்குழ லாய்! முன் முறைபிறழ்ந்த
மன்னுய வர்மனே வந்தனர் ஏற்றருள் மாட்சியினுல்
நன்னு வலந்தீ வரிவையர் சீர்த்தியை நாட்டுகவே.

(ஆ) இதுவுமது.

பிழைத்தார்ப் பிழைபொறுத் திங்கவர் வாழ்விற் பிழைத்துயர
தெழித்தார் கடலமிழ் தம்புரை செந்தமிழ்ச் செப்பும்அருள்
தழைத்தார் கரந்தையின் தையல்நல் லாய்! முன் தவறுசிறி
திழைத்தார் எனினுநம் மிற்புகுந் தார்மகிழ்ந் தேன்றுகொளே.

386. தவலனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

ஆசு முதற்கவி யாவினுந் தேர்ந்தவர் ஆள்கரந்தைத்
தேசு விளங்கிய செம்மலைக் காணுமுன் சிந்தையெலாம்
மாசு கணித்துளம் மாழ்கிடச் செய்யுமம் மன்னர்வரக்
கூசு முரைகுழை யுங்கையுங் கூம்புமிக் கொள்கையென்னே!

387. புணர்ச்சியின் மகிழ்தல்.

நீர்நிலை புக்குநெ ருப்பிடை நின்றுவன் நெஞ்சுடனே
ஆர்புல னைந்தடக் கிச்சுவை உண்டி அகற்றிதவச்
சீர்நிலை யுற்றுதி லைக்குமின் பந்தமிழ் தேர்கரந்தை
ஏர்நிலை யுற்றவள் ஈயுமின் பந்தனக் கீடிலையே.

388. வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைமகன்வாயில்வேண்டல்.

தென்மொழி யாவினுக் குந்தமிழ் தாயெனத் தேர்ந்தவர்சொல்
பொன்மொழி வாழ்கரந் தைப்பதி வாழ்மனைப் பூங்கொடியாள்
தன்மொழி என்மன வாடல் தணித்திடும் தண்ணளிசேர்
உன்மொழி அன்னவளுடல் தணித்திடும் ஒண்டொடியே.

---

383. ஆரியம்—சமக்கிருதம்; சோரி—இரத்தம்; தூய்மையிலார்—பரத்தையர்.
384. உலகியல்—பூப்புநீராடிய காலத்துப் பிரியாமை. 385. நல்ல நாவலந்தீவில் அரிவையர் கற்புடையார் என்பதனை நாட்டுக என்ருள்; தெழித்தார் கடல்--ஆரவாரத்தால்நிரம்பும்கடல்; கரந்தையின்-கரந்தையைப்போன்ற 386 மாசுகணித்து-குற்றத்தையே எண்ணி; 387. ஏர்நிலை—அழகுத்தன்மை. 388. மனைப்பூங்கொடி—தலைவி; வாடல்—துன்பம். 389. குலஞ்செய—குலப்பெருமையை வளர்க்க.

**389. தலைவி நெய்யாடி யதிகுளை சாற்றல்.**

திங்கள் இளஞ்சுடர் ஈன்றெனத் தேமொழி சீர்வளரும்
உங்கள் குலஞ்செய ஓர்மக வீன்றுநெய் யாடினள்சீர்
தங்கும் மடக்கொடி தாயென வாயினள் தண்கரந்தைச்
சங்கத் தமிழ்தெரிந் தாயினி என்னவுன் தண்ணளியே ?

**390. தலைவன் தன்மனத்துவகை கூர்தல்.**

எனைவிளக் காமதித் தில்லறம் பேணியென் னுள்ளுறையும்
மனைவிளக் காகிய மாமகள், பூவினில் வண்டமிழ்நூல்
தனைவிளக் காயெணும் தண்கரந் தைப்பதி தாங்கஒரு
வனைவிளக் காத்தரும் என்னிலென் வாழ்வினி மாண்பினதே.

**391. தலைவிக்கவன்வரல் பாங்கி சாற்றல்.**

வீழுடற் பேணுபு வெம்மையிற் பன்மொழி வேட்டபினர்
வாழுநற் பேருடு வான்றரும் வண்டமிழ் மாண்புணர்ந்து
சூழுநர்ப் போற்கரந் தைப்பதி தோன்றலர் தோன்றினர்நம்
கூழுயர் தன்மனைக் கோன்பிறந் தானெனக் கோல்வளையே.

**392. தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்.**

அறத்தெழு நூல்பயில் வார்கரந் தைப்பதிக் கன்பிலர்போல்
புறத்தெழு வீரினி யேன்புகுந் தீர் ? மகப் புல்லியுணும்
திறத்தெழு மார்பெனத் தேறலிர் ; தீட்டுமச் சேயிழையார்
நிறத்தெழு தாரநெ டுங்குறி மாயுமென் நீங்குகவே

**393. தலைமகள் பாணன்வாயில் மறுத்தல்.**

வாயில் கருதியெம் வாயில் நெருங்குமுன் வாயிலுரை
தீயில் உகுக்குநெய் யாமினிப் பாண ! செல் செந்தமிழ்த்தாய்
கோயில் வளர்கரந் தைப்பதி கூடலர் கூடியவர்
காயின் வருந்துயர் காணினெந் தோழியும் கல்லிடுமே.

**394. வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.**

திசையாற் புகழ்கரந் தைப்பதி மேவும் செழுந்தமிழ்நூல்
நசையாற் பயின்றவர் நல்லற ஆண்மையை நாளுமென்றன்
இசையாற் பரப்புமென் கோளுணர்ந் தாலனை இப்பொழுதிவ்
வசையாற் கடியலிர் வாங்கலிர் கல்லும் மலர்க்கையிலே.

---

390. எணும்—எண்ணும்; ஒருவனை—ஒப்பற்ற ஆண்மகனை விளக்குப்போல பெற்றுள் ஆதலின் என்க. 391. வீழுடல்—அழியும் உடம்பு; விரும்பப்படும் உடம்பு. வெம்மை—விருப்புமாம்; வான்—மறுமையின்பம்; தோன்றலர்—தலைவர்; வாராதவர். கூழ்—செல்வம். 392. புறம்—பரத்தைமை; மகப்புல்லியுணும் திறத்தெழுமார்பு—மகவு பற்றியுண்ணும் பால்சொரி மார்பு; நிறம்—மார்பு; ஆரம்—சந்தனம். 393. வாயில்—தூது. வாயில்—மனைமுன்றில்; வாயிலுரை—பொய்யுரை; கூடலர்—தலைவர். பரத்தையருமாம்; கூடியவர்—மணந்தவர்; காயின்—வெகுண்டால்; துயர்வரும் என்றும்; தோழிகாணின் என்றும் மாறுக. இடும்—எறியும்.

395. விறலி வாயில் மறுத்தல்.

புகத்தேன் அளிக்குங் கரந்தையிற் செந்தமிழ் போற்றலர்என்
அகத்தே கொளாதில் லகத்தே விடுத்தவர் அன்புரைத்தாய்
அகத்தே இலாத உணர்வினை ஆகத் தழகுபெற
மிகுத்தே நடித்துக் கலையைவிற் றுண்ணும் விறலியன்றே?

396. விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன்மகிழ்தல்.

பிணிக்கு மருந்து பிறவாம் அறியாப் பிணியதனைத்
தணிக்கு மருந்து கரந்தையிற் செந்தமிழ், தன்னடையார்ப்
பணிக்கு மருந்திங் கினியசொல் ஊடற் பகைசிவந்த
கணிக்கு மருந்து விருந்தெனக் கண்டு களித்தனமே.

397. விருந்துகண்டொளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச் சீறேல் என்றவள் சீறடி தொழுதல்.

மிறையே புரிந்தவ ராயினும் மெல்லடி மேவினர்தம்
குறையே நினையலர் கூருங் கரந்தையிற் கோமகளே!
பொறையே மடந்தையர் பூணணி யாவினும் பொற்புடைத்தாம்
முறையோ புலவியை ஈண்டுயிர் தேய்ந்திட மூட்டுவதே?

398. இஃதெங்கையர்காணின் நன்றன்றென்றல்.

படிப்பதும் வள்ளுவன் பாநலந் தேர்வதும் பைந்தமிழ்த்தேன்
குடிப்பதும் நோன்பெனக்கொள்வார் கரந்தையிற் கோமகன்செய்
நடிப்பென ஓர்கிலர் எங்கையர் காணினுள் நாணுவர்,கால்
பிடிப்பதும் நல்லுரை பேசுவ தும்வீண் பெரும்பிழையே.

399. அங்கவர் யாரையும் அறியேன் என்றல்.

எண்ணினும் வாயான் இயம்பினும் கேட்கினும் இன்பறிவு
கண்ணுறும் சீர்கரந் தைத்தமிழ்க் காவியங் கண்டவர்கள்
தண்ணுமை போலவுள் ளீடமை யாதநூற் சார்குவரோ?
பண்ணினும் இன்மொழிப் பாவைநின் னல்லது பார்த்திலனே.

---

394. திசையால்—திசைதொறும். பயின்றவர்—தலைவர்; கோள்—கொள்கை; கடிதல்—ஓட்டுதல்; வாங்கலிர்—எடுத்தெறியமாட்டீர்; 395 தேள்—இன்பம். செந்தமிழ் — செம்மையுரைக்கும் தமிழ்; அகம்—உள்ளம்; ஆகம்—உடம்பின் வாயிலாக; 396. அடையார்—பகைவர்; பகைசிவந்த—பகையால் வெகுண்ட; கணி-கண்ணி (தலைவி) 397. மிறை-குற்றம்; கூரும்-மிகுந்திருக்கும்; பெட்பு—அழகு; புலவி-ஊடலின் முதிர்ச்சி. 398. எங்கை-என்கணவனுக்கு என் பின் வந்தவள் (பரத்தை) 399. இன்பறிவு-செவ்வெண்; கண்ணுறும்-பொருந்தும்; தண்ணுமை—தோற்கருவி; நின்னலது பார்த்திலன்—நின்னையல்லாமல் வேறு யாரையும் பார்த்திலன்.

**400. (அ) காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.**

ஐயந் தவிர்கரந் தைத்தமிழ் அள்ளி அருந்துநர்போல்
கையில் வளைத்திரு கண்ணுற் பருகிக் களித்தனள்உன்
மெய்யிற் பொலிவுறு பாலனை, யவ்வழி மேவொருத்தித்
"தையல்! நினக்குமச் சேய்மக னு" மெனச் சாற்றினளே.

**(ஆ) இதுவுமது.**

பொருவிற் செழுந்தமிழ் போற்றுங் கரந்தையிற் புக்கொருத்தி
தெருவிற் றனித்துபொற் றேரை உருட்டுஞ் சிறுவனையுன்
உருவொப் பறிந்தெடுத் தாளவ ளென்றும் உணர்ந்திலனய்
வெருவச் சிலரிவ ளும்மனை என்று விளம்பினரே.

**401. தலைமகளைப் பாங்கி புலவி தணிவித்தல்.**

கழுவும் பிழையிலை யாயினும் உள்ளங் கசிந்துவரின்
தழுவுங் கரந்தையிற் றண்டமிழ் நூன்முறை சாற்றுகின்ற
வழுவும் அமைதியும் ஓர்ந்திலை யோபெரு மானடிகள்
தொழவும் புலவியைத் தோற்றிடி னும்பிழை தொல்குடிக்கே.

**402. தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல்.**

நூலே விழியென நோக்குங் கரந்தையில் நோகுநெஞ்சே!
காலே விழியெனக் காரிருள் வாய்பல கால்நடந்து
வேலே துணையென மீண்டவப் போது விருந்தளித்த
சேலே விழியெனும் செந்திரு வல்லளிச் சேயிழையே.

**403. பாங்கி அன்பிலை கொடியை எனத் தலைவனை இகழ்தல்.**

இன்புறும் பாமகிழ்ந் தேத்துங் கரந்தையில் இல்லறத்தால்
அன்புறும் போதயல் போயினிர், அன்றிவள் ஆகமெலாம்
பொன்பெறும் என்றனிர் இன்றிவள் மேற்பழி போடுகின்றீர்
தன்புறந் தானறி யாருரை செய்வது தாமெளிதே.

**404. ஆயிழை மைந்தனும் ஆற்றுமையும் வாயிலாக வரவெதிர் கோடல்.**

குழலைப் பழித்தென துள்ளங் குழைக்கும் குழவியின்தேன்
மழலைக் கிளவியை வாயிற் புகுத்தியென் வன்புலவி
அழலைத் தவிர்த்தனிர் அன்பாற் கரந்தை யருந்தமிழ்த்தாய்க்
கழலைப் பணிந்தவர் கல்லா திருப்பதெக் காவியமே?

---

400. மெய்யிற் பொலிவுறுபாலன்–உடற்பொலிவால் உன்னையே ஒக்கும் மகன்; மேவொருத்தி–அவ்விடம்வந்த வேருெரு பெண்; இவளும் ஆ(ன்)னை (இவள் உம் மனை என்பதும் காண்க.) 401. கழுவும்பிழை–கழுவாய் உள்ள பிழைகள். பிழை யுடையதாயினும் சான்ருேர்க்கொப்ப முடிந்ததைத் தழுவிக்கொள்ளுதல் வழுவமைதி எனப்படும். 402; காலேவிழிஎன–இருளில் காலால்தடவி வரும்நிலை; விருந்து–இன்பம்; 403; புறம்–முதுகு; 404; வாயிற்புகுத்தி–தூதாகவிட்டு;

**405. மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடிணங்கிய மைந்தனை இனிதிற் புகழ்தல்.**

தாடளைத் தான்பரித் தேரொடு தன்னையும், தண்டமிழால்
நாடளிக் குங்கரந் தைத்தலை வன்வர நன்குணர்ந்தேன்
வீடளிக் குந்தலை முத்தித ரும்புகழ் வீறளிக்கும்
பீடளிக் கும்மகப் பேறெனும் வாய்மையைப் பெண்ணணங்கே.

**406. தலைவி தலைவனைப் புகழ்தல்.**

மரையிலை நீரென வண்டமிழ் நின்றவ் வடமொழியை
உரையிடைக் கொள்ளுறும் உண்மையைப் போல உளத்தளவில்
புரையிலை காதலும் பொய்யிலை போலும் புரிகுழலாய் !
கரையிலை அன்பினுக் குங்கரந் தைப்பதி காவலர்க்கே.

**407. பாங்கி தலைமகளைப் புகழ்தல்.**

அகழ்வார்ப் பொறுக்குமிம் மாநில மாயினும் ஆழமிகின்
நிகழ்நீர்ப் பெருக்கின் நிலைதடுக் கும்,தமிழ் நேர்கரந்தைப்
புகழ்வார்க் கருள்தலை வன்புரி தீமை பொறுத்தருளும்
திகழ்வார் குழலியின் கற்பினுக் கொப்பெது செப்புதற்கே ?

## 29. கல்வியிற் பிரிவு.

**408. (அ) கல்விப் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல்.**

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி ஐந்தும் இனிதுணர்ந்து
பழுத்தவ ராயினும் பைங்கரந் தைத்தமிழ்ப் பாவலர்கள்
கழுத்தள வென்பரக் கல்வியை யார்கரை கண்டவரென்(று)
இழுத்துரை யாடினர் எண்ணமென் னேவவர்க் கேந்திழையே ?

**(ஆ) இதுவுமது.**

பயன்றரு செந்தமிழ்ப் பண்பொடு சீர்த்தியைப் பாரறிய
நயன்பெறக் காட்டலும் நண்பொடு வாழ்பிற நாட்டவரின்
பயன்றரு நற்கருத் தைக்கரந் தைத்தமிழ்ப் பாற்செயலும்
முயன்றில ரேல்கடன் முற்றிலர் என்றனர் மொய்குழலே.

**409. தலைமகன் கார்ப்பருவங்கண்டு புலம்பல்**

கார்போல் கரந்தையின் முத்தமிழ்க் காட்சியைக் காவலரிப்
பார்மேல் வழங்கிடச் சென்றமை கண்டவிப் பாவிமுகில்
நீர்மேல் சுமந்துமின் வாளொடு நேர்ந்திடி நெட்டுயிர்த்திவ்
ஊர்மேல் புகுந்தென தின்னுயிர் உண்ண விண்ணோங்கியதே.

---

405; தாள்தளைத்தான்; 406; மரை—தாமரை; புரை—குற்றம்; 407. பொறையிற் சிறந்த நிலமும் ஆழத்தோண்டினல் தன்கண்ணீரைப் பெருக்கித் தடுக்கும்;
408. இழுத்துரை—குறிப்புரை. 409; காட்சி—அறிவு; முகில்—மேகம்;

### 410. தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்.

செய்யுங் கடமையைச் செம்மல் புரிந்தருள் சேர்கரந்தை
உய்யும் படிவரும் உண்மையை ஓர்ந்த உயர்நிலைவான்
கொய்யும் மலர்மிகக் கோடையின்வெப்ப குளிரவிண்ணீர்
பெய்யும் எனவறி யாயிதைக் காரெனப் பேசுவதே?

## 30. காவற் பிரிவு.

### 411. தோழி தலைவன் காவற் பிரிவு தலைமகட்குணர்த்தல்.

பாவலர் பாவலர் பைங்கரந் தைத்தமிழ் பான்மொழியே
காவலர் காவலர் என்பது காட்டுதல் கண்ணி,மகிழ்
நாவலர் நாவலம் பூம்பொழில் போற்றியிந் நன்மரங்கள்
தூவலர் தூவுமுன் னேவரு வேனெனச் சொற்றனரே.

### 312. தலைமகள் கூதிர்ப் பருவங்கண்டு வருந்தல்.

நீர்காவல் கொண்டவர் நீடுங் கரந்தை நெறிகுழலாய்!
ஊர்காவ லோவிடேன் உளங்காவல் கொண்டிடேன் உயிர்காவலர்
தார்காவல் கொண்டநன் மார்பினர் என்று தமியளெனைப்
பீர்காவல் கொண்டபின் பேய்வாடை வந்து பிணித்திடுமே.

### 413. தோழியாற்றுவித்தல்.

பாடலி மைப்பவர் வாழ்கரந் தைப்பதி பாவை! விரல்
கூடலி ழைத்துளம் கூம்புதல் நீங்குக! கூதிரென
வாடலி மைக்குமிவ் வன்பொழு தோர்ந்தநம் வள்ளலினி
நீடலி மைக்கிலர் இன்றுநெ ருங்குவர் நீணகரே.

## 31. தூதிற் பிரிவு.

### 414. தூதிற் பிரிவு தலைமகனு னுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல்.

தீதுபு ரிந்தவர்க் கும்,தமிழ்ச் செம்மையைத் தேறலராய்
வாதுபு ரிந்தவர்க் கும்,மதி மாட்சிசெய் வண்கரந்தைத்
தாதுபு ரிந்தல ருங்குழ லாய்! நம் தலைவரருள்
தூதுபு ரிந்தனர் தோற்பினும் வெல்லினும் துன்பமென்றே.

### 415. தலைமகள் முன்பனிப் பருவங்கண்டு வருந்தல்.

தெற்கும் வடக்கும் திசைமுரண் அன்றியும் செந்தமிழர்
சொற்கும் பொருட்கும் துயர்தந்த தம்மொழி தொல்லைமிக
நிற்கும் பனியும் நெடுவாடை யேபகை நீங்கவருள்
கற்கும் கரந்தையர் கோனெனைக் காப்பதைக் கற்றிலரே?

---

410; செம்மல்–தலைவன்; 411; பா வலர்; பாஅலர்–காவல்அர் காவலர்; போற்றி–காத்து; 412 நீர்–நீர்மை; உயிர்—காவலர்-உயிரைக் காவாதவர்; பீர்—பசப்பு.

### 416. தோழி ஆற்றுவித்தல்.

திகைதணிக் குந்தமிழ் தேறல ராய்ச்செருக் குற்றவர்தம்
மிகைதணிக் குங்கரந் தைப்பதி போலுயிர் மெல்லியல்! முன்
பகைதணிக் கும்வினைப் பண்பொடு சென்றவர் பண்வளருன்
நகைதணிப் பாரலர் நல்வலத் தேரொடும் நண்ணினரே.

## 32. துணைவயிற் பிரிவு.

### 417. துணைவயிற் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தல்.

அளந்தந்தம் நோக்குதற் காற்ருத ஆற்றலர் அன்புநிறை
உளந்தந்த நண்பினோர் வேந்துமுன் வேண்ட உறுதுணையாய்க்
களந்தந்து வெல்லுதல் கண்ணிநங் காவலர் கல்வியெனும்
வளந்தந்து வாழ்கரந் தைப்பதி நீங்கினர் வாணுதலே,

### 418. தலைமகள் பின்பனிப் பருவங்கண்டு வருந்தல்.

திக்கற் றவர்க்கருள் செய்யுங் கரந்தையிற் செந்தமிழ்நூல்
புக்குத் திளைத்தவர் போர்த்துணை யாயினர் பூண்டநட்பை
மிக்குக் கணித்தவர், மெல்லியல்! என்னுயிர் வேண்டியிருள்
கக்கும் மறலியிப் பின்பனி என்பதைக் காண்கிலரே.

### 419. தோழி ஆற்றுவித்தல்.

செருப்புக் குதவி செயத்துணிந் தன்பிற் சிறந்தவர்செந்
நெருப்புற் றிரும்பனி அற்சிரம் வந்து நெருக்கிமதன்
கருப்புற் றிடுமலர் வாளியுன் ஆவி கவருமுனர்
விருப்புற் றிருங்கரந் தைப்பதி மேவினர் மெல்லியலே.

## 33. பொருள்வயிற் பிரிவு.

### 420. பொருள்வயிற் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தல்,

திறத்தாற் செழுந்தமிழ் செய்யுங் கரந்தையிற் றேமொழிநண்
புறத்தா னொழுகியிங் கோருயி ரானவர் ஓங்குலகில்
அறத்தால் வருவதை இன்பமென் ருலதை ஆக்குதற்குப்
புறத்தே நிகழ்பொருள் வேண்டுமென் ருரது பொய்யலவே?

---

413. கூடல்–தரையில் வட்டமாகவரைந்துகாணும் ஒருகுறி; நீடல்–காலந்தாழ்த்தல். 414 வாது–சொற்போர்; தாது–தேன்: 415: வாடை–வடகிலிக்குந்துவரும் காற்று: 416: நகை–மகிழ்ச்சி; நண்ணினர்–வந்தார்; திகை–மருட்சி; மிகை–குற்றம்

418: கணித்தவர்–கணக்கிட்டவர்; மறலி–யமன்; 419: செரு–போர்; அற்சிரம்–பின் பனி; கருப்பு—கரும்பு; வாளி–அம்பு.

**421. தலைமகள் இளவேனிற் பருவங்கண்டு வருந்தல்.**

கையாற் களிறு மரம்பிளந்தெய்க்குங் கடுங்கடத்தே
பொய்யாப் பொருள்செயும் பூட்கைய ராய்க்கரந் தைத்தலைவர்
மெய்யாப் புகுந்தனர் வேம்பு பழந்தரும் வேனிலெனை
நெய்யா உருக்குதல் யார்சென் றவர்க்கு நிகழ்த்துவரே?

**422. தோழி ஆற்றுவித்தல்.**

வாடினர்க் கீயவும் மாண்புடன் வாழவும் வான்பொருளைத்
தேடினர் சென்றசெ ழுங்கரந் தைத்தமிழ்ச் செம்மலுனை
நாடிநம் மூர்வரல் சாற்றுமிவ் வேனிலும் நாண்மலர்வாய்
ஆடிநம் பால்வரும் தென்றலும் ஆயிழை ஆற்றுகவே.

**423. தலைமகன் தலைவி உருவு வெளிப்பாடு கண்டு சொல்லல்.**

கொடிமலர்க் கொம்பினை வேயொடு கூட்டிய பாசறையுள்
வடிகணை வாள்கிடு காயவெல் லாமிசை வாழ்கரந்தை
முடியிடைக் கொள்நறு முத்தமிழ் போலெழில் மொய்த்துவளர்
துடியிடை யேயெனத் தோற்றியிக் கானிலும் தோன்றிடுமே.

**424. பாசறை முற்றிமீண்டூர்வயின் வந்த தலைவன் பாகற்குச் சொல்லல்.**

சீர்வந்த செந்தமிழ் சேர்கரந் தைப்பதி தேர்வலவா!
தேர்வந்த தேறுக் வென்றசொல் லென்செவிச் சேருமுனர்
ஊர்வந்த தென்றனை மாவந்த தோவுளம் ஓடியதோ
நேர்வந்த கானமும் காணலன் வாழிய நீடுநின்றே!

**425. தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டுசொல்லல்.**

விழுத்தவத் தாற்பெறும் மெல்லிய லோடகம் மேவினன்யான்
எழுத்தொடு சொற்பொருள் இன்பம் பொருளறம் ஏன்றுநெறி
பழுத்துயர் சீர்கரந் தைத்தமிழ் போலவிப் பார்மகிழச்
செழித்தினித் திங்கள்மும் மாரியும் பெய்க திருமுகிலே!

**வாழ்த்து.**

வாழி! கரந்தைத் தமிழ்ச்சங்கம் வண்ணமுற
வாழி! அதன் வாய்மைச் சிறப்புரைக்கும் கோவையொடு
வாழி! தமிழ்நாடு வான்புலவர் வாழ்தமிழர்
வாழி! தமிழ் பாடும் வாய்.

(கரந்தைக் கோவை முற்றியது.)

---

421, எய்க்கும் — இளைக்கும்; துடியிடை — தலைமகள்; கடம் — பாலைநிலம்; பூட்கை–கொள்கை: 422. செம்மல்–தலைவன்; 423: கிடுகு–கேடகம்; 424; மா—குதிரை; 425; விழு—மேலான; மாரி—மழை:


ச. பாலசுந்தர